
# முதல் குடியரசுத் தலைவர்



கழக
வெளியீடு

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

கழக வெளியீடு: அ௫கூ

# முதல் குடியரசுத் தலைவர்

ஆசிரியர்:
திருக்குறள்மணி, வித்துவான், செஞ்சொற்புலவர்,
**திரு. அ. க. நவநீதகிருட்டிணன்**
தமிழாசிரியர்.
ம. தி. தா. இந்துக்கலாசாலை,
திருநெல்வேலி.

[Approved by the Madras Text-Book Committee, for class use, non-detailed study, for Form IV. vide page 5, Fort St. George gazette supplement to the list of Approved books for 1957, dated 29-5-1957.]

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: Oct., 1956.
Reprints : May, 1957; June, 1957, Aug., 1957.

# MUTHAL KUDIYARASUTH THALAIVAR

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORK PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.
1/140, BROADWAY, MADRAS - 1

*Head Office* :

98, EAST CAR STREET, TIRUNELVELI

(Paper used D/Crown 24 lbs white printing)

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.—C. 3200

# பதிப்புரை

உலகப் பெருநாடுகளில் தலைசிறந்தது நம் இந்திய நாடு. இந் நாட்டில் கங்கைப் பயனும் காவிரி யொழுக்கமும் வையைப் பேரியாற்றின் மாறு வளனும் செழிப்புற உயிர்களைப் புரந்துயர்த்துவனவாம்.

இத்தகைய வண்மை சான்ற இந்திய நாடு வடக்கே பேரிமயமலையையும் தெற்கே பொதியின் மலையையும் கொண்டு அளக்கலாகாப் பெருமையின் உரிமை கொண்டது. இந் நாடு தன்னுரிமையின்றிப் பிறர் பிறர் வந்து வந்து அடிமை கொள்ள அடிமை யாகி ஆகித் தளர்வுற்றது. இறுதியாக ஆங்கிலேய ருக்கு அடிமையாகி அவர் ஆட்சிக்கீழ், தன் ஒளி மங்கி வரலாயிற்று.

அதையறிந்து நம் பாரத நாடு விடுதலை பெறத் தந்நலம் துறந்து முன்னின்று தொண்டாற்றிய வீரர்களுள் திரு. இராசேந்திரரவர்களும் ஒருவராவர். இவர் உலகப் பெரியார் காந்தியடிகளின் வழிநின்று பணி புரிய, நம் நாடு விடுதலை பெற்று 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாள் உரிமை (சுதந்தரம்) பெற்றது.

உரிமை பெற்ற நாடு, மக்கள்நாயக நாடாக மிளிர்தல் வேண்டும். ஆகவே, நாடு அமைப்புக் குழுவினர் காங்கிரசுப் பேரவை முடிவுப்படி 1950-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26-ஆம் நாள் குடியரசுத் திருநாடாக மலர்ச்சி கொண்டது. அதற்கு முதன்

முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் இராசேந்திரர்; இவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்; புகழெனின் உயிருங் கொடுக்கும் ஒண்மையர்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளா உரவோர்; தெய்வங் கொள்கை மேம்பாடுற்ற பெரியார்; இத்தகையோர் நமக்குக் குடியரசுத் தலைவராக வாய்த்திருப்பது நாம் செய்த பாக்கியமே யாகும்.

பிறர்க்கென முயலும் அறத்தகையரான இராசேந்திரர் வரலாற்றை யறிதல் இந்திய நாட்டு மக்கள் அறிய வேண்டுமவற்றை அறியும் பேரறிவாகும்.

ஆகவே, இராசேந்திரரவர்களின் வரலாற்றை வித்துவான் திரு. அ. க. நவநீதகிருட்டிணன் அவர்களைக் கொண்டு எழுதுவித்து முதல் குடியரசுத் தலைவர் என்னும் பெயரால் அச்சிட்டு நூலுருவாக்கி வெளியிட்டுள்ளோம். இவ் அரிய நூலை ஆக்கித் தந்த ஆசிரியரவர்கட்கு எம் உளமுவந்த நன்றி.

இம் மாண்பு மிக்க அரும்பெறல் நூலை மாணவர்களும் ஆசிரியப் பெருமக்களும் நாட்டன்பர்களும் மொழிநலங் காண்பாரும் வாங்கிக் கற்றுப் பெரும் பயன் பெறுவார்களென நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# அணிந்துரை

பாரத நாட்டிற்கே உரிய பழமையான பண்பாட்டின் உயர்ந்த சின்னங்கள் தொண்டு, தியாகம் என்ற இரண்டுமாகும். இவ் இரண்டு அரிய பண்புகளையும் தம் வாழ்வில் கடைப்பிடித்தொழுகிய தலைவர் பெருமக்கள் பலரைப் பெற்றது நம் பாரத நாடு. அத்தகைய தலைவர்களின் வரிசையில் இவ் இருபதாம் நூற்றாண்டில் முதல்வராகக் கொண்டு போற்றும் தனிப்பெருந் தலைவர் மகாத்துமா காந்தியடிகளாவர். அவருக்கு அடுத்தபடியில் வைத்து எண்ணத்தக்க அருமையும் பெருமையும் இன்றைய பாரதக் குடியரசுத் தலைவராகிய இராசேந்திரருக்கே உண்டு.

இராசேந்திரர் அறிவு, ஆற்றல், தொண்டு, தியாகம் முதலிய அனைத்திலும் இன்று இணையற்று விளங்கும் தலைவர். அவருடைய அளப்பரிய சிறப்பினை அறிந்த நம் நாட்டு அரசியல் தலைவர்கள் குடியரசு பெற்ற பாரத நாட்டிற்கு முதல் தலைவராக அவரைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இங்ஙனம் பாரதக் குடியரசின் முதல் தலைவராக முதன்மை பெற்று விளங்கும் இராசேந்திரரின் வரலாற்றைப் பாரத நாட்டில் பிறக்கும் பேறுபெற்ற ஒவ்வொருவரும் செவ்வையாகத் தெரிந்திருக்க வேண்டுவது இன்றியமையாததாகும்.

இவ் உண்மையை உணர்ந்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இளமாணவர்க்கும் பயன்படும் வகையில் இராசேந்திரர் வரலாற்றை எழுதுமாறு எனக்கு ஊக்கமூட்டினர். அக் கழக ஆட்சிப் பொறுப்பாளராகிய தமிழ்க்காவலர் திரு. வ. சுப்பையாபிள்ளையவர்கள் தந்த ஊக்கத்தின் பயனாகவே இந்நூல் உருவாயிற்று. இதனைக் கண்ணுறும் கலாசாலைத் தலைவர்களும், தமிழ்ப்புலவர்களும் தத்தம கலாசாலைகளில் மாணவர்க்குத் துணைப்பாட நூலாக அமைத்து, எளியேனையும் இத்துறையில் ஊக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன். இத்துறையில் எனக்கு என்றும் ஊக்கமூட்டிவரும் உயர்ந்த நோக்குடையாராகிய திரு. வ. சு. பிள்ளையவர்களுக்கு எனது நேசங் கலந்த நன்றி.

தமிழ் வெல்க !

அ. க. நவநீதகிருஷ்ணன்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| ௧. | தோற்றுவாய் | 1 |
| ௨. | பாரதநாட்டின் பழம்பெருமை | 3 |
| ௩. | சுதந்திர பாரதம் | 7 |
| ௪. | குடியரசு நாட்டின் தனிப்பெருமை | 12 |
| ௫. | குடியரசுபெற்ற திருநாடு | 15 |
| ௬. | பீகார் நாட்டின் பெருமை | 18 |
| ௭. | இளைஞர் இராசேந்திரர் | 21 |
| ௮. | இராசேந்திரர் கலைநலம் | 25 |
| ௯. | கோகலேயும் இராசேந்திரரும் | 30 |
| ௧௦. | இராசேந்திரரின் சகோதரப் பற்று | 36 |
| ௧௧. | இராசேந்திரர் வழக்கறிஞர் | 40 |
| ௧௨. | இராசேந்திரர் பல்கலைக்கழகப் பணி | 44 |
| ௧௩. | இராசேந்திரர் காந்தியடிகள் நட்பு | 47 |
| ௧௪. | ஏழைகளின் ஊழியர் இராசேந்திரர் | 52 |
| ௧௫. | பீகார்காந்தி இராசேந்திரர் | 57 |
| ௧௬. | இராசேந்திரர் மேலைநாட்டுப் பயணம் | 60 |
| ௧௭. | தருமவீரர் இராசேந்திரர் | 63 |
| ௧௮. | இராசேந்திரரின் பூகம்பப் பணி | 66 |
| ௧௯. | இராட்டிரபதி இராசேந்திரர் | 70 |
| ௨௦. | இராசேந்திரர் பெற்ற இசை | 73 |
| ௨௧. | இராசேந்திரரின் இனிய பண்புகள் | 76 |
| ௨௨. | குடியரசுத் தலைவர் இராசேந்திரர் | 82 |

# முதல் குடியரசுத் தலைவர்

## ௧. தோற்றுவாய்

நிலவுலகம் நிலைபெறுதற்குக் காரணமாவார் ஒரு சில நன்மக்களே. அவர்கள் இலராயின் உலகமே அழிந்தொழியும் என்பர் ஆன்றோர். அன்னார் தந்நலம் கருதாத் தகைமையர். பிறர்க்கென வாழும் பெருந்தகையாளர். சாவாமைக்குக் காரணமாகிய தேவாமுதம் தமக்கு அரிதில் கிடைத்ததாயினும் அதனையும் தனித்து உண்ணாது பகுத்து உண்பர். எவரோடும் வெறுப்பின்றி விருப்புடன் பழகுவர். பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சியிரார். அதனைப் போக்குதற்கு ஊக்கமுடன் முயல்வர். புகழ் வருவதாயின் தம் உயிரையும் வழங்குவர். பழி உறுவதாயின் அதனால் உலக முழுதும் பெறினும் கொள்ளார். உள்ளத்தில் எதற்கும் கவலை கொள்ளார். பிறர் நலத்தைப் பேணுதற்குப் பெருமுயற்சி செய்வார். அதற்காகத் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்வார்.

இத்தகைய நல்லார்களாலேயே உலகம் நிலைபெற்றிருக்கிறது என்பதைத் தெய்வப் புலவர் திருவள்ளுவரும் வலியுறுத்திச் சொல்லுவார். சிறந்த குணங்கள் நிறைந்த பெருமக்களைச் சான்றோர் என்றும் பண்புடையார் என்றும் அறிஞர் பாராட்டுவர். சான்றோர், உலகில் ஒரு சிலரே நிலவுவர். அவர்களும் தம் சான்றாண்மையில்

குன்றுவராயின் உலகில் உள்ள மக்கட்பாரத்தை அது தாங்க மறுத்துவிடும் என்பர் திருவள்ளுவர். மேலும் அப் பொய்யில் புலவர், "பண்புடையார் சிலர் வாழ்வதனாலேயே பாருலகம் சீரழியாது நின்று நிலவி வருகிறது; இன்றேல் மண்ணோடு மண்ணாய் அது மட்கி மாய்ந்து போகும்," என்று ஆய்ந்துரைத்தருளினார்.

பிசிராந்தையார் என்னும் பெருந்தமிழ்ப் புலவர், தாம் வாழும் ஊர், வளமும் நலனும் பெற்று விளங்குதற்கும், தாம் நல்வாழ்வு பெற்றுத் தழைப்பதற்கும் காரணம் 'யான் வாழும் ஊர் பல சான்றோர்களை உடையது என்று அறுதியிட்டு உரைத்தருளினார். இவற்றையெல்லாம் இனிது உணர்ந்த தமிழ்மூதாட்டியார்,

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை."

என்று சொல்லியருளினார்.

நம் பாரத நாட்டின் நலத்திற்கும் வளத்திற்கும் காரணமாய்ப் பண்டு முதல் இன்றுவரை பற்பல சான்றோர் தோன்றியுள்ளனர். இவ் இருபதாம் நூற்றாண்டில் அத்தகைய சான்றோர் வரிசையில் முதல்வராகத் தோன்றி மறைந்த இணையற்ற பெருந் தலைவர் காந்தியடிகள் ஆவார். இன்றைய பாரதக் குடியரசின் முதல் தலைவராக விளங்கும் டாக்டர் இராசேந்திர பிரசாத், அச் சான்றோர் வரிசையில் ஒருவராக மதிக்கத் தக்க மாண்புடையராவர். இவர் கலையாலும் பணியாலும் தலைசிறந்து விளங்கும் பெருந்தகுதி உடையவர். ஆதலின் இவரது வரலாறு, மற்றவர்க்கு உற்ற வழிகாட்டியாக நின்று உதவும் பெற்றியுடையது.

# உ. பாரத நாட்டின் பழம்பெருமை

'பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு' என்று பாராட்டினார் பாரதியார். அது பழமையும் பெருமையும் வாய்ந்தது. இந் நாட்டின் வட எல்லையாக விளங்கும் இமயமாமலை அவ் உண்மையை உலகினுக்கு விளக்கித் தலை நிமிர்ந்து நிற்கிறது. இதைப் போன்றதொரு பெரு மலை இவ் உலகிலேயே இல்லை. அதனாலேயே பாரதியார்,

"மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநிலமீது இதுபோல் பிறிதிலையே."

என்று உரிமை பாராட்டிப் பெருமை பேசினார்.

பனி படர்ந்த இமய மலையிலிருந்து கங்கை, சிந்து, பிரமபுத்திரா முதலிய பேராறுகள் பொங்கிப் பெருகி வருகின்றன. என்றும் வற்றாது வளஞ்சுரக்கும் அப் பேராறுகளால் பாரத நாட்டின் வடபகுதி வளம் கொழிக்கும் நிலமாக விளங்குகிறது. எங்கு நோக்கினும் நில மகள் பசும்போர்வை போர்த்துப் பொலிவது போல் நிலவளம் காணப்படும். இமயத்தின் வட மேற்குக் கோடியில் கண்ணிற்கினிய காச்மீர நாடு கவினுற்று விளங்கும். அப் பகுதி இயற்கை வனப்பின் இனிய உறையுளாக ஒளிரும். அதைப் போன்றதோர் இன்ப வாழ்வுத்தலம் உலகில் வேறு எங்குமே கிடையாது. பிற நாட்டவரெல்லாம் அங்கு வந்து தங்கி அளவிலா இன்ப வெள்ளத்தில் மூழ்குவர்.

இந் நாட்டின் நடுவில் நருமதை, தபதி என்னும் நதிகள் மேற்கு நோக்கிப் பாய்ந்து மேலான வளத்தைச் சுரக்கின்றன. அப் பேராறுகள் பாயும் நிலப்பகுதிக்கு இப்பால் கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா முதலிய

பெருநதிகள் பரந்து வளஞ்சுரந்து பாய்கின்றன. தமிழ் நாட்டிலோ வடபெண்ணை, தென்பெண்ணை, காவிரி, வையை, தண்பொருநை முதலிய நல்லாறுகள் வளமும் நலமும் கொழித்துப் பாய்ந்து வருகின்றன. இவையன்றி அருவிகளும் ஏரிகளும் பெருகித் தோன்றும் திருவுடையது தமிழ்நாடு.

நீர்வளத்தால் நிறைந்து விளங்கும் பாரத நாட்டில் நிலவளத்திற்குக் குறைவே இல்லை. எள்ளும் கொள்ளும் நெல்லும் முதலாய பதினெண் கூலமும் பரந்த நிலமெங்கும் விளைந்து மலிந்து காணப்படும். மக்கள் கட்டும் உடைக்குப் பட்டும் பருத்தியும் தட்டின்றிப் பயிராயின. காயும் கனியும் கணக்கின்றித் தரும் மரங்கள் வளர்ந்தோங்கிச் செறிந்து காணப்பட்டன. நாட்டின் மூன்று பக்கமும் சூழ்ந்துள்ள மலைகளாலும் கடலாலும் மலை வளமும் கடல் வளமும் மிக்கோங்கி விளங்கியது இந்நாடு. இங்கு உழவும் தொழிலும் உயர்ந்து சிறந்தன.

பாரதநாட்டு வாணிகம் பாரெங்கும் பரவி இருந்தது. இந்நாட்டு முத்தும் மணியும் மிளகும் துகிலும் தந்தமும் சந்தமும் ஆடையும் அணியும் ஆகிய பொருள்களை அயல் நாட்டினர் ஆர்வமுடன் வாங்கி அனுபவித்தனர். அதனால் பன்னாட்டுப் பொன்னும் இந் நாட்டில் வந்து குவிந்தது. இங்குள்ள கனிகளிலிருந்து தங்கமும் வெள்ளியும் வைரமும் வைடூரியமும் நிரம்பக் கிடைத்தன. இக் காரணங்களால் பாரதநாடு பொன் கொழிக்கும் பூமியாகப் புகழ் பெற்று விளங்கியது.

இந் நாட்டின் கல்விப் பெருக்கும் காவியச் சிறப்பும் கணக்கில் அடங்குவன அல்ல. உலகப் பொதுமறை என்று எந் நாட்டினரும் ஏற்றுப் போற்றும் திருக்குறள்

இந்நாட்டில்—தென்னாட்டில் தீந்தமிழ் வழங்கும் தமிழ்த் திருநாட்டில் தோன்றியது. இணையற்ற இதிகாசங்களை வழங்கிய வான்மீகி முனிவனும் வியாச முனிவனும் இந் நாட்டிலேயே தோன்றினர். கீதையை அருளிய கண்ண பிரானும் சாகுந்தலம் தந்துதவிய காளிதாசனும் இப் புண்ணிய பூமியிலேயே தோன்றினர். பெருங் காவியங் களை அருளிய கம்பரும் இளங்கோவும் சேக்கிழாரும் இந் நாட்டில்தான் தோன்றினர்.

உலகிற்கு மெய்ஞ்ஞானச் செல்வத்தை ஊட்டிய பெருந்தவ முனிவர்களும் பேரருளாளர்களும் இந் நாட்டில் எண்ணிலாது தோன்றினர். ஆசிய நாட்டின் பேரொளியாய் விளங்கி அருளறத்தை அறிவுறுத்திய புத்தர்பிரான் பூத்த திருநாடும் இதுவே. அப் பெருமா னது அருள்மொழியை அவனி யெங்கும் பரப்புதற்கு அசோகப் பெருவேந்தன் தூதுவர்களை அனுப்பினன். உலகனைத்தும் அன்பாகிய விதையை வித்தி, அம் மன்னன் அறப்பயிரை விளைத்தான். சங்கரர், இராமா னுசர், மத்துவர் முதலான சமயத்தலைவர்கள் தோன்றிச் சமய உண்மைகளை விரித்துரைத்து விளக்கினர். சைவ சமய குரவர்களும் வைணவ சமய ஆழ்வார்களும் சிந்தைக்கும் செவிக்கும் இனிய செந்தமிழ்ப் பாசுரங் களைப் பாடி எங்கும் தெய்வமணம் கமழுமாறு செய் தருளினர். குருநானக், இராமதாசர், கபீர்தாசர், துளசி தாசர் போன்ற ஞானச் செல்வர்கள் தோன்றி 'ஒருவனே தேவன்' என்ற உண்மையை உலகிற்கு விளக்கினர்.

இங்ஙனம் நீர்வளம், நிலவளம், மலைவளம், அலை வளம், கலைவளம், ஞானவளம் ஆகிய பல்வகை வளங் களும் மல்கிப் பாரதநாடு செல்வம் கொழிக்கும் திரு

நாடாகத் திகழ்ந்தது. ஆதலின் எந்நாட்டவர்க்கும் இந் நாட்டின் மீது கண்ணோட்டம் இருந்து வந்தது. இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னர்க் கிரேக்கப் பெருவீர வேந்தனாகிய அலெக்சாந்தர் இந் நாட்டின் சிறப்பையும் செழிப்பையும் கேள்வியுற்றான். இதனைத் தன்னடிப்படுத்தும் எண்ணத்துடன் படைகொண்டு வந்தான். முகம்மது கஜினி என்பானும் இந் நாட்டைக் கவரப் பன்முறை படையெடுத்து வந்தான். இவ்வாறு பன்னாட்டு மன்னர்களின் உள்ளத்தை ஒருங்கு கவர்ந்த உயர்வுடையது இந்நாடு.

மேலை நாட்டுப் பேரறிஞராகிய மாக்ஸ்முல்லர் என்பார் பாரத நாட்டின் சிறப்பைப் பலபட விரித்துரைக்கின்றார்: "பாருலகில் பேரின்பம் வழங்கும் பெருமைமிக்க நாடு பாரதமே. இயற்கையாக அமைந்த பெருவளமும் இணையில்லாத பேராற்றலும் படைத்தது பாரதநாடு. உலக மக்கள் உய்யுமாறு உயர்ந்த அறநெறியைக் காட்டியதும் பாரதநாடே. தத்துவ ஞானத்திற்குத் தாயகமாய் இருமைக்கும் பெருமையடைய வழிகாட்டும் வல்லமையுடையதும் பாரதநாடே." இங்ஙனம் அவ் ஆங்கிலப் பேரறிஞர் பாரத நாட்டின் பழம் பெருமையைப் பாராட்டிப் போந்தார். இவற்றை யெல்லாம் நன்கு உணர்ந்த பாரதியாரும்,

'பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை யீடே.'

என்று பாடிய வாய் தேனூறப் பாடி மகிழ்ந்தார்.

# ௩. சுதந்திர பாரதம்

பண்டு தொட்டுப் பாரதநாடு முடிமன்னர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இமய முதல் குமரி வரை ஒரு மொழி வைத்து உலகாண்ட மன்னர்கள் பலர் இந் நாட்டைப் புரந்து வந்தனர். இடையிடையே முடியாட்சியைத் தகர்த்தெறியப் பல வீரர்கள் போராடியுள்ளனர். இறுதியில் முந்நூறு ஆண்டுகளாக ஆங்கிலேயர்கள் இந் நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டு வந்தனர். அவர்களது ஆட்சிக் காலத்திலும் பாரதநாட்டின் அடிமைத்தளையை உடைத்தெறிய வீறிட்டெழுந்த வீரர்கள் பலர்.

ஆங்கிலேயர் ஆட்சி நடத்திய நாளில் இந்நாட்டு மக்களின் நன்மைகளைப்பற்றி அவர்கள் எள்ளளவும் கருதவில்லை. பாரத நாட்டின் பெருஞ்செல்வத்தைப் பற்றிக் கவர்ந்து செல்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். இந்நாட்டு மக்கள் கல்வி, தொழில், வாணிகம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் வளர்ச்சியடையாத வண்ணம் தடைசெய்து வந்தனர். இவ் விழி நிலையைக் கண்டு உள்ளம் கொதித்த இந்தியத் தலைவர்கள் பலர், நாட்டு முன்னேற்றத்தில் நாட்டம் செலுத்தத் தொடங்கினர்.

‘நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்—இந்தப்
பூமியில் எவர்க்கும்இனி அடிமைசெய்யோம்—பரி
பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்.’

என்று வீரமுழக்கம் செய்தனர்.

பாரதநாடு பாரதமக்களாலேயே ஆளப் பெற வேண்டும். இந்நாட்டு மக்கள் எல்லாத் துறைகளிலும்

மேம்பட்டு இலங்க வேண்டும். பிற நாடுகளுடன் பெருமையுற்றுச் சமமாக விளங்க வேண்டும். இத் தகைய நன்னோக்கங்களை நிறைவேற்ற இந்தியத் தலைவர்கள் பலர் ஒருங்கு கூடி 1885-ஆம் ஆண்டில் இந்தியத் தேசியக் காங்கிரசுப் பேரவையை அமைத்தனர். அதன் வாயிலாகப் பாரத மக்களின் நலங்களைப் பாதுகாக்கப் பெருமுயற்சியும் கிளர்ச்சியும் செய்தனர். அதனால் ஆங்கிலேயர் ஒரு சில சீர்திருத்தங்களைச் செய்தனரே யன்றித் தம்ஆட்சி தருதற்கு முன்வரவில்லை.

ஆங்கிலேயர் போக்கையும் நோக்கையும் கண்ட பாரத நாட்டுத் தலைவர்கள் காங்கிரசு இயக்கத்தை வலுப்படுத்தினர். வெளிநாட்டுப் பொருள்களை வெறுத்து ஒதுக்குமாறு மக்களை வேண்டினர். மக்களிடையே தம்ஆட்சி ஆர்வத்தைப் பெருக்கினர். பாரத மக்களின் சுதந்திர ஆர்வத்தைக் கண்ட ஆங்கில அரசாங்கத்தினர் அடக்குமுறைகளைக் கையாளத் தொடங்கினர். பாலகங்காதர திலகர், பிபின்சந்திர பாலர், அரவிந்த கோஷ், வீரர் சிதம்பரனர், வ. வே. சு. ஐயர் முதலான நாட்டுத் தலைவர்கள்மீது அரசத் துரோகம் என்னும் குற்றம் சாற்றி அவர்களைச் சிறைக்குள் தள்ளினர். பல்லாயிரக் கணக்கான நாட்டுத்தொண்டர்கள் ஆங்கிலேயரின் அடக்குமுறை இன்னல்களுக்கு ஆளாயினர்.

முதலாவது உலகப் போர் 1919-இல் முடிந்ததும் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் நிறைவேறிய மாண்டேகு சீர்திருத்தச் சட்டத்தால் பாரதநாட்டிற்குச் சில நலங்கள் விளைந்தன. எனினும் அவற்றால் மக்கள் அமைதியுற வில்லை. இதன் பின் பஞ்சாபில் நடந்த படுகொலையும் அதைத் தொடர்ந்து நிகழ்ந்த அடக்குமுறைக் கொடு

செயல்களும் மக்களின் மனத்தைப் புண்படுத்தின. இவ் அமயத்தில் காந்தியடிகள் நாட்டு மக்களுக்குத் தலைமை தாங்க முன்வந்தார். உடனே, அவர் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினர். ஆங்கிலேயர் அவரது இயக்கத்தை அடக்க முற்பட்டனர். காந்தியடிகளையும் அவரைப் பின்பற்றியவர்களையும் சிறையில் தள்ளினர்.

காந்தியடிகள் 1930-ஆம் ஆண்டில் மீண்டும் போர் துவங்க முற்பட்டு உப்பு அறப்போரைத் தொடங்கினர். நாடெங்கும் இவ் அறப்போர் நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் இவ் இயக்கத்தில் கலந்து சிறைப்பட்டனர். பலர் தடியடியால் புண்பட்டனர். பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். எனினும் மக்களிடையே எழுந்த பெருங் கொதிப்பை அரசாங்கத்தால் அடக்க முடியவில்லை. அப்பொழுது இங்கிருந்த அரசப்பிரதிநிதி யாகிய இர்வின், காந்தியடிகளுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்பின் உப்பு அறப்போர் நின்றது.

பின்னர், இலண்டனில் கூட்டிய வட்டமேசை மாநாட்டின் விளைவாக 1935-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாராளு மன்றத்தில் இந்திய அரசியல் சட்டம் நிறை வேறியது. அதன் பயனுகப் பாரத நாட்டில் மாகாணங் களில் மட்டும் தம்ஆட்சி நிறுவப்பெற்றது. காங்கிரசுக் கட்சியினர் மாகாணத் தம்ஆட்சியை ஏற்றுக்கொண் டனர்.

இரண்டாவது உலகப்போர் 1939-ஆம் ஆண்டில் தொடங்கிற்று. இந்தியத் தலைவர்களைக் கலந்து கொள் ளாமலே ஆங்கிலேயர் இந் நாட்டைப் போரில் ஈடுபடுத் தினர். இதனை எதிர்த்துக் காங்கிரசு ஆட்சிப் பொறுப் பேற்ற மாகாணங்களில் அமைச்சர்கள் தங்கள் பதவி

களைத் துறந்து வெளிவந்தனர். 1942-ஆம் ஆண்டில் காந்தியடிகள் 'வெள்ளையரே வெளியேறுக' என்ற வீர முழக்கத்தை ஆரம்பித்தார்; இவ்வேளையில் நம் நாட்டினின்று வெளியேறிய அரும்பெறல் தலைவராகிய சுபாஷ் சந்திர போஸ் இந்தியப் படையொன்றைத் திரட்டி ஆங்கிலேயரைத் துரத்திச் சுதந்திர பாரதப் பேரரசினைத் தோற்றுவிக்க முயன்றார். ஆனால் அவரது முயற்சி பயன் விளைக்காது வீணாயிற்று. எனினும் பாரத நாடெங்கும் வீர சுதந்திரச் சங்கநாதம் முழங்கிக் கொண்டிருந்தது.

நாட்டுத் தலைவர்களின் வீரப் பேருணர்ச்சியைக் கண்டு கலங்கிய ஆங்கில அரசாங்கம் இந்தியர்க்குச் சுதந்திரம் வழங்க இணங்கியது. 1946-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் ஆங்கில நாட்டு அமைச்சர் மூவர் இந்திய நாட்டிற்கு வந்து இங்குள்ள பல்வேறு கட்சித் தலைவர்களைக் கலந்து பேசினர். இறுதியில் காங்கிரசுப் பேரவை, முசுலீம் லீக் ஆகிய இரண்டின் பிரதிநிதிகளை அழைத்து, "நீவிர் இருவீரும் ஒருமனப்பட்டு வருங்கால அரசியலை வகுத்துக்கொள்ள அரசியல் நிர்ணய சபையை நிறுவுக" என்று வேண்டினர். முசுலீம் லீகின் தலைவராகிய முகம்மது அலி ஜின்னா அதற்கு இணங்கவில்லை. எனினும் காங்கிரசுப் பேரவையின் சார்பில் பண்டித நேரு இடைக்கால அரசினை நிறுவ ஒருப்பட்டார். அதற்கு ஆங்கில அமைச்சர்களும் இசைந்தனர். 1946-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இந் நாட்டு ஆட்சியை நம்மவர் ஏற்றனர்.

முகம்மது அலி ஜின்னாவோ முசுலீம்கள் பெருந் தொகையினராயுள்ள மாகாணங்களை எல்லாம் ஒன்று

சேர்த்துத் தனி முசுலீம் அரசினை நிறுவப் பெருவிருப்புக் கொண்டார். அவரது விருப்பம் நிறைவேற முசுலீம் மாகாணங்களில் இந்துக்கள் தாக்கப்பட்டனர். அதைக் கண்டு இந்துக்கள் முசுலீம்களைத் தாக்கினர். இதனால் இலட்சக் கணக்கான இந்துக்களும் முசுலீம்களும் தாம் தேடிய செல்வத்தையெல்லாம் இழந்து உயிரைக் காக்க இடம்பெயர்ந்து அடைக்கலம் நாடி ஓடினர். இக் கொடுஞ் செயல்களைக் கண்ட காங்கிரசுத் தலைவர்கள், ஜின்னாவின் விருப்பிற்கு இணங்கி, இந்தியாவைப் பிரிக்க இசைந்தனர். எவ்விதமாயினும் ஆங்கிலேயர் ஆட்சியை அகற்றவேண்டுமென்பதே காங்கிரசுத் தலைவர்களின் கருத்தாய் இருந்தமையால் முசுலீம்கள் கருத்திற்கு இணங்கினர். அதன் பயனாக இந்திய நாடு பாரதம் என்றும், பாகிஸ்தான் என்றும் இரு நாடுகளாய்ப் பிரிந்தது.

1947-ஆம் ஆண்டில் இந்திய அரசப் பிரதிநிதியாய் வந்த மவுண்ட் பேட்டன் பிரபு, இந்திய அரசியல் அதிகாரத்தை இந்தியரிடம் மாற்றிக் கொடுத்தார். அவ் ஆண்டில் ஆகஸ்டு 14-ஆம் நாள் பாகிஸ்தான் உரிமை பெற்றது. 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம்நாள் பாரத நாடும் உரிமை பெற்றுச் சுதந்திர பாரதம் உருவாயிற்று. டாக்டர் அம்பேத்கார் என்ற அறிஞரைத் தலைவராகக் கொண்ட அரசியல் அமைப்புக் குழு, அதே ஆண்டு ஆகஸ்டு 29-ஆம்நாள் பாரதநாட்டின் வருங்கால அரசியல் அமைப்பைத் தீட்டி அரசியல் நிர்ணய சபை முன்னர் வைத்தது. அச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் அமைப்புத்தான் இன்று பாரத அரசியல் அமைப்பாக விளங்குகிறது.

## ௬. குடியரசு நாட்டின் தனிப்பெருமை

பல்லாயிரம் ஆண்டுகளாக முடிமன்னர் ஆட்சியி லிருந்த பாரத நாடு 1950-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் முதல் குடியரசு ஆட்சியைக்கொண்டது. அந்நாளைப் பாரத நாடெங்கும் குடியரசுத் திருநாளாக மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். மக்கள் ஆட்சி நிறுவிய இத் திருநாளைக் குடியரசு நாளாக ஆண்டுதோறும் கொண் டாடி அகமகிழ்கின்றனர்.

குடியரசு பெற்ற பாரத நாட்டில் எல்லா நலங்களும் பொங்கிப் பெருகுமாறு தலைவர்கள் அரும்பணியாற்று கின்றனர். நாட்டு முன்னேற்றத்திற்கான திட்டங்கள் பலவற்றைத் தீட்டுகின்றனர். அவற்றை நடைமுறையில் கொண்டு வருதற்கு அரும்பாடு படுகின்றனர். பாரத நாடு செய்த பண்டைத் தவத்தால் தந்நிகரில்லாத தனிப்பெருந் தலைவர்கள் இருவர் சிறப்பாக அமைந் துள்ளனர். அவர்கள் குடியரசுத் தலைவராகிய டாக்டர் இராசேந்திர பிரசாத், நடு அரசின் முதலமைச்சராகிய பண்டித ஜவகர்லால் நேரு ஆகிய இருவருமாவர். இவர்களது இணையற்ற தலைமையில் இயங்கும் பாரத நாடு உலகில் தலைசிறந்த நாடாக நிலவும் என்பதில் ஐய மில்லை.

சான்றோர் தோன்றிய நாடே ஆன்றமைந்த திரு நாடாக அணிபெற்று இயங்கும் என்பர் அறிஞர். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தொழுகிய அண்ணல் காந்தியடிகட்கு ஒப்பான சான்றோரைக் காண்டல் இயலுமோ! அப் பெருமானைப் பின்பற்றி அவரது அற வழியில் பிறழாது ஒழுகும் பெற்றியுடையோர் இராசேந் திரரும், நேரு பெருமானும். இவ் இரு பெருமக்களும்

பாரத நாட்டின் இரு கண்கள். இராசேந்திரர் பாரத நாட்டுச் சீரிய பண்பாட்டின் சின்னமாகத் திகழ்கின்றார். நேருபெருமான் பாருலகிற்கு அமைதியை நிலைநாட்ட வந்த தூதர் என்று பாராட்டப் படுகின்றார்.

பாரதப் பேரரசின் முதலமைச்சராக விளங்கும் பண்டித ஜவகர்லால் நேருவுக்குப் பக்கத் துணையாகத் தக்கார் ஒருவர் திகழ்ந்தார். அவர் இரும்பு மனிதர் என்று சிறப்பிக்கப்பெற்ற சர்தார் வல்லபபாய் படேல் ஆவார். அவர் உதவி முதலமைச்சராகப் பதவியேற்று உள்நாட்டு ஆட்சித் துறையில் அரும்பணி புரிந்தார்.

ஆங்கிலேயர் காலத்தில் இந்தியாவில் பிரிட்டிசு இந்தியா, சமஸ்தான இந்தியா என்ற இரு பிரிவுகள் இருந்தன. பிரிட்டிசு இந்தியாவையே ஆங்கிலேயர் நேர் முகமாக ஆண்டு வந்தனர். அப் பகுதிக்கே அவர்கள் சுதந்திரம் வழங்கினர். சமஸ்தான இந்தியாவோ பாரத நாட்டில் மூன்றில் ஒரு பாகமாகும். இதில் எட்டுக்கோடி மக்கள் வாழ்கின்றனர். சிறியதும் பெரியதுமான ஐந் நூற்று அறுபத்து நான்கு சமஸ்தானங்கள் இந்நாட்டில் இருந்தன. அவற்றைத் தனித்தனியே மன்னர்கள் ஆண்டு வந்தனர். இந்தியாவின் அரசப் பிரதிநிதியே அவர்களுக்கெல்லாம் சர்வாதிகாரி. ஆங்கிலேயர் இந் நாட்டினின்று வெளியேறுங் காலத்து, ‘இனி சமஸ்தானங்கள் தம் விருப்பம்போல் நடந்து கொள்ளலாம்’ என்று சொல்லிச் சென்றனர்.

உள்நாட்டு அமைச்சுத் துறையில் பணியாற்றிய சர்தார் படேல் சமஸ்தானங்களின்மீது கருத்தைச் செலுத்தினர். அவற்றை விருப்பம்போல் ஆட்சி செலுத்தவிட்டால் பாரத நாட்டில் பன்னூறு தனியரசு

கள் முளைக்கும்; அவை பிறநாட்டுடன் தொடர்புகொண்டு சுதந்திர பாரதத்திற்குத் தீமை விளைக்கும் என்று எண்ணினர். சமஸ்தான மன்னர்களையெல்லாம் தனித்தனியே அழைத்துக் குடியரசுத் திருநாட்டை உருவாக்க அறிவுரைகள் பலவற்றை எடுத்தியம்பினர். அம் மன்னர்கட்கு இருந்த செல்வங்களை அவர்களிடமே ஒப்படைத்தார். சிறிய சிறிய சமஸ்தானங்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு மாகாணம் ஆக்கினர். அம் மாகாண சமஸ்தானங்களுக்கு அம் மன்னர்களில் ஒருவரையே அரசப் பிரமுகர் என்று அமர்த்தினர். சமஸ்தான மக்களுக்குச் சுதந்திரம் வழங்கினர். ஆட்சியை நடத்தச் சட்ட மன்றங்களையும் அமைச்சர் அவைகளையும் தோற்றுவிக்குமாறு செய்தார். தனியரசாகத் தருக்கி நிற்கத் தலைப்பட்ட நிஜாம் இராச்சியத்தின்மீது பாரத நாட்டு வீரப்படையைச் செலுத்தி வளைத்தார். இங்ஙனம் சமஸ்தான மன்னர்களையெல்லாம் பாரதக் குடியரசுக்கு உட்பட்டு நடக்குமாறு சாதித்த பெருமை சர்தார் படேலையே சாரும்.

பாரத நாடு முழுதும் குடியரசு நிலவும் இந்நாளில் எல்லோரும் இந்திய மக்கள் என்ற ஒப்புமை உணர்ச்சி பரவி வருகிறது. சாதி சமய இன வேறுபாடுகளால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் இழிதகைமை இந் நாட்டை விட்டு ஒழியவேண்டும்; எல்லோரும் ஒரு குலமாய் ஓரினமாய் ஒற்றுமையுற்று வாழும் சமத்துவ வாழ்வு மலரவேண்டும்; நீதியும் உரிமையும் எல்லோருக்கும் ஒன்று போல் வழங்கவேண்டும்; அனைவரும் கடமையைச் செய்து உரிமையைப் பெறுவதில் சிறு தடையும் இருத்தலாகாது; இவற்றைக் காத்தற்காகவே மக்கள் தலைவர்கள் தக்க பணிபுரியவேண்டும்; அவர்கள் தந்நலம் கருதாது பொதுநலம் காக்கும் புண்ணியர்களாக வாழ

வேண்டும். இத்தகைய மக்கள் ஒருசிலர் வாழும் பெருமைபெற்ற நாடே வளமையுற்ற நாடாக வையகத்தில் விளங்கும்.

'பண்புடையார்ப் பட்டுண்(டு) உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.'

என்பது உலகப் பொதுமறை காட்டும் உண்மையாம்.

---

## ரு. குடியரசு பெற்ற திருநாடு

"சுதந்திரம் எனது பிறப்புரிமை; அதனை அடைந்தே தீருவேன்" என்று உறுதி பூண்டு, நாட்டிற்குப் பெரும் பணி புரிந்த சிறந்த தலைவர்களின் தியாகத்தால் பாரத நாடு 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாள் சுதந்திரம் பெற்றது. ஆங்கிலேயரின் ஆட்சியை அகற்றுதற்கு அரும்பாடுபட்ட பெருந்தலைவர்களின் உள்ளங்கள் இன்ப வெள்ளத்தில் மூழ்கின. நாட்டுத் தொண்டர்கள் எல்லோரும் சுதந்திரத் திருநாளைக் கண்டு பெருமகிழ்வு கொண்டனர். பாரத நாட்டு மக்கள் எல்லோரும் எல்லையற்ற மகிழ்ச்சியால் உள்ளம் பூரித்தனர்.

இத்தகைய சுதந்திர நாட்டினைக் காணுதற்கு உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்த பெருமகனாகிய காந்தியடிகள் ஆங்கிலேயரை விரட்டுதற்கு அறப்போரையே மேற்கொண்டார். சத்தியம், அகிம்சை என்னும் இரண்டு அறங்களையும் அடிப்படையாகக் கொண்டே அவர் அரசியல் போராட்டத்தை நடத்தினார். மறப்போர் புரியும் மற்றைய நாட்டினர்க்குப் புதுவழியொன்றைக் காட்டியருளினார். அவ் அறப்போர் முறை

யிலேயே ஆங்கிலப் பேரரசைப் பணியுமாறு செய்தார். அவர் உள்ளத்தால் பொய்யாது ஒழுகி, உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் ஒளிவீசும் மணிவிளக்காய் உயர்வு பெற்றார். அதனால் 'இந்திய சுதந்திரத் தந்தையார்' என்று என்றும் கொண்டாடும் சிறப்பு எய்தினார்.

அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப் பெற்ற இந்நாட்டுப் புதிய அரசியல் அமைப்பின்படி 1950-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26-ஆம் நாள் பாரத நாடு குடியரசுத் திருநாடாக மலர்ச்சியுற்றது. அன்று முதல் புதிய அரசியல் அமைப்புத் திட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. இவ் அரசியல் அமைப்பு, இந்திய நாட்டின் வரலாற்றிலேயே முதன்முதல் மக்கட் பிரதிநிதிகளால் வரைந்து அமைக்கப்பெற்ற அருமையுடையதாகும். இத் திட்டம் பல நாட்டு அரசியல் அமைப்புகளில் காணப்படும் சிறப்பியல்களின் தொகுப்பு என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். அஃது ஓரளவிற்கு உண்மையேயாயினும் அமைப்பின் அடிப்படையிலும் குறிக்கோளிலும் நம் பாரத நாட்டின் தனிப்பண்பு சிறப்பான இடம்பெற்றுள்ளது.

இத்தகைய அரசியல் அமைப்பின் வண்ணம் நாடு முழுவதையும் ஆளும் நடுஅரசு ஒன்று நிலவும். அவ் அரசின் ஆட்சிமுறைத் தலைவர், துணைத்தலைவர், அமைச்சர் அவை ஆகிய முப்பகுதிகளை உடையது. நாட்டின் தலைவர் ஐந்து ஆண்டுகட்கு ஒருமுறை நடுஅரசின் சட்ட மன்றத்தில் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பெருமக்களாலும், மாகாணச் சட்ட மன்றங்களின் கீழ்ப் பிரிவுகளில் உள்ள உறுப்பினராலும் தேர்ந்தெடுக்கப் படுவார்.

பாரதக் குடியரசில் வாழ்பவரும், முப்பத்தைந்து ஆண்டுகட்கு மேற்பட்டவரும், நடு அரசின் மக்கட்சபையின் உறுப்பினராக ஆவதற்குத் தகுதியுடையவருமான எவரும் தலைவர் பதவிக்குப் போட்டியிடலாம். அவர் சட்ட மன்றத்தின் உறுப்பினராக இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒருமுறை தலைவராக இருந்தவர் எத்தனை முறை வேண்டுமானாலும் தலைவராக வர முடியும். அரசியல் அமைப்பிற்குப் புறம்பாக நடந்தார் என்னும் ஒரு காரணத்திற்காக மட்டுமேயன்றி, வேறு எக் காரணத்திற்காகவும் அவரை ஐந்தாண்டுக் காலத்திற்குள் பதவியினின்றும் அகற்ற இயலாது.

நாட்டின் ஆட்சிமுறை அலுவல்கள் எல்லாம் தலைவர் பெயராலேயே நடக்கவேண்டும்; நாட்டின் பாதுகாப்புப் படைகள் யாவும் அவர் அதிகாரத்திற்கு உட்பட்டனவாகும். நடு அரசிற்கு முதலமைச்சரை நியமிப்பதும் அவரது மதியுரை பெற்று மற்ற அமைச்சர்களை நியமிப்பதும் தலைவரது பொறுப்பே. குற்ற மன்னிப்புக் கொடுக்கும் அதிகாரமும் தலைவருக்கு உண்டு. இம் முறைகளை நோக்கினால் நம் பாரத நாட்டுக் குடியரசுத் தலைவர் ஆங்கில நாட்டு அரசர் போன்றே சிறப்புற்று விளங்குகின்றார்.

1950-ஆம் ஆண்டு சனவரி 26-ஆம் நாள் பாரதக் குடியரசு மலர்ச்சியுற்றதும் அரசியல் நிர்ணய சபையால் தேர்ந்தெடுக்கப் பெற்ற தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றார். அதன் பின்னர்ப் பாரத நாடு முழுதும் தேர்தல் நடைபெற்றுப் புதிய உறுப்பினர்களைக் கொண்ட சட்ட மன்றங்கள் உருவாயின. பின்னர் அரசியல் அமைப்பு முறைப்படி

டாக்டர் இராசேந்திர பிரசாத் தலைவர் பதவிக்குத் தேர்தலில் நின்றார். அதிலும் மிகுதியான வாக்குரிமைகளைப் பெற்றுத் 'தகுதியான தலைவர் இவரே!' என்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இங்ஙனம் நாட்டு மக்களின் உள்ளத்தையெல்லாம் நன்கு கவர்ந்து, குடியரசு பெற்ற பாரத நாட்டின் சீரிய முதல் தலைவராக விளங்கும் பேறு பெற்றவர் டாக்டர் இராசேந்திர பிரசாத். இத்தகைய பெருமகனது அரிய வரலாற்றைப் பாரத நாட்டு மக்கள் அனைவரும் தக்க வகையில் தெரிந்து மகிழக் கடமைப்பட்டுள்ளனர். மேலும் பாரத நாட்டின் வருங்காலத் தலைவர்களாகிய தற்கால இளைஞர்கள் அப் பெருமகனது வரலாற்றை இனிது உணர்ந்து அவரைப் பின்பற்றி நடக்கவேண்டும். நாம் பெற்ற சுதந்திர ஆட்சியாகிய நறுங்கனியை நன்குகத் துய்க்க வேண்டுமாயின் அவர் காட்டும் அரிய வழிகளைப் பின்பற்றி ஒழுகுவோமாக!

---

## ௩. பீகார் நாட்டின் பெருமை

குடியரசு பெற்ற பாரத நாட்டின் மாகாணங்கள் பலவற்றுள் பீகாரும் ஒன்றாகும். அது விகாரம் என்ற சொல்லின் திரிபு என்பர் அறிஞர். புத்த மதக் கோவில்களையும் மடங்களையும் விகாரங்கள் என்று வழங்குவர். புத்தர் பிரான் கோவில்களும் பௌத்த மடாலயங்களும் நிரம்பிய நாடு பீகார் மாகாணம். ஆதலின் விகாரங்கள் நிறைந்த நிலப்பகுதி பீகார் எனப் பெயர்பெற்றது.

இப் பீகார் மாகாணம் மகாபாரத காலந்தொட்டுப் பெருமையுற்று விளங்குவது. இதனை முன்னாளில்

மகத நாடு என்று நூல்கள் வழங்குகின்றன. நவநந்தனர் என்னும் நல்லரசர் இங்கிருந்தே அரசு புரிந்தனர். உலக முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆள விரும்பிய கிரேக்கப் பெருவேந்தனாகிய அலெக்சாந்தர் பாரத நாட்டில் நிறுவிய அரசையும் அவனது படைவெள்ளத்தையும் தகர்த்தெறிந்த பெருவீரன் சந்திரகுப்தன் இந்த மகத நாட்டையே ஆண்டு வந்தான். அவன் மதிநுட்பம் மிகப் படைத்த சாணக்கியன் என்னும் மந்திரியின் பெருந்துணையால் மகத நாட்டு அரசை ஒரு வல்லரசாக உருவாக்கினான். அதன் பெருமை எண்டிசையிலும் பரவி நின்றது.

இந்திய நாட்டிற்கு வந்த கிரேக்கத் தூதுவனாகிய மெகஸ்தனிஸ் என்பான் மகத நாட்டு மன்னனாகிய சந்திரகுப்தன் அரசவையில் அமரும் இடம்பெற்றான். அவ் அறிஞன் மகத நாட்டின் ஆட்சிமாண்பைக் கண்டு வியந்தான். "இந் நாட்டில் எந்த வீட்டிற்கும் பூட்டோ கதவோ போடவேண்டுவதில்லை ; நாட்டு மக்கள் எல்லோரும் நல்லறிஞராவர் ; அன்பிலும் பண்பிலும் அணி பெற்று விளங்குவது இந் நாடு" என்று இந் நாட்டைப் பற்றித் தனது நூலில் வரைந்துள்ளான்.

சந்திரகுப்தனுக்குப் பின் மகத நாட்டை ஆண்ட மன்னன் அசோகன் என்பான். அவனே புத்தர் பிரான் காட்டிய அருளறத்தை உலகெங்கும் பரப்பினான் ; அவருடைய அறவுரைகளை நாடெங்கும் கற்களில் பொறித்து காட்டினான். இங்ஙனம் அறப்பயிர் தழைக்கப் பணி செய்த அசோகன் மகத நாட்டு அரசிற்குப் பின்னும் பெருமையைத் தேடினான். பல நூல்களால் பாராட்டப் பெறும் வேந்தர் பெருமானாகிய விக்கிரமாதித்தன் இங்

நாட்டை ஆண்ட மன்னர்களுள் தலைசிறந்தவனவன். அவன் நாட்டில் கலைகள் பல தழைத்தோங்க நற்பணி புரிந்தான். அவனால் ஆதரிக்கப் பெற்ற அரிய வட மொழிக் கவிஞராகிய காளிதாசர் சாகுந்தலம் என்னும் இனிய காவியத்தை இயற்றியுதவினர்.

புராண இதிகாசங்களால் போற்றப்படும் பாடலி புரம் மகத நாட்டின் பழமையான தலைநகரமாகும். அதுவே இந் நாளில் 'பாட்னு' என்று வழங்கப்பெறு கிறது. அப் பாடலிபுரத்தின் நீடிய பெருமைகளைப் பெருங்கதை என்னும் தமிழ்ப் பெருங்காவியம் விரித் துரைக்கும். அவந்தி, அயோத்தி, அத்தினபுரம் போன்ற பழங்காலத் தலைநகரங்களின் வரிசையில் வைத்து எண்ணப்பெறும் ஏற்றமுடையது பாட்னு நகரம். சித்தார்த்தரால் போதிக்கப் பெற்ற புத்தமதம் முதன் முதல் இந் நாட்டிலேயே வேரூன்றத் தொடங்கியது. அதன் பின்னரேயே நாடெங்கும் கிளைத்துப் பரவலா யிற்று. இவ் உண்மையை அங்கு நிறைந்து காணப் படும் பௌத்த விகாரங்கள் நன்கு புலப்படுத்துகின்றன.

பாரத நாட்டை வளப்படுத்தும் பேராறுகளுள் ஒன்றாகிய கங்கை இந் நாட்டில் பாய்ந்தோடுகிறது. அவ் ஆற்றின் வற்றாத நீர்வளத்தால் எங்கும் நிலவளம் பொங்கிக் கொழிக்கும் பெருமை பெற்றுள்ளது. இத் தகைய வளத்தாலும் பிற நலத்தாலும் பெருமையுற்ற பீகார் மாகாணமே நம் பாரதக் குடியரசின் முதல் தலைவ ராகிய இராசேந்திரர் உதித்தற்கு இடமாயிற்று. ஆதலின் அம் மாகாணம் பாரத நாட்டின் பிற மாகாணங்களினும் ஒரு தனிப்பெருமை உடையதன்றோ !

## எ. இளைஞர் இராசேந்திரர்

வரலாற்றுச் சிறப்பும் புராணச் சிறப்பும் ஒருங்கு வாய்ந்த பீகார் மாகாணத்தின் வடபகுதியில் சரணம் என்றொரு மாவட்டம் உண்டு. அப் பகுதியில் காயஸ்தர் என்னும் வகுப்பினர் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை வணிக மரபினர் என்று சிலர் கூறுவர். இன்றும் தமிழ்நாட்டில் புள்ளிக் கணக்கில் வல்ல கணக்கர் என்னும் மரபினர் வாழக் காண்கிறோம். அவர்கள் வழிவழியாகக் கணக்குப் பணியே புரிந்து வருகின்றனர். அக் கணக்கர் மரபைப் போன்று காயஸ்தர் மரபினரும் கணக்கில் வல்லவராய் விளங்குகின்றனர். அவர்கள் எச்செயலையும் திருத்தமாகவும் திறம் பெறவும் கருத்துடனும் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர். வடஇந்தியாவில் அரசியல் அலுவலகங்களிலும் பெரிய வணிக நிலையங்களிலும் காயஸ்தர் மரபினரே பெரும் பான்மையர் பணிபுரிகின்றனர்.

இத்தகைய காயஸ்தர் மரபில் மகாதேவ சகாயர் என்னும் நிலக்கிழார் ஒருவர் இருந்தார். அவர் வழிவழி யாக வரும் சிறந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தந்தையார் ஒரு சமஸ்தான திவானாகப் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர். மகாதேவ சகாயருக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். அவருள் மூத்தவர் மகேந்திரப் பிரசாத். அவ ருக்குப் பின் பிறந்த மூவரும் பெண்மக்கள். கடைசி யாகப் பிறந்தவரே இராசேந்திர பிரசாத்.

இராசேந்திரர் 1884-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் மூன்றாம் நாள் தோன்றினார். இவர் தோன்றி ஓராண்டிற் குப் பின் 1884-ஆம் ஆண்டில்தான் நம் நாட்டில் காங்கிர

சுப் பேரவை பாங்குற அமைக்கப் பெற்றது. இராசேந்திரர் குழந்தைப் பருவத்திலேயே கூர்த்த மதியுடையவராகக் காணப்பட்டார். அது கண்ட தந்தையார் அவருக்கு இளமையிலேயே வீட்டில் தனிப்பயிற்சி யளிக்க விரும்பினார். முகம்மதிய பண்டிதர் ஒருவரைத் தம் மகனார்க்குப் பயிற்சி யளிக்குமாறு நியமித்தார். அப் பண்டிதர் இராசேந்திரர்க்கு ஒன்பது வயதுவரை மிக்க அன்புடன் தக்க கல்விப் பயிற்சியைக் கொடுத்து வந்தார். இராசேந்திரரின் நுண்ணறிவைக் கண்ட பண்டிதர் அவருக்குப் பன்னூல் அறிவை அவ் இளம் பருவத்திலேயே ஊட்டினார். அவருடைய கல்வி யார்வத்தையும், சிறந்த நினைவாற்றலையும், எதனையும் எளிதில் புரிந்து கொள்ளும் உயர்ந்த திறனையும் கண்டு, பண்டிதர் வியந்து பாராட்டினார்.

மகாதேவ சகாயர் தம் மகனாராகிய இராசேந்திரரை ஒன்பதாவது வயதில் பள்ளியில் கொண்டு சேர்த்தார். அவர் வகுப்பில் முதல்வராகவும் கல்வியில் வல்லவராகவும் விளங்குவதைக் கண்ட பள்ளித் தலைமையாசிரியர் அவரைப் பெரிதும் பாராட்டினார். ஆண்டிற்கு ஒரு முறையே மாணவர்களை மேல்வகுப்பிற்கு மாற்றுவது வழக்கம். ஆனால் இராசேந்திரரை ஆண்டிற்கு இரு வகுப்புக்களாக ஆசிரியர்கள் உயர்த்தி வந்தனர். அதைக் கண்ட தந்தையாரும் தமையனாரும் பள்ளித் தலைமையாசிரியரிடம் சென்று, “அங்ஙனம் செய்ய வேண்டா; ஆண்டிற்கு ஒரு வகுப்பாக உயர்த்தினால் போதும்,” என்று வற்புறுத்தி வேண்டிக் கொண்டனர். இவரது கல்வித் திறமையைக் கண்ட பிற மாணவர்கள் பெரிதும் வியந்தனர். இங்ஙனம் உள்ளவலியால் உயர்ந்தோங்கிய இராசேந்திரர் உடல்வலியில் மிகவும் குறைந்தவராகவே

இருந்தார். என்றும் அவர் நோய்வாய்ப்பட்டவரைப் போன்றே மெலிந்து தோன்றுவார். எனினும் ஓடியாடி விளையாடுவதில் எப்பொழுதும் உற்சாகம் உடையவராகவே காணப்படுவார்.

இராசேந்திரர் குழந்தைப் பருவத்தினராக இருந்த பொழுது பீகார் மாகாணம் வங்காளத்துடன் சேர்ந்து விளங்கிற்று. வங்க மக்கள், பீகார் மக்களை எப்போதும் குறைவாகவே எண்ணி இகழ்வார்கள். வங்காளிகள் உடல் வலியும் உள்ள வலியும் ஒருங்கு படைத்தவர்கள்; மிகுந்த அறிவும் நிறைந்த ஊக்கமும் வாய்ந்தவர்கள். பீகார் மக்கள் இயற்கையிலேயே கள்ளமில்லாத உள்ளத்தவர். எதனையும் அமைதியாகவே செய்யும் இயல்பினர். சுறுசுறுப்போ விறுவிறுப்போ அவர்கள் வாழ்க்கையில் காணப்படா. ஆதலின் அவர்கள் அறிவில் குறைந்தவர்கள் என்றே பலரும் கருதுவர். இராசேந்திரரோ இதற்கு முற்றிலும் மாறுபட்டவராக விளங்கினார்.

இராசேந்திரர் 1902-ஆம் ஆண்டில் கல்கத்தாப் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வு எழுதினார். அத் தேர்வில் அவர் மாகாண முதல்வராகத் தேர்ச்சியுற்றார். அவருக்கு முன்னும் பின்னும் இதுகாறும் பீகார் மாணவர் எவரும் அத் தேர்வில் மாகாண முதல்வராகத் தேர்ச்சியுற்றதில்லை. இராசேந்திரரது தேர்ச்சித் திறமையைக் கண்டு வங்க மக்கள் வியந்தார்கள். அவரைப் பெரிதும் பாராட்டினார்கள். அன்று முதல் பீகார் மாணவரிடத்துக் கொண்ட இழிந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டனர். அக்காலத்தில் பீகாரிலிருந்து வெளிவந்த சிறந்த திங்கள் இதழாகிய 'இந்துஸ்தான் ரிவ்யூ' இளைஞர் இராசேந்திரரை மிகவும் பாராட்டி எழுதியது.

"இளைஞர் இராசேந்திரர் எல்லா வகையிலும் ஏற்றம் படைத்த நல்ல மாணவர். அவர் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் மாகாண முதல்வராகத் தேர்ச்சி யுற்றது பீகார் நாட்டிற்கே மிக்க பெருமையாகும். இனி, அவர் பல்கலைக் கழகப் பட்டத் தேர்வுகள் அனைத்திலும் இங்ஙனமே சிறந்து விளங்குவார் என்று எதிர்பார்க் கிறோம். பிற்காலத்தில் இராசேந்திரருக்குப் பெரும் பதவிகள் பல எளிதில் கிட்டலாம். அவர் நீண்ட வாழ்வு பெற்று நிலவுவாராஞல் அவருக்குக் கிடையாத பெரும் பதவி எதுவுமே இராது. மாகாண உயர்நீதிமன்றத்தில் ஒருகால் அவர் நீதிபதியாக விளங்க நேரலாம்." இங்ஙனம் அப் பத்திரிகை இராசேந்திரரின் எதிர்காலத்தை எண்ணி உரைத்தது.

இராசேந்திரர் மிகவும் இளைஞராக இருக்கும் போதே பயனற்ற இன்பப் பொழுதுபோக்கை விரும்ப மாட்டார். காலத்தைப் பொன்னேபோல் கருதி எந்நேரத் திலும் அறிவைப் பெருக்கும் துறைகளிலேயே சிந்தை யைச் செலுத்துவார். உலகச் செய்திகளை உணர்வதிலும் அவருடைய உள்ளம் முனைந்து நின்றது. தேர்வுகளில் முதன்மையாக வெற்றிபெற வேண்டும் என்று விரும் பினரேயன்றி அத் தேர்ச்சியால் பெரும் பொருளைத் திரட்டி இனிது வாழவேண்டும் என்று அவர் எண்ண வில்லை. எல்லோருக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணமே அவரது உள்ளத்தில் திண்ணமாக வேரூன்றி நின்றது.

## அ. இராசேந்திரர் கலைநலம்

கலாசாலையில் சென்று கற்பதனால் மட்டும் அறிவு பொற்புற அமைந்துவிடாது. நூல்களை நுட்பமாகக் கற்பதனாலும் நுண்ணறிவு ஏற்பட்டுவிடாது. கற்றுணர்ந்த பெருமக்களோடு பற்றுடன் பழகவேண்டும். பேரறிஞர்கள் பேசும் சீரிய பேருரைகளைப் பலகால் கேட்கவேண்டும். பல்வேறு துறைகளில் வல்லாருடைய நல்லுரைகளையும் செவிமடுக்க வேண்டும். பற்பல இடங்களையும் நேரில் சென்று காணவேண்டும். இங்ஙனம் நூலறிவுடன் உலகறிவையும் பெருக்கிக் கொள்பவரே சிறந்த கலைஞராகத் திகழமுடியும்.

இராசேந்திரரைப் பல்கலைக் கழகக் கல்வி பெறுமாறு செய்ய விரும்பிய பெற்றோர் அவரைக் கல்கத்தா மாகாணக் கல்லூரியில் கொண்டு சேர்த்தனர். அந்நாளில் பீகார், வங்கம், ஒரிசா, அஸ்ஸாம், பர்மா ஆகிய மாகாணங்கள் பலவற்றிற்கும் கல்கத்தாப் பல்கலைக் கழகம் ஒன்றே நின்று நிலவியது. ஆதலின் பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களும் கல்கத்தா மாகாணக் கல்லூரியில் கலைபயில வந்தனர். மேலும் கல்கத்தாவே பீகார் மாகாணத்திற்கும் இந்திய நாட்டிற்கும் தலைநகராக விளங்கிற்று. அதனால் நாட்டின் பெருந்தலைவர்களும் உலகப் பேரறிஞர்களும் அடிக்கடி அந் நகரத்திற்கு வருகை புரிவர். உலகியல், அரசியல், அறிவியல் பற்றிய விரிவுரைகள் பல, அந் நகரில் நிகழ்ந்துகொண்டே இருக்கும்.

மாகாணக் கல்லூரியில் எப். ஏ. வகுப்பில் சேர்ந்த மாணவராகிய இராசேந்திரர் எல்லா மாணவர்களுடனும் இனிது பழகினார். அவர் பல்கலைக் கழகப் புகுமுகத்

தேர்வில் மாகாண முதல்வராகத் தேறியதனால் மாண வர்கள் எல்லோரும் அவரிடம் விருப்புடனும் மதிப் புடனும் பழகி வந்தனர். அந் நாளில் கல்கத்தாவுக்குக் கலை பயில வரும் பீகார் மாணவர்கள் புதிய நகரைக் கண்டு பெரிதும் திகைப்புற்று நிற்பர். உணவும் உறையுளும் நன்முறையில் பெறுதற்கு நாடி வருந்துவர். இதனை அறிந்த இராசேந்திரர் அவர்களுடைய குறைகளை அகற்றுவதற்காகப் 'பீகார் மாணவர் சங்கம்' என்றொரு சங்கத்தை அமைத்தார். அதன் வாயிலாகக் கல்கத்தாவிற்குக் கலை பயில வரும் பீகாரைச் சேர்ந்த புதிய மாணவர்க்கு வேண்டும் வசதிகளைச் செய்து கொடுத்தார்.

பீகாரைச் சேர்ந்த மாணவர் அனைவரும் அச் சங்கத் தில் நாள்தோறும் கூடுவர். தமக்குள்ள குறைகளைப் போக்கிக் கொள்ள வழி வகைகளை நாடுவர். ஒருவரை யொருவர் நன்றாகத் தெரிந்து பழகி நட்புக் கொள்வர். இராசேந்திரர் அச் சங்கத்தின் சார்பில் சொற்பயிற்சி மன்றங்களையும் சொற்போர் மன்றங்களையும் இடை யிடையே நடைபெறுமாறு செய்தார். மாணவர்கள் பேச்சு வன்மை பெறுவதற்கும் ஒரு பொருளின் நன்மை தீமைகளை ஆராய்ந்து உரைக்கும் சொற்போர் வல்லமை அடைவதற்கும் தக்க பயிற்சி அளித்தார். இதனால் பீகார் மாணவர்கள் நாளடைவில் அறிவிலும் ஆற்ற லிலும் பெருமையுற்று வந்தனர். அவர்களுக்குள் ஒற் றுமையும் உள்ளன்பும் ஓங்கி வளர்ந்தன. அது கண்ட வங்க மாணவர்கள் பீகார் மாணவர்களைப் பெரிதும் மதிக்கத் தொடங்கினர்.

இங்ஙனம் இராசேந்திரர் மாணவராக இருக்கும் போதே தமது மாகாணம் பெருமை யெய்துமாறு அரும்

பாடுபட்டார். வங்க மாணவரும் பீகார் மாணவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்று விரும்பிய இராசேந்திரர் தாம் நிறுவிய பீகார் மாணவர் சங்கத்தின் சார்பில் மாணவர் மாநாடு ஒன்றைக் கூட்டினார். அம் மாநாட்டிற்கு வங்க மாணவரையும் அன்புடன் வரவேற்றார். அதனால் வங்கத்திற்கும் பீகாருக்கும் ஒற்றுமை வளர்ந்தோங்கியது. அதனைக் கண்ட இராசப் பிரதிநிதியான கர்ஸன் பிரபு வங்க மக்களின் ஒற்றுமையைக் குலைக்க வழிதேடினார். உடனே வங்கப் பிரிவினையை உண்டு பண்ணினார். அதனை எதிர்த்து வங்க மக்கள் பெருங் கிளர்ச்சி செய்தனர். மக்களின் எதிர்ப்பை, அரசாங்கம் சிறிதும் மதிக்கவில்லை.

அச் சமயத்தில் நாட்டுத் தலைவர்கள் பலர் தேசிய உணர்ச்சியை உண்டுபண்ணும் வீர வாசகங்களை நாடெங்கும் முழக்கினர். "பிற நாட்டுப் பொருள்களையும் ஆடை யணிகளையும் வெறுத்து விலக்க வேண்டும்; உள்நாட்டு ஆடைகளையும் பொருள்களையுமே உபயோகிக்க வேண்டும்," என்று அத் தலைவர்கள் வற்புறுத்திப் பேசினர். அதனால் பலர் அயல்நாட்டுப் பொருள்களை மலைபோல் குவித்துத் தீக்கு இரையாக்கினர். மக்கள் எல்லோரும் உள்நாட்டுப் பொருள்களை மிக்க ஆர்வமுடன் வாங்கத் தலைப்பட்டனர். இவற்றை யெல்லாம் கண்ணுற்ற இராசேந்திரர் நாட்டிற்குச் சேவை புரியும் நற்றொண்டராய் விளங்கப் பற்றுக்கொண்டார். அவரும் வங்கப் பிரிவினைக் கிளர்ச்சியில் பங்கு கொண்டார். பீகாரைச் சேர்ந்த பிற மாணவர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு செய்தார்.

கல்லூரி மாணவராக இருந்து கொண்டே தேசப் பணி புரிந்த இராசேந்திரர் 1904-ஆம் ஆண்டில் எப். ஏ.

தேர்விலும் 1906-ஆம் ஆண்டில் பி. ஏ. தேர்விலும் மாகாண முதல்வராகத் தேர்ச்சியுற்ருர். இச் சமயத்தில் தான் கல்கத்தா நகரில் காங்கிரசுப் பேரவை கூடியது. இராசேந்திரர் அப் பேரவை மாநாட்டில் தொண்டு புரிய விரும்பினர். பேரவைத் தொண்டர் படையில் சேர்ந்து அவர் சிறந்த பணியாற்றினர். மாநாட்டிற்கு வந்திருந்த காங்கிரசுத் தலைவர்கள் பலர் இராசேந்திரரின் பெருந் தொண்டையும் பேரறிவையும் கண்டு வியந்து பாராட்டினர். எதிர்காலத்தில் இவர் இணையற்ற தலைவராக இலகுவார் என்று வாயார வாழ்த்தி மகிழ்ந்தனர். அந்நாள் முதல் இராசேந்திரர் நாட்டுப் பற்று மிகுந்து, நாடு நலம்பெறுவதிலேயே தமது கருத்தை யெல்லாம் செலுத்தினர். சிறந்த தேசியத் தொண்டராய்த் திகழ்ந்தார் அவர் தமது கல்லூரிப் படிப்பையும் உடல் நலத்தையும் மறந்தார்.

பல்கலைக் கழகத் தேர்வுகளில் எல்லாம் மாகாண முதல்வராகவே தேர்ந்து பற்பல பரிசுகளும் பொற்பதக்கங்களும் பெற்று, பி. ஏ. வரை சிறந்த முறையில் தேர்ச்சியுற்ற இராசேந்திரர் எம். ஏ. தேர்வில் அம் முறையில் தேர்ச்சி பெற முடியவில்லை. அவர் தமது நாட்டத்தை யெல்லாம் நாட்டுப் பணியில் செலுத்தியதே அதற்குக் காரணமாகும். இச் சமயத்தில் இராசேந்திரரின் தந்தையார் நோய்வாய்ப்பட்டு இறந்தார். அந் நிகழ்ச்சியும் அவரது உள்ளத்தில் ஓர் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. இவ்விரு காரணங்களாலும் அவர் உடனே சட்டக்கல்லூரியில் சேர்ந்து பயில முடியவில்லை.

அக் காலத்தில் ஓரளவு செல்வம் படைத்த பெற்ருேர் தம் பிள்ளைகள் இலண்டனில் சென்று ஐ. சி. எஸ்.

பட்டத் தேர்வில் வெற்றி பெற்று வருவதைப் பெரிதும் விரும்புவர். அப் பட்டத்தைப் பிள்ளைகள் பெற்று விட்டால் அதுவே பெரும் பேறு என்றும் எண்ணி இன்புறுவர். ஆதலின் இராசேந்திரரின் பெற்றோரும் அவரது அறிவுநலத்தைக் கண்டு அவரை எவ்விதத்திலும் ஐ. சி. எஸ். தேர்வுக்குப் படிக்கவைக்க வேண்டுமென்று விரும்பினர். இராசேந்திரருக்கோ அதில் உள்ளம் செல்லவில்லை. இங்கிலாந்துக்குச் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பினால் நாட்டில் பெரும் பொருள் ஈட்டலாம்; ஏழை மக்கட்கும் நன்கு உதவி புரியலாம். நாட்டிற்கும் மிகுந்த சேவை செய்யலாம் என்று அவர் எண்ணினார். பல காரணங்களால் அவரது எண்ணமும் நிறைவேறாது போயிற்று.

கலைத் தலைவர் என்று கற்றோர் போற்றும் எம். ஏ. பட்டம் பெற்ற இராசேந்திரர் பீகாருக்குத் திரும்பினார். அச் சமயத்தில் முசபர்பூர் கலாசாலையில் ஆங்கிலம் கற்பிக்கத் தகுந்த பேராசிரியர் இன்மையால் மாணவர் பெரிதும் வருந்தினர். கல்வி அதிகாரிகளும் அக் கலாசாலையின்மீது வெறுப்புக் கொண்டனர். மேலும் அக் கலாசாலை நிதி வசதியின்றி வருந்தியது. இராசேந்திரர் கல்லூரிப் படிப்பை முடித்துத் திரும்பியுள்ள செய்தியைக் கல்வி அதிகாரிகள் அறிந்தனர். அவரை முசபர்பூர் கலாசாலையில் ஆங்கிலப் பேராசிரியராக நியமனம் செய்யுமாறு கலாசாலை ஆட்சியினர்க்கு அறிவித்தனர். அங்ஙனமே கலாசாலை ஆட்சியினரும் இராசேந்திரரைப் பேராசிரியப் பணியாற்றுமாறு அன்புடன் வேண்டிக் கொண்டனர்.

நாட்டுப் பற்றில் முதிர்ந்து விளங்கிய நற்றொண்டராகிய இராசேந்திரர் பேராசிரியப் பணியை விருப்புடன்

ஏற்றுக் கொண்டார். மாணவர்களே நாட்டின் மாண்புடைய செல்வம்; அவர்களைச் சிறந்த தேசத்தொண்டர்களாய் ஆக்குவது நல்லாசிரியர் கடன்; பல தொண்டர்களைப் படைத்துவிடும் ஆசிரியப் பணி மாசற்ற அரும்பணியாகும் என்று எண்ணினார் இராசேந்திரர். ஓராண்டளவே அப் பேராசிரியப் பணியை அவர் சீருற நடாத்தினார். அதற்குள் அக் கலாசாலைக்குத் தக்க நிதி வசதியையும் மிக்க புகழையும் தேடிக்கொடுத்தார். மக்களும் மாணவர்களும் இராசேந்திரர் தக்க நல்லாசிரியர் என்று தலைக்கொண்டு போற்றினர்.

---

## கூ. கோகலேயும் இராசேந்திரரும்

இந்திய நாட்டின் விடுதலைக்கு உழைத்த வீரத் தியாகிகள் பலருள் கோபாலகிருஷ்ண கோகலேயும் ஒருவராவர். அவர் தேசப்பணியே தெய்வத் திருப்பணியென வாழ்நாள் முழுதும் ஓயாது உழைத்த உத்தமர். அவர் பூனா நகரில் இந்திய ஊழியர் சங்கம் என்னும் ஒரு சங்கத்தை நிறுவியுள்ளார். நாட்டிற்குத் தொண்டு செய்யும் விருப்புடைய நல்லோரையெல்லாம் அவர் அச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்து வருவார். அதில் சேருவோருக்கு அரை வயிற்று உணவுக்கு வேண்டும் பொருள் உதவப்பெறும். அதனை மனநிறைவுடன் பெற்றுக்கொண்டு பொதுநலத் தொண்டே என்றும் புரிந்துகொண்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் இந்திய ஊழியர் சங்கத்தின் உறுப்பினராக விளங்கி, இன்றும் காலமெல்லாம் பொதுநல ஊழியம் புரிந்துவரும் பலர் உளர்.

பொதுநலம் பேணும் புனிதராகிய கோகலே தாம் நிறுவிய சங்கத்தில் பீகார்ப் பகுதியிலிருந்து கூர்த்த மதியுடைய ஒரு சில இளைஞரை உறுப்பினராகச் சேர்க்க வேண்டுமென விரும்பினார். அப்பொழுது இராசேந்திரருடைய கலை நலத்தையும் கனிந்த மனத்தையும் சிறந்த தொண்டையும் பற்றிக் கேள்வியுற்றார். உடனே அவருக்குக் கடிதமொன்று எழுதினார். அவரை நேரில் வந்து தம்மைச் சந்திக்குமாறு வேண்டினார். பொதுநலத் தொண்டில் பேரார்வம் கொண்ட இராசேந்திரர், கோகலேயை நேரில் சென்று கண்டார். இருவரும் பல மணி நேரம் உரையாடிக்கொண்டிருந்தனர். இறுதியில் இராசேந்திரர் பெற்றோர் இசைவைப் பெற்று வருவதாகக் கூறிக் கோகலேயிடம் விடைபெற்றுத் திரும்பினார்.

இராசேந்திரருக்கு இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டுமெனப் பேரார்வம் பிறந்தது. அப்போது அவர் தந்தையாராகிய மகாதேவ சகாயர் மறைந்துவிட்டார். அவர் தமையனாராகிய மகேந்திரர் என்பாரே குடும்பப் பொறுப்பையெல்லாம் ஏற்றுக் கவனித்து வந்தார். தாயார் நோய்வாய்ப்பட்டுப் பாயும் படுக்கையுமாகக் கிடந்தார். ஆதலின் தமையனாரது இசைவைப் பெற இராசேந்திரர் யாது செய்வதென எண்ணினார்.

மகேந்திரர் தம் தம்பியாரை நன்னிலைக்குக்கொண்டு வரப் பன்னாளும் பெரிதும் முயன்றவர். ஆதலின் இராசேந்திரர் அவரைத் தந்தையைப்போல் மதித்துத் தனிப்பட்ட பணிவுடன் அவர்பால் நடப்பவர். அவர் முன்னால் நின்று பேசவும் அஞ்சுவார் இராசேந்திரர்.

அவரும் தம்பியாரிடத்துப் பேரன்பு பூண்டவர். தம்பியால்தான் குடும்பம் செல்வத்தால் தழைக்கவேண்டும் என்று நம்பியிருப்பவர். அவரிடத்து எங்ஙனம் தமது எண்ணத்தைத் தெரிவித்து இசைவு பெறுவது என்று பலவாறு எண்ணினர் இராசேந்திரர். நேரில் தமது கருத்தைக் கூறுதற்கு அஞ்சிய அவர் தமையனருக்குக் கடிதமொன்று எழுதி அனுமதி வேண்டினர். இராசேந்திரர் அக் கடிதத்தில் தமது இதயத்தையே திறந்து காட்டியிருந்தார். அவரது உயர்ந்த பண்புகளை விளக்கும் கண்ணாடியாக அக் கடிதம் விளங்கியது.

“அன்புமிக்க சகோதரரே! அல்லும் பகலும் ஒரே இல்லத்தில் தங்களுடன் ஒருங்கு வாழும் நான் எனது உள்ளக் கருத்தைத் தங்களிடம் நேரில் கூற அஞ்சுகின்றேன். ஆதலின் இக் கடித வாயிலாகத் தங்களிடம் என் கருத்தைப் பணிவுடன் தெரிவிக்கிறேன்.

“இருபது நாட்களுக்கு முன்னல் கோபாலகிருஷ்ண கோகலேயை நான் சென்று கண்டு வந்த செய்தியைத் தாங்கள் அறிவீர்கள். அவர் தாம் நிறுவியுள்ள இந்திய ஊழியர் சங்கத்தில் என்னை உறுப்பினனாகச் சேருமாறு உள்ளன்புடன் கூறினர். நாட்டுப் பணியில் பெரிதும் விருப்பமுடைய நான் அதைப் பற்றி இந்நாள்வரை எண்ணி ஆராய்ந்தேன். இறுதியில் அச் சங்கத்தில் சேர்ந்து வாழ்நாள் முழுதும் நாட்டிற்குத் தொண்டாற்ற உறுதி கொண்டேன்.

“நமது குடும்பத்தின் எதிர்காலம் என்னை நோக்கி இருக்கிறது என்பதை நான் அறிவேன். ‘சட்டத் தேர்வில் வெற்றியுற்று வழக்கறிஞனாகத் தொழில் புரிந்து பெரும் பொருளைத் தேடித் தருவேன்’ என்று தாங்கள் எண்ணி

யுள்ளீர்கள். இந் நிலையில் எனது கருத்துத் தங்களுக்குத் திகைப்பையும் வியப்பையும் கொடுக்கும். தங்கள் எண்ணமெல்லாம் சிதறிப்போகும். நாட்டுப் பணியில் நான் இறங்கிவிட்டால் நம் குடும்ப நலம் குன்றிப்போகும் என்பதை நன்றாக அறிவேன். ஆயினும், நம் குடும்ப நலத்தினும் நாட்டின் நலமே விரும்பத் தக்கதெனை நம்பு கின்றேன்.

" தம்பி பொருளீட்டத் தொடங்கிவிட்டால் நமக்குக் குடும்பச் சுமை குறையும் என்று கருதி யிருப்பீர்கள். எனது பிரிவால் தங்களுக்கு அச் சுமை பெருகத்தான் செய்யும். எனினும் நாட்டிலுள்ள பல கோடி மக்களின் நலத்தைக் கருதி எனக்கு அனுமதி தருதல் வேண்டும். அங்ஙனம் செய்வதால் தாங்கள்தாம் சிறந்த தியாகி ஆவீர்கள். நான் இதுகாறும் எளிய வாழ்விலேயே பழகியவன். ஆதலின் இந்திய ஊழியர் சங்கத்தில் சேருவதால் நான் மிகுந்த தியாகம் செய்துவிட்டேன் என்று சொல்லமுடியாது. அச் சங்கத்திலிருந்து உதவி யாகக் கிடைக்கும் பணம் எனது எளிய வாழ்வுக்குப் போதுமானதே.

" தாங்கள் என்பால் தந்தையினும் மேலாக அன்பு செலுத்தி வருகிறீர்கள். எனக்கும் தங்களிடம் அள வற்ற அன்பும் மதிப்பும் உண்டு. அவை என்றும் வளர்ந்தோங்குமேயன்றிக் குறைந்து மறைந்து போகாது. தற்காலம் நாட்டில் செல்வர்க்கே சிறப்பும் புகழும் சேர வருகின்றன. அவர்களுக்கே பட்டமும் பதவியும் எளிதில் கிட்டுகின்றன. அவையெல்லாம் நிலைத்திருப் பனவல்ல. செல்வத்தால் செழிப்புற வாழலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். செல்வம் என்பது சிந்தையின்

நிறைவே. இன்பம், துன்பம் என்பனவெல்லாம் மனத்தில் எழும் எண்ண வேறுபாடுகளே. பெருஞ்செல்வர்களைவிட ஏழைமக்களே இன்பமுடன் வாழ்கின்றனர். ஆதலின் வறுமையைக் கண்டு வெறுக்க வேண்டாம். உலகில் சிறந்து விளங்கிய பெரியோர்கள் அனைவரும் வறியவர்களே. உலகத்தார் பொருள் இல்லாதவர்களை இகழ்ந்து பேசுவது இயற்கை. அவர்கள் உலகினின்று மறைந்த பிறகு அவரைப் பற்றி எண்ணுவார் யாவர்? ஆனால் பெரியோர்களை உலகம் என்றும் மறவாது.

"நாட்டிற்கு உழைத்து நல்லவன் என்று பெயர் வாங்கவே நான் பேராசைப் படுகிறேன். ஐ. சி. எஸ். தேர்வு எழுதும் பொருட்டு என்னை இலண்டனுக்கு அனுப்ப விருப்பம் கொண்டீர்கள். நான் அத் தேர்வில் வெற்றி பெற்றுத் திரும்பினால் அரசாங்கத்தில் அடிமை உத்தியோகத்தையே மேற்கொள்ள நேரும் என்று நினைத்தேன். அதனால் நாட்டிற்குச் சிறிதும் தொண்டு செய்ய முடியாது என்று தெரிவித்தேன். அன்று கூறியது போலவே இன்றும் கூறுகின்றேன்.

"பாரத நாட்டிற்குப் பணிபுரிய வேண்டுமென்ற பேராசை என்னைவிட்டு என்றும் அகலாது. அதற்கு மாறாக நான் வழக்கறிஞனாகி உயர்நீதி மன்றத்தில் தொழிலாற்றி எவ்வளவு செல்வத்தை ஈட்டினாலும் எனது உள்ளம் அமைதியுறாது. நாட்டுப் பணியில்தான் நான் நல்லின்பத்தைக் காணமுடியும் என்று நம்புகிறேன். அதனால்தான் பேரும் புகழும் அடையலாம். இவ் எண்ணத்தைத் தங்களிடமிருந்தே நான் கற்றுக்கொண்டேன். கோகலே ஒரு பெருஞ் செல்வரோ? அவர் மிகவும் ஏழைமகனே. எனினும் அவரது தேசப் பணி

யால் இன்று அவருக்குத் திருவும் புகழும் பெருகி விட்டன. இந்திய நாட்டில் அவருடைய செல்வாக்கு இல்லாத இடமே இல்லை. அவரைவிட நம் குடும்பம் வறுமையுடையதோ? நமக்கு ஓரளவு நில புலங்கள் உண்டன்றோ? நம்மிலும் மிகக் குறைந்த வருவாயுடைய குடும்பங்கள் நாட்டில் பல்லாயிரக் கணக்கில் உள்ளன வன்றோ? ஓரளவு வருவாயுடைய நம் குடும்பம் அதைக் கொண்டு நலமுடன் வாழலாமே.

"நான் இந்திய ஊழியர் சங்கத்தில் சேருவதால் குடும்பத்தின் முழுப்பொறுப்பும் தங்களைச் சார்ந்துவிடுமென்று கருதல் வேண்டா. எனது வாழ்வுக்கு ஓரளவு பணம் அச் சங்கத்திலிருந்து கிடைப்பதுடன் என் குடும்பத்தைக் காக்கவும் சிறிது பொருள் கொடுக்கப்படும். என் குழந்தைகளின் கல்விக்காகவும் சிறிது பொருள் உதவி செய்யும். அவற்றையெல்லாம் தங்கட்குத் தவறாது அனுப்பிவைப்பேன். ஆதலின் தாங்கள் என் குடும்பத்தைப் பற்றிக் கவலை கொள்ளவேண்டா. இச் செய்தியை என் மனைவிக்கும் தெரிவித்துள்ளேன்.

"மக்களிடையே பெருமை என்பது செல்வத்தால் மட்டும் வருவதன்று. தூய்மை, வாய்மை, தொண்டு முதலிய சிறந்த பண்புகளால் ஏற்படும் பெருமையே என்றும் அழியாதது. பொருளைப் பெரிதென்று கருதாமல் பொதுநலத் தொண்டே பெரிதென்று கருதும் பெருமக்களும் உண்டு என்பதைத் தாங்கள் உலகறியச் செய்ய வேண்டும். பல்கோடி மக்களின் பாராட்டிற்குத் தாங்கள் பாத்திரமாக வேண்டும். எனது உள்ள எழுச்சியை உணர்ந்து எனக்கு இசைவு தந்தருளுங்கள். தங்கள் பால் என்றும் நன்றி உள்ளவனாய் இருப்பேன். இதற்குத்

தாங்கள் இசைவு தாராவிட்டால் மாருத கவலை என் மனத்தில் குடிகொள்ளும்.

"எனது கருத்தைத் தாயாருக்கு அறிவிக்கத் துணிவு பிறக்கவில்லை. எனது பிள்ளைச் சிற்றறிவால் ஒருகால் தந்தையாருக்கு வருத்தம் விளைத்துவிட்டேன். அதுவே அவர் மறைவுக்குக் காரணமாய்ப் பேரின்னல் தந்து விட்டது. ஆதலின் வயது முதிர்ந்து நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் தாயாருக்கு இச் செய்தி அதிர்ச்சியை உண்டு பண்ணிவிடலாம். அதனாலேயே அவர்கட்கு இதனை அறிவிக்க விரும்பவில்லை. தாங்கள் அனைத்தையும் நினைத்துப் பார்த்து எனக்கு இனிய மறுமொழியைத் தருவீர்கள் என்று எதிர்பார்த்திருக்கிறேன்."

இவ்வாறு தமது உள்ளத்தைத் தெளிவுற விளக்கி எழுதியிருந்த இராசேந்திரரின் கடிதத்தைத் தமையனாராகிய மகேந்திரர் படித்துப் பார்த்தார். அவர் உள்ளம் ஒரு நிலையில் இல்லை. குடும்பமாகிய கடலில் கவலைகளாகிய அலைகள் மலைபோல் பொங்கி வரலாயின. அவர் துயரக்கடலுள் மூழ்கிவிட்டார்.

---

## கo. இராசேந்திரரின் சகோதரப்பற்று

ஒருவர்க்கு உடன்பிறந்த சகோதரர்கள், உற்றதோள் போன்றவர்கள். 'உடன்பிறப்பை இழந்தால் தோள் வலி போம்' என்றே உரைப்பர் தமிழ் மூதாட்டியார். தமையன் தந்தைக்குப் பின் தந்தையின் நிலையிலிருந்து தன்னுடன் பிறந்தாரைப் பேணக் கடமைப்பட்டவன். தம்பி, தமையனுக்குப் பின் குடும்பத்தைத் தாங்கும் பொறுப்புடையவன். தமக்கை, ஒருவர்க்குச் சிறந்த

வலக்கையைப்போல் நின்று உதவும் தகவுடையாள் தங்கை, ஒருவரது கை போல் நின்று மானம் காக்கும் மாண்புடையாள். உடுக்கை இழந்தவன் கையைப்போல இடுக்கண் களையும் இயல்புடையாரே தங்கையும் தமக்கையுமாவர். இங்ஙனம் ஒருவர்க்குச் சகோதரர் உறுதுணையாக நின்று உதவும் கடமையுடையோராவர்.

இராசேந்திரருக்கு வாய்த்த மூத்த சகோதரராகிய மகேந்திரர் மிகுந்த மதி படைத்தவர். அவர் தம் சகோதரர்களிடத்துப் பேரன்புடையவர். தம்பியாராகிய இராசேந்திரரின் மதி நலத்தைக் கண்டு அவரைச் சிறந்த கலைஞராக்கப் பெரிதும் முயன்றவர். இராசேந்திரர் எம். ஏ. வகுப்பில் பயின்று கொண்டிருக்கும்போது தந்தையார் இறந்துவிட்டார். அதன்பின்னர் மகேந்திரரே குடும்பப் பொறுப்பை யேற்றுத் தம் சகோதரர்களை யெல்லாம் தக்கவாறு பேணிக் காத்துவந்தார். இராசேந்திரரைச் சட்டக் கல்லூரியில் சேர்த்துத் தேர்ச்சி பெறுமாறு செய்ததும் அவரே. தம் சகோதரிகள் மூவர்க்கும் தக்க மணவாளர்களைத் தேடி மணம் புரிந்துவைத்ததும் அவரே. ஆதலின் இராசேந்திரருக்குத் தம் தமையனாரிடத்துத் தனிப்பெரு மதிப்புண்டு. அவரிடத்து அளவற்ற நேசமும் பாசமும் உடையவர் இராசேந்திரர். மகேந்திரரும் அங்ஙனமே தம்பியைப் பெரிதும் நேசித்து வந்தார்.

இந்திய ஊழியர் சங்கத்தில் சேரவேண்டுமென்ற தமது விருப்பத்தைக் குறித்து இராசேந்திரர் எழுதிய கடிதத்தைக் கண்டதும் மகேந்திரர் மலைத்து விட்டார். அவரது முகத்தில் கவலை கொந்தளித்து நின்றது. அவர் கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகி வழிந்தது.

"ஐயோ! அண்மையில்தானே தந்தையாரை இழந்தோம். அந்த மனத்துயர் மாறுவதற்கு முன்னால் தம்பியையும் இழந்து விடுவதா! நம் குடும்பம் மிகவும் பெரிய தாயிற்றே! அதனை நாம் தனித்து எவ்விதம் காப்பது! குறைந்த வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவது எப்படி? தம்பியின் பிரிவு, தாயாருக்குக் கேடு விளைக்குமே!" என்று பலவாறு மனம் உழன்று கொண்டிருந்தார்.

இவ் வேளையில் இராசேந்திரர் தம் தமையனார் எதிரே வந்தார். அவர் கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு கண்ணீர் வடிக்கும் காட்சியைக் கண்டுவிட்டார். அவ்வளவுதான், மகேந்திரர், 'தம்பீ!' என்று வாய்விட்டுக் கதறி அழத் தொடங்கிவிட்டார். அதைக் கண்டதும் இராசேந்திரரும் கோவெனக் கதறி அழுதார். தமையனார் முகத்தைப் பார்த்ததும் அவரது அகம் உருகி விட்டது. ஒன்றுமே பேசுதற்கு நாவெழவில்லை. சகோதரப் பற்று ஒன்றே அவர் உள்ளத்தில் தலைநிமிர்ந்து நின்றது. உடனே அவ்விடத்தைவிட்டு அகன்றார் இராசேந்திரர். மகேந்திரருக்கு மற்றொரு கடிதம் வரைந்து அவரது மேசையில் வைத்தார்.

"என்பால் அன்புமிக்க சகோதரரே! நான் இன்று தங்கள் முகத்தை நோக்கியதும் திகைத்துவிட்டேன். தங்கள் உள்ளக் கருத்தையும் தெள்ளிதில் தெரிந்து கொண்டேன். தங்களிடம் என்ன சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை. எத்தகையார்க்கும் எச் சமயத்தும் எள்ளளவு துன்பமும் செய்யக்கூடாது என்பதே என் கருத்து. சிற்றுயிர்க்குச் சிறு தீங்கு புரிந்து விட்டாலும் அதுபற்றி அழுது புலம்புவேன். இந் நிலையில்

தங்களுக்கோ தாயாருக்கோ சிறு துயர் விளைக்கவும் கருதேன். இந்திய ஊழியர் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எனது பேராவல். அதற்குத் தங்கள் இசைவையே நாடியிருந்தேன். தங்கள் சொல்லை என்றும் தட்டி நடந்ததில்லை. இனியும் அங்ஙனம் நடவேன்.

" இன்று தாங்களே எனக்குத் தந்தையாராவீர்கள். தந்தையாருக்குப்பின் தந்தையில்லாத் துயரத்தைத் தணியாத பேரன்பால் தணித்துப் பேணி வருகிறீர்கள். தங்கள் அன்பை நான் ஒருநாளும் மறவேன். தங்கட்குத் துன்பம் தருவேனாயின் நான் நன்றி மறந்த பெரும் பாவியாவேன். மூத்தோர் சொல்லும் வார்த்தை அமுதம் என்பார்கள். ஆதலின் தங்கள் சொற்படி நடப்பதில் தான் எனக்குத் தனியின்பம் உண்டு. தங்கள் கருத்தை மறைக்காமல் உரைத்துவிட்டீர்கள். அதனை உணர்ந்த எனது உள்ளம் நிறைந்த ஆறுதல் அடைந்துவிட்டது.

" தங்கள் தம்பியாகிய நான் தங்கள் உத்திரவின்றி எதுவும் செய்யமாட்டேன். தங்கள் கருத்துக்கு மாறாகவும் நடவேன். எனது வாழ்நாள் முழுதும் தங்கள் மனம் நோவாமல் நடந்துகொள்வேன். இளம் பருவத்திற்குரிய குறைகள் எல்லாம் என்பால் நிறைந்துள்ளன. அதனால் திடீரென்று ஒன்றில் உள்ளத்தைத் திருப்பிவிட்டேன். தாங்கள் என்னிடம் எல்லையில்லாத அன்பு கொண்டவர்கள். அவ் அன்பால் என்னை மன்னிக்க வேண்டுகிறேன். தங்கட்கு மனத்துயர் விளைத்ததைக் குறித்துப் பெருத்த வருத்தமடைகிறேன். அங்ஙனம் செய்யவேண்டுமென்று நான் கனவிலும் கருதியதில்லை. தந்தையாருக்கு ஒருகால் சிந்தையில் துயரத்தைக் கொடுத்தேன். அஃது அவர் உயிருக்கே

அழிவைத் தந்தது. தந்தையார் நிலையில் இன்று விளங்கும் தங்கட்கும் துயர் இழைத்துவிட்டேனே! எனது பிழையைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

“இந்திய ஊழியர் சங்கத்தில் சேர வேண்டுமென்ற எண்ணம் இன்றோடு என் உள்ளத்தைவிட்டு அகன்றது. ஆயினும் நாட்டிற்குப் பணிபுரிய வேண்டும் என்ற எண்ணம், என் உள்ளத்தில் திண்ணமாகவே இருக்கிறது. அதனால் என்னாலான பொதுநலப் பணிகளைப் புரிந்துகொண்டே இருப்பேன். அதற்குத் தாங்கள் இசைவு தந்து ஆதரிக்கவேண்டும்.”

இங்ஙனம் இராசேந்திரர் எழுதிவைத்த கடிதத்தை மகேந்திரர் கண்டார். அதனைத் திரும்பத் திரும்பப் பன்முறை படித்துப் பார்த்தார். தம்பியின் உள்ளம் மாறியதைக் கண்டு தேறுதல் அடைந்தார். இராசேந்திரரின் நேயம் நிறைந்த தூய உள்ளத்தையும் நேரில்லாத பணிவையும் கண்ட மகேந்திரர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். தம்பியால் தம் குடும்பம் தழைத்தோங்கும் என்று நம்பி இன்புற்றார்.

---

## கக. இராசேந்திரர் வழக்கறிஞர்

முன்னாளில் அரசாங்க உத்தியோகம் பெறுவதைப் பெரும்பேறாகக் கருதுவர் மக்கள். அதற்கு அடுத்த தகுதியில் வழக்கறிஞராகத் தொழில் புரிவதையே பெரிதும் விரும்புவர். நுண்ணறிவும் திண்ணிய சொல் வன்மையும் உடைய வழக்கறிஞர்க்கு வருவாய் வெள்ளம் போல் வந்து பெருகும். அதனால் இராசேந்திரரைச் சட்டத் தேர்வில் தேர்ச்சியடையுமாறு செய்ய வேண்டு

மென அவர் தமையனூர் ஆவல் கொண்டார். இராசேந்திரரும் 'சட்டக் கல்லூரியில் பயின்று வந்தால் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து பெரும்பொருளைத் திரட்டலாம்; தன் குடும்பத்தையும் நன்கு பாதுகாத்து, வறியவர்க்கும் மிகுதியாக உதவலாம்' என்று எண்ணினூர்.

தமையனூர் விருப்பிற்கிணங்க இராசேந்திரர் கல்கத்தா நகரை அடைந்து சட்டக்கல்லூரியில் சேர்ந்தார். 1911-ஆம் ஆண்டில் சட்டத் தேர்வில் வெற்றி பெற்று வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். அந்நாளில் பீகார் மாகாணத்தில் உயர்நீதிமன்றம் இல்லை. ஆகையால் கல்கத்தா உயர்நீதிமன்றத்திலேயே அவர் தமது பணியைத் தொடங்கினூர். அவர் மாணவராக இருக்கும்பொழுதே சிறந்த மதிநலம் படைத்தவர் என்பதைப் பலரும் அறிவாராதலின் அவரிடம் ஆரம்பத்திலேயே மிகுதியான வழக்குகள் வந்து குவிந்தன. அதனூல் அவருக்குத் தொடக்கத்திலேயே வருவாயும் பெருக்கமாக வந்தது. பயிற்சி முதிர்ந்த பெரிய வழக்கறிஞர்களும் அவரது வருவாயைக் கண்டு வியந்தார்கள். கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் எந்த வழக்கறிஞர்க்கும் இராசேந்திரரைப் போல் ஆரம்ப காலத்தில் அவ்வளவு வருவாய் வந்ததில்லை.

சில ஆண்டுகளில் இராசேந்திரர் புகழ்பெற்ற வழக்கறிஞராகத் திகழ்ந்தார். அவர் தமக்கு வரும் செல்வப் பெருக்கினைக் கண்டு செருக்குற்றூரல்லர். அடக்கமே வடிவாய் அன்பே உருவாய் அவர் விளங்கினூர். எளிய மாணவர்க்கும் வறிய மக்களுக்கும் தகுந்த உதவி புரிந்தார். பேரறிவாளராகிய அவருடைய செல்வம் ஊருணியில் நீர் நிறைந்தாற் போல் எல்லோருக்கும்

பயன்பட்டது. இராசேந்திரரை இன்னருள்வள்ளல் என்று எல்லோரும் ஏத்தினர்.

இராசேந்திரர் காலத்தைப் பொன்னே போல் கருதுபவர். ஒரு சிறு பொழுதையும் வீணே கழிக்க விரும்பார். ஓய்ந்த நேரங்களில் சட்ட நூல்களை ஆய்ந்து கொண்டே இருப்பார். அதனால் சட்டக் கலையில் அவருக்கு நுட்பமான புலமை வளர்ந்து கொண்டே வந்தது. அவர் 1915-ஆம் ஆண்டில் எம். எல். பட்டத் தேர்வுக்கு எழுதினார். அதில் அவர் மாகாண முதல்வராக வெற்றியுற்றார். அதனை அறிந்த கல்கத்தா வழக்கறிஞர் கழகத்தார் அவருக்குச் சிறந்த விருந்தொன்று நடத்தி அவரது சட்டநூல் புலமையை வியந்து போற்றினர்.

பீகார் மாகாணத்தின் தலைநகரமாகிய பாட்னாவில் 1916-ஆம் ஆண்டில் உயர்நீதிமன்றம் ஒன்று நிறுவப் பட்டது. உடனே இராசேந்திரர் தம் மாகாணத் தலை நகரிலேயே தொழில் புரியத் தொடங்கினார். அங்கே அவருக்குக் 'கல்கத்தா வழக்கறிஞர்' என்று பெயரும் புகழும் விரைவில் பரவியது. அங்கும் அவருக்கே வழக்குகள் வந்து குவிந்தன; வருவாயும் அளவின்றி வந்து நிறைந்தது. பாட்னா உயர்நீதி மன்றத்தில் இராசேந்திரர் இணையற்ற வழக்கறிஞராக விளங்கி வந்தார். அவர் பொய்யான வழக்குகளை இகழ்ந்து புறக் கணிப்பார். உண்மையான வழக்குகளையே ஏற்றுத் திண்மையுற நடத்தி வெற்றியும் காணுவார். நீதி மன்றத்தலைவர்களும் பிற வழக்கறிஞர்களும் அவருடைய நேர்மையையும் சீர்மையையும் நெஞ்சாரப் போற்றுவர்.

அறிவும் செல்வமும் ஒருங்கு செறிய உயர்ந்த வழக் கறிஞராய் விளங்கிய இராசேந்திரர் ஆடம்பர வாழ்வை

விரும்பவில்லை. எப்பொழுதும்போல் எளிய வாழ்வையே இனிய முறையில் நடத்தி வந்தார். அவருடைய பேராற்றலை ஆங்கில அரசாங்கமும் அறிந்து வியந்தது. அவருக்கு உயர் நீதிமன்றத் தலைவர் பதவி வழங்கவும் தக்க சமயத்தை எதிர்நோக்கி இருந்தது.

முதல் உலகப்போர் 1919-ஆம் ஆண்டில் முடிவுற்றது. அப் போர் நடைபெற்ற காலத்தில் தேசப் பாதுகாப்புச் சட்டத்தின்படி ஆங்கில அரசாங்கத்தார் இந்தியத் தலைவர்கள் பலரைக் காவலில் வைத்திருந்தனர். போர் முடிவுற்றதும் இந்தியத் தலைவர்களை அடக்குதற்கு மிகவும் கொடிய ரௌலட் சட்டம் என்ற சட்டத்தை ஆங்கில அரசாங்கம் கொண்டு வந்தது. தேசப் பணி புரியும் எவனும் தனது வீட்டில் இனிது வாழ முடியாதவாறு தடுக்க வல்ல கொடுமையான சட்டம் அது. அதனை நாடு முழுதும் ஒன்றுபட்டுக் கண்டித்தது. டில்லிச் சட்ட மன்றத்தில் இருந்த இந்திய உறுப்பினர் மூவர் அதனை எதிர்த்துத் தம் பதவியை உதறி எறிந்து வெளியேறினர். இதனால் உள்நாட்டில் குழப்பமும் கலகமும் விளைந்துவிடுமோ என்று அஞ்சினார் காந்தியடிகள். அவர் எங்கும் உண்மையும் அமைதியும் நிலவ வேண்டும் என்று விரும்பினார். அவ் இரண்டின் துணை கொண்டு ஆங்கிலேயரின் உள்ளத்தையும் மாற்ற வேண்டும் என்று முடிவு செய்தார்.

உடனே, அவர் ரௌலட் சட்டத்தை எதிர்த்துச் சத்தியாக்கிரக இயக்கத்தை உண்டுபண்ணினார். சத்தியத்தின் அடிப்படையில் அறப்போர் புரிவதே அவ் இயக்கத்தின் நோக்கமாகும். பிறருக்குச் சிறிதும் துன்பம் செய்யாமல், துன்பம் அனைத்தையும் தானே

அனுபவித்துக்கொண்டு, அரசியல் குறைகளை அகற்று வதே அவ் இயக்கத்தின் கடமையாகும். இத்தகைய அறப்போர் இயக்கத்தைக் காந்தியடிகள் இந்திய நாடெங்கும் பரப்பினர். இவ் இயக்கத்தில் வழக்கறிஞர் பலர் பங்கு கொண்டனர். நாட்டுப் பணியில் பெரும் நாட்டமுடைய இராசேந்திரரும் இவ் இயக்கத்தில் ஈடு பட்டார். அதனால் ஆங்கில அரசாங்கம் அவரை வெறுத்தது. அவருக்குக் கிடைக்க இருந்த நீதிமன்றத் தலைவர் பதவியும் கிட்டாது போயிற்று. இராசேந்திரர் இவ் இயக்கத்தில் ஈடுபடாதிருப்பாரானால், முன்பு 'இந்துஸ்தான் ரிவ்யூ' திங்கள் இதழ் எழுதியவாறு நீதி மன்றத் தலைவர் பதவியை நிச்சயம் பெற்றிருப்பார்.

## ௧௨. இராசேந்திரர் பல்கலைக்கழகப் பணி

பாடலிபுரம் உயர்நீதிமன்ற வழக்கறிஞராக இராசேந்திரர் தொழில் நடத்தி வரும் நாளில் அவர் கலந்துகொள்ளாத பொதுநலப் பணி எதுவுமே இராது. மக்களுக்கு நன்மை விளைக்கும் எத்தகைய முயற்சியிலும் கிளர்ச்சியிலும் அவர் முன் நிற்பார். 'செல்வத்தை ஈட்டு வதினும் நாட்டிற்குச் சேவை செய்வதே வாழ்க்கையின் சிறந்த பயன்' என்று நினைந்து அவர் பொதுப் பணியில் முனைந்து நிற்பார்.

அக் காலத்தில் பாடலிபுர நகரில் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவ, டில்லிச் சட்ட மன்றத்தில் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அச் சட்டத்தில் பல குறை பாடுகள் நிறைந்திருந்தன. அதனால் பீகார் மாகாணப் பெருமக்கள் அச் சட்டத்தைப் பெரிதும் வெறுத்தனர்.

இராசேந்திரர் அச் சட்டத்திலுள்ள குறைபாடுகளைக் கூர்ந்து நோக்கி ஆய்ந்து தொகுத்தார். அவற்றைப் பல செய்தித்தாள்களில் கட்டுரைகளாக வெளியிட்டு அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறிவித்தார். நகரிலே பல கூட்டங்களைக் கூட்டி அச் சட்டத்தை மறுத்துத் தம் கருத்துக்களை விளக்கினார். அதனால் பீகார் மாகாணம் முழுதும் அச் சட்டத்தை எதிர்த்துப் பெருங் கிளர்ச்சி எழுந்தது.

மாகாணம் முழுதும் கிளர்ச்சி ஏற்படவே அரசாங்கம் அதனை மதிக்கத் தலைப்பட்டது. பல்கலைக்கழகச் சட்டத்தில் தகுந்த திருத்தங்களை விரைந்து செய்தது. இதற்குப் பெருமுயற்சி செய்த இராசேந்திரரைப் பீகார் மக்கள் எல்லோரும் பெரிதும் போற்றினர். அதனால் இராசேந்திரர் பாட்னா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் ஓர் உறுப்பினரானார். உடனே, பல்கலைக்கழக மாணவர் தொகையைப் பெருக்க வேண்டுமென விரும்பினார். மாணவர் கட்ட வேண்டிய மாதச் சம்பளம் மிகுதியாக இருந்தால் தகுதியுடைய பலர் பல்கலைக்கழகக் கல்வி பெறமுடியாது என்று கருதினார். அதனால் மாணவர் சம்பளத்தைக் குறைக்க வழி தேடினார். மேலும், பல்கலைக்கழகத்தில் மாணவர் கற்க வேண்டிய காலத்தைக் குறைக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். அவர் அன்று செய்த முயற்சியெல்லாம் இன்று பயன் விளைத்து வருகிறது என்று சொல்லலாம். இங்ஙனம் இராசேந்திரர் கல்வித் துறையில் இயற்றிய பணிகள் பலவாகும்.

இராசேந்திரர் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவில் இடம்பெற்றுப் பல கல்விப் பணிகளைப் புரிந்துகொண்டிருக்கும் நாளில் காந்தியடிகளின் ஒத்துழையாமைப்

போர் உருவாயிற்று. அதில் தேசத் தலைவர்கள் பலர் கலந்தனர். இராசேந்திரரும் அப் போரில் ஈடுபட்டார். அதனால் பல்கலைக்கழக உறுப்பினர் பதவியினின்று விலகினார். அது கண்ட பல்கலைக்கழக அதிகாரிகள், "ஊக்கமாக ஆக்க வேலைகள் புரியும் அரிய உறுப்பின ரைப் பிரிய நேர்ந்தது!" என்று பெரிதும் வருந்தினர்.

ஒத்துழையா இயக்கத்தின் நோக்கங்களை நிறை வேற்ற, இளைஞர்க்குத் தேசியக் கல்வி ஊட்ட வேண்டு மெனத் தலைவர்கள் முயன்றனர். அதன் பயனாக இராசேந்திரர் 'பீகார் வித்தியா பீடம்' என்னும் தேசியப் பல்கலைக்கழகத்தைப் பாடலிபுரத்தில் நிறுவினார். அதனைக்கண்ட மாணவர் அனைவரும் ஆங்கிலப் பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேறினர். சிறந்த தேசியக் கல்வியைப் பெறுதற்கு மாணவரெல்லாம் பீகார் வித்தியா பீடத்தில் வந்து சேர்ந்தனர். இராசேந்திரர் அப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக விளங்கி அரிய பணியாற்றினார். அங்கு உயர்ந்த நாட்டுக் கல்வியை மாணவர்க்கெல்லாம் ஊட்டினார். பல்லாயிரம் மாண வர்கள் அதில் சேர்ந்து தேசிய முறையில் கலைப் பயிற்சி பெற்று வந்தனர். அவர்களெல்லாம் நாட்டிற்குப் பணி புரியும் நல்ல தொண்டர்களாய் விளங்குமாறு பயிற்சி யளிக்கப் பெற்றனர்.

இத்தகைய தேசியப் பல்கலைக்கழகத்தை 1920-ஆம் ஆண்டில் காந்தியடிகள் திறந்து வைத்தார். ஆண்டு தோறும் அதில் பயிற்சி பெற்ற மாணவர் பலர் மாண் புடைய தேசத் தொண்டராய் வெளிவந்தனர். அவர்கள் கலையிலும் ஒழுக்கத்திலும் தலைசிறந்து விளங்கக் கண்ட அரசாங்கம், பீகார் வித்தியா பீடத்தைப் பெரிதும்

பேணிப் பாராட்டியது. இப் பல்கலைக்கழகம் பத் தாண்டுகள் வளர்பிறைத் திங்களைப்போல் வளர்ந் தோங்கி வந்தது. சுதந்திரப் போரைக் கண்டு ஆத்திரம் கொண்ட ஆங்கில அரசாங்கம் 1930-ஆம் ஆண்டில் அதனை மூடிவிட்டது.

---

## கரு. இராசேந்திரர் காந்தியடிகள் நட்பு

பீகார் மாகாணத்தில் சம்பரான் மாவட்டம் ஒரு பகுதியாகும். சண்பகாரணியம் என்ற தொடரே சம்ப ரான் என்று மருவிற்று என்பர். அது மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்தே மிகவும் சிறப்புற்ற நிலப் பகுதியாக மிளிர்ந்து வருவது. அங்குச் சண்பக மரங்கள் நிரம்ப உண்டு. சண்பக மலர் மிக்க மணமுடையது. அதனை வண்டுபடா மலர் என்று வழங்குவர். அதன் மகரந்தத்தை வண்டுகள் அணுகமாட்டா. அதனை அணு கினால் அவ் வண்டுகள் இறந்தொழியும் என்பர் அறிந் தோர். அத்தகைய சண்பக மரங்கள் நிறைந்த நிலப் பகுதி சண்பகாரணியம் என்றும் சண்பகவனம் என்றும் வழங்கலுற்றது.

இச் சண்பகவனம் பண்டை நாளில் பெருமுனிவர் களின் தவ வனமாய் விளங்கியது. உத்தானபாதன் என்னும் மன்னனின் உத்தமப் புதல்வனாகிய துருவன் அவ் வனத்திலேதான் தோன்றினான். அவன் தன் தந்தையின் மடிமீது அமர முடியாமையால் அச் சண்பக வனத்திலிருந்து பெருந்தவம் புரிந்தான். அவனது தவத் திறம் கண்டு மகிழ்ந்த மாலோன் அவன் முன் னர்த் தோன்றிப் பல வரங்களை அருளினான் என்பர். வடமொழி இராமாயணத்தைப் பாடிய வான்மீகி

முனிவன் வாழ்ந்த வனமும் இதுவே என்பர். இராமன் சீதையைக் காட்டில் விட்டுப் பிரிந்த பொழுது அவள் வான்மீகி முனிவனது தவச்சாலையில் தங்கியிருந்தன ளாம். அங்கிருக்கும்போதுதான் அச் சீதைக்கு இலவன், குசன் என்னும் செல்வ மக்கள் இருவர் பிறந்தனர் என்பர்.

இராமன் ஒருகால் அசுவமேத வேள்வி இயற்றி ஞன். அப்பொழுது பரியொன்றை அணிசெய்து உல கெங்கும் சுற்றிவர அனுப்பிஞன். சண்பக வனத்தில் வான்மீகி முனிவனது தவச்சாலையில் தங்கியிருந்த இலவ குசர்கள் அப் பரியைப் பிடித்து வந்து தவச்சாலை யின் முன்னர்க் கட்டிவிட்டனர். இதனை உணர்ந்த இராமன் படையுடன் வந்து இலவ குசருடன் பெரும் போர் புரிந்தான் என்று பேசுவர். பாண்டவர் ஐவரும் தமக்குக் குறித்த வன வாழ்வை முடித்துக் கரந்துறை வாழ்வை விராட நகரில் மேற்கொண்டனர் என்று பாரதம் பகரும். அவர்கள் மறைந்து வாழ்ந்த 'விராட நகர்' அச் சண்பக வனத்தில்தான் உள்ளது. அதன் அருகே 'இராம நகரம்' என்ற சிற்றூர் ஒன்றும் உண்டு.

சீதையின் தந்தையாகிய சனகப் பெருவேந்தன் இருந்தாண்ட நாடும் அதுவே என்பர். அப் பகுதியை விதேக நாடு என்று குறிப்பர். சீதையின் பெயரால் ஆங்குச் 'சானகிபுரம்' என்னும் சிற்றூர் ஒன்றும் இருக் கிறது. அதனை இந் நாளில் 'சங்கிகார்' என்று வழங்கு கின்றனர். புத்தர் பெருமான் இச் சண்பக வனத்தின் வழியாகக் கௌசாம்பி நகருக்கு நடந்து சென்றதாக வரலாற்று நூல்கள் கூறும். அவருடைய எலும்புகள் அப் பகுதியிலுள்ள நந்தனபுரத்துத் தூபியில் இருக் கின்றன என்று ஆங்குள்ளார் சொல்லுவர்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நம் பாரத நாட்டில் லிச்சாவியர் என்னும் ஒரு புகழ்பெற்ற மரபினர் வாழ்ந்தனர். அவர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள்; போர் புரிவதில் பேராற்றல் பெற்றவர்கள். அம் மரபைச் சேர்ந்த மகளிர் மிக்க அழகுடையோராவர். ஆதலின் அக்கால மன்னர்கள் எல்லாரும் லிச்சாவியர் மரபுப் பெண்களையே மணம் புரிந்து கொள்ள இச்சையுறுவர். சம்பரான் மாவட்டத்திலுள்ள நந்தனபுரம் கிராமத்தைச் சுற்றிப் பெருங்கோட்டை இருந்ததைக் காட்டும் சின்னங்கள் பலவுள. அக் கோட்டை, லிச்சாவியரின் காலத்தில் அவர்களால் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று வரலாற்று நூல் வல்லார் சொல்லுவர்.

மேலும், இம் மாவட்டத்தில் அசோகப் பெருவேந்தனல் அறவுரைகள் பொறித்து நாட்டப் பெற்ற கற்றூண்கள் பல காணப்படுகின்றன. அங்கு ஒரு காலத்தில் பௌத்தசமயம் தழைத்தோங்கி இருந்த நிலையை அத் தூண்கள் இன்றும் விளக்கி நிற்கின்றன. பாரத நாட்டிற்குப் பண்டு வந்த சீன யாத்திரிகர்களாகிய பாகியான், ஹ்வான்சுவாங் என்னும் இருவரும் தங்கள் நூலில் இச் சண்பகவனத்தின் சிறப்பைப் பண்புறப் பாராட்டி வரைந்துள்ளனர்.

இச் சண்பகவனத்தில் குப்தகுல மன்னர்களாலும் ஹர்ஷப் பேரரசனலும் நிறுவப் பெற்ற குருகுலங்கள் பல அவ்வப்போது இயங்கி வந்தன. அவற்றில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கலைகள் பலவற்றைப் பயின்று தேர்ந்து வந்தனர். அதனல் அப் பகுதியில் முன்னர் எண்ணற்ற கல்விமான்கள் சிறந்து விளங்கினர் பதினெரும் நூற்றாண்டில் இச் சண்பகவனத்தின்மீது

படையெடுத்து இதனைத் தன் வயப்படுத்திய சிக்கந்தர் லோடி என்பான் இங்கிருந்த கலைவல்லாரைக் கண்டு தலை வணங்கினன்.

இச் சண்பகவனத்தின் வடக்கே இமயமலைத் தொடர்கள் இருக்கின்றன. அம் மலையின் ஒரு பகுதி யான சோமேசுவரம் என்னும் தொடர் சண்பகவனத்தி னுள்ளும் பரவியுள்ளது. இங்கு நாராயணி என்னும் நதி பாய்ந்து நல்வளப்படுத்துகிறது. இம் மாவட்டத்தில் பெரிய நகரங்கள் இரண்டே இருக்கின்றன. அவை மோதிகரி, பேத்தியா என்பனவாகும். நாலாயிரம் சதுரக் கல் பரப்புடைய இப் பகுதியில் மூவாயிரம் சிற்றூர்கள் உள்ளன.

மேலும், இம் மாவட்டத்தில் மூன்று சமஸ்தானங் கள் உள்ளன. அவை பேத்தியா, இராமநகரம், மது வனம் என்பன. அவற்றுள் பேத்தியா சமஸ்தானமே மிகப் பெரியது. அது ஷாஜகான் காலத்தில் ஏற்பட்ட பழமையான சமஸ்தானமும் ஆகும். ஆங்கிலேயர்கள் அந்தச் சமஸ்தானங்களின் பல பகுதிகளைக் குத்தகைக் குப் பெற்றிருந்தனர். அக் குத்தகை நிலங்களில் அவுரி யும் கரும்பும் அதிகமாகப் பயிரிட்டு வந்தனர். நிலத் தைப் பயிரிடும் உழவர்கள், குத்தகைக்காரராகிய ஆங்கி லேயர் ஆணைக்கு அடங்கி நடந்தால்தான் வாழ முடியும். அவர்கள் சொல்லை மீறினல் உழவர்க்கு நிலத்தைப் பயிரிட உதவமாட்டார்கள்.

அங்குள்ள ஒவ்வோர் உழவனும் ஓர் ஏக்கர் நிலத் தில் ஆறில் ஒரு பாகம் அவுரியைக் கட்டாயம் பயிரிட வேண்டும். அங்ஙனம் பயிரிடாதுபோனல் உழவரிடம் நிலத்தைக் கொடுக்கமாட்டார்கள் குத்தகைக்காரர்கள்.

உலகில் நீலச்சாயம் கிடைப்பது அருமையாக இருந்தத ஞலும், இந்திய நீலச்சாயத்திற்குப் பிற நாடுகளில் நல்ல விலை கிடைத்ததனுலும் அவுரிச் சாகுபடியை ஆங்கிலேயர் பெரிதும் வற்புறுத்தினர். ஓர் ஏக்கர் நிலத்தில் அவுரி யைப் பயிர் செய்தால் உழவனுக்குப் பத்து ரூபாய்கட்கு மேல் கிடையாது. இம் முறையை எவரேனும் எதிர்த் தால் அவருக்குத் தண்டனை கொடுக்க ஆங்கில அரசாங் கம் தயங்குவதில்லை. அவ் ஏழை உழவர்கட்குப் பரிந்து பேசுபவர் அரியர். அதனுல் அவர்களுடைய துயரங்கள் நாளுக்குநாள் பெருகி வந்தன. இதனைத் தேசத் தலைவர் கள் தெரிந்தார்கள்.

1916-ஆம் ஆண்டில் இலட்சுமணபுரி நகரில் காங்கிர சுப் பேரவை கூடியது. அப் பேரவை மாநாட்டில் "சம்ப ரான் மாவட்ட அவுரி விவசாயிகளின் துயரை அகற்ற வேண்டும்; அதற்கான அறப்போரைத் தொடங்கவேண் டும்" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உடனே சம்பரான் மாவட்ட உழவர்களின் நிலைமையை ஆராயக் காந்தியடிகள் விரைந்து புறப்பட்டார். அவரு டன் அம் மாவட்டத்தைச் சேர்ந்த இராசகுமார சுக்லா என்பவரும் சென்ருர். அப்போதுதான் இராசேந்திரர் முதன் முதல் காந்தியடிகளைக் கண்டார். அன்று முதல் காந்தியடிகளின் சிறந்த தோழராய்த் திகழ்ந்து உலகறிய விளங்கத் தொடங்கினர். காந்தியடிகள் சம்பரான் மாவட்டத்தில் உழவர்கள் பொருட்டுப் பணியாற்றும் காலத்தில் இராசேந்திரர் அவருக்கு அரும்பெறல் துணை வராய் இருந்தார். அவரே அவ் அறப்போரின் படைத் தலைவராயும் ஆய்வுரை கூறும் நல்லமைச்சராயும் விளங் கினர்.

## கசு. ஏழைகளின் ஊழியர் இராசேந்திரர்

இலட்சுமணபுரியில் நடைபெற்ற காங்கிரசுப் பேரவை மாநாட்டு முடிவின்படி காந்தியடிகள் சம்பரான் மாவட்ட உழவர்களின் உறு துயரை அகற்றப் புறப்பட்டார். அம் மாவட்டத்தைச் சேர்ந்த இராச குமார சுக்லா என்பவர் காந்தியடிகளைத் தம்முடன் அழைத்துச் சென்றார். அவரும் ஏழைமக்களிடம் பேரன்பு பூண்டவர். அவருடைய இன்னல்களைக் களைவ தற்கு முன்னின்று பணிபுரிந்தவர்.

இராசகுமார சுக்லா, காந்தியடிகளை அழைத்து வருகிறார் என்ற செய்தியை அறிந்த ஆங்கிலேயக் குத்த கைக்காரர்கள் அவர்மீது மிகுந்த ஆத்திரம் கொண் டார்கள். அவருடைய வீடு வாயில்களையெல்லாம் நெருப்பிற்கு இரையாக்கினர். அது கண்டு இராசகுமார சுக்லா உளந் தளரவில்லை. அவர்கள் இருவரும் முதலில் பாடலிபுரத்தை அடைந்தனர். அந்நகரில் செல்வாக் குடைய பெரிய மனிதர் யார் என்று பலரிடமும் கேட்டு அறிந்தனர்.

இராசேந்திரரே பாடலிபுரத்தில் எவரும் விரும்பும் பெருமகனாக விளங்குவதைத் தெரிந்து அவருடைய வீட்டை அடைந்தனர். அப்போது இராசேந்திரர் தம் குடும்பத்துடன் வேற்றூருக்குச் சென்றிருந்தார். அவர் வீட்டில் வேலையாட்கள் மட்டுமே இருந்தனர். அங்குக் காந்தியடிகள் சிறிது நேரம் தங்கி இளைப்பாறினார். பிறகு, கிணற்றில் நீர் இறைத்துக் கால்கைகளைக் கழுவிக் கொள்ள முயன்றார். அவரை இன்னார் என்று அறியாத வேலையாட்கள் கிணற்றில் நீர் எடுக்காதவாறு தடுத்து

விட்டனர். காந்தியடிகள் அது கண்டு வருந்தவில்லை; புன்னகை பூத்து நின்றார்.

பின்னர்க் காந்தியடிகள் சம்பரான் நோக்கிச் சென்றார். அவர் அங்கு வந்துள்ள செய்தி விரைவில் எங்கும் பரவியது. உழவர்கள் எல்லோரும் ஊக்கமும் துணிவும் கொண்டு காந்தியடிகளைக் காண வந்தார்கள். அவரை நெருங்கித் தங்கள் குறைகளையெல்லாம் விளக்கமாக எடுத்தியம்பி முறையிட்டார்கள். ஆங்கிலேயக் குத்தகைக்காரர்கள் அவர்கட்கு விளைக்கும் அல்லல்களை யெல்லாம் சொல்லக் கேட்டுக் கண்ணீர் சொரிந்தார் காந்தியடிகள். உழவர்கள் கூறிய குறைகளை யெல்லாம் தொண்டர்கள் குறித்துக் கொண்டார்கள்.

இந் நிகழ்ச்சியைப்பற்றி அறிந்த ஆங்கிலேயக் குத்தகைக்காரர்கட்கு அடிவயிற்றில் இடி விழுந்ததுபோல் இருந்தது. நாம் உழவர்க்கு இழைத்த தீங்குகள் எல்லாம் வெளியாய் விட்டனவே என்று சீறினார்கள். "சம்பரான் மாவட்டத்தில் உழவர்களிடையே அமைதியில்லை; குழப்பம் பெருகிவிட்டது," என்று அரசாங்க அதிகாரிகளுக்குத் தந்தி கொடுத்தார்கள். "சம்பரான் மாவட்டத்தை விட்டு உடனே வெளியேற வேண்டும்," என்று காந்தியடிகளுக்கு மாவட்டத் தண்டல் அதிகாரியின் கண்டிப்பான ஆணை பிறந்தது. காந்தியடிகளோ "நான் வந்த காரியத்தை முடித்த பின்பே இவ்விடத்தை விட்டு நீங்குவேன்," என்று உறுதியாகச் சொல்லி அங்கேயே உறைந்தார். உடனே காந்தியடிகள் சிறை செய்யப்பட்டார். அவர்மீது ஆங்கிலேயர்கள் வழக்குத் தொடர்ந்தனர்.

காந்தியடிகள் சம்பரானில் சிறை செய்யப்பட்டதும் இந்திய நாடெங்கும் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. சிறப்பாகப் பீகார் மாகாணத்தில் அடக்க முடியாத பெருங் குழப்பம் தாண்டவமாடியது. அம் மாகாணத்தின் பெருமக்கள் அனைவரும் காந்தியடிகளுக்குத் துணைபுரிய முன் வந்தனர். அவருள் முதல்வராக வந்தவர் இராசேந்திரரே. "இனி, காந்தியடிகளைப் பின்பற்றி ஒருவர் பின் ஒருவராகச் சிறைசெல்வோம். ஏழை உழவர்களின் குறைகளை நன்றாக ஆராய்ந்து அறிக்கைகள் வெளியிடுவோம். அக் குறைபாடுகள் அகற்றப்படும் வரையில் அயராது கிளர்ச்சி செய்வோம்," என்று இராசேந்திரரும் பிற பெருமக்களும் உறுதி பூண்டனர்.

சம்பரான் உழவர்களின் துன்பத்தை ஒழிப்பதில் பீகார் மாகாணப் பெருமக்களும் காந்தியடிகளுடன் சார்ந்துள்ளனர் என்பதை மாகாண அரசாங்கம் கண்டு மலைவுற்றது. காந்தியடிகளைச் சிறையிலேயே வைத்திருந்தால் நாட்டில் பெருங்கேடுகள் விளையலாமோ என்று அஞ்சிய அரசாங்கம் அவரை விடுதலை செய்தது. அவர் மீது தொடர்ந்து வழக்கையும் நடத்தாது கைவிட்டது. மேலும், அவ் உழவர்களின் குறைகளை ஆராய்ந்து, அவற்றைப் போக்கும் வழிகளைக் கண்டு உரைக்குமாறு அரசாங்கம் ஒரு குழுவை அமைத்தது. அக் குழுவிற்குத் தலைமை தாங்கித் தக்க ஆய்வுரைகளை வழங்குமாறு காந்தியடிகளையே அன்புடன் வேண்டிக் கொண்டது.

அவ்வண்ணமே சம்பரான் உழவர் குறை நிவாரணக் குழு உறுப்பினர்கள் காந்தியடிகளின் தலைமையில் ஏழை உழவர்களின் குறைகளைத் தீர விசாரித்தனர். அவைகள் தீர்வதற்குரிய தங்கள் முடிவையும் அரசாங்கத்திற்குத்

தெரிவித்தனர். அதனை ஆதாரமாகக் கொண்டு, பீகார் மாகாண அரசாங்கத்தில் உழவர் துயரகற்றச் சட்டம் ஒன்று தோன்றியது. அதனால் ஏழை உழவர்கள் தம் குறைகள் பல நீங்கி ஓரளவு ஆறுதலுற்றனர்.

இங்ஙனம் காந்தியடிகள் சம்பரானில் நிகழ்த்திய கன்னிப் போரில் முதலிலிருந்து இறுதிவரை உறுதியான உள்ளத்துடன் நின்று உதவியவர் இராசேந்திரர். காந்தியடிகளே தமது வரலாற்றில் இராசேந்திரரின் இணையற்ற தொண்டையும் அன்பையும் பண்பையும் வியந்து பாராட்டியுள்ளார். இராசேந்திரருடைய உதவி இல்லாது போனால் சம்பரான் அறப்போரில் வெற்றி கண்டிருக்க முடியாது என்று விளக்கமாகக் கூறுகிறார். அவருடைய தோழர்களும் அவரைப்போல் எந்த நேரமும் துணையாக நின்று பணிபுரிந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

காந்தியடிகள் சம்பரான் மாவட்டத்தில் இராசேந்திரரின் இனிய துணையுடன் ஆற்றிய அருந்தொண்டால் அவுரிச் சாகுபடி அடியோடு ஒழிந்தது. நீலச் சாயம் தயாரிக்கும் பெரிய தொழிற்சாலைகள் மறைந்தன. அங்குள்ள உழவர்கள் அனைவரும் உற்சாகமுடனும் தன் மதிப்புடனும் வாழத் தொடங்கினர். அவ் ஏழை உழவர்களின் பொருட்டு உழைத்த தொண்டர்கள் பலரும் உயர்ந்த தேசத் தொண்டர்களாய் ஒளி வீசினர். இப்போது பீகார் மாகாணத்தில் அமைச்சர்களாயும் காங்கிரசுத் தலைவர்களாயும் மக்கள் தலைவர்களாயும் விளங்குவோரெல்லாம் அன்று இராசேந்திரருடன் பணிபுரிந்த தொண்டர்களே. 1935-ஆம் ஆண்டில் காங்கிரசுக் கட்சியினர் மாகாண அமைச்சர் அவையை அமைத்த

போது, இராசேந்திரர் சம்பாரான் மாவட்டத்தில் தம்முடன் உழைத்த தொண்டர்களையே அமைச்சர்களாக்கி மகிழ்ந்தார்.

ஏழை உழவர்கட்குத் தொண்டு புரியத் தொடங்கிய நாள்முதல் இராசேந்திரர் மிகவும் எளிய வாழ்வை மேற்கொண்டார். அவர்கட்கு உழைப்பதே அளவிலா இன்பமென்றும் பிறவிப் பயன் என்றும் கருதினர். காந்தியடிகளின் அறவுரைகளைக் கேட்பதில் ஆவல் கொண்டார். வீட்டிலுள்ள வேலையாளரை யெல்லாம் விலக்கி எல்லா வேலைகளையும் தாமே செய்து கொண்டார். சிற்றூர்களை யெல்லாம் சீர்திருத்தும் சீரிய பணியில் பேரூக்கம் கொண்டார்.

இராசேந்திரரின் கிராமச் சீர்திருத்தப் பணிகளால் பீகார் மாகாணத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் பள்ளிகள் தோன்றின. மருத்துவ வசதிகள் கிடைத்தன. எங்கும் நூல்நிலையங்களும் படிப்பகங்களும் நிறுவப் பட்டன. இவற்றையெல்லாம் ஆங்காங்கு இருந்த காங்கிரசுத் தொண்டர்கள் கண்காணித்து வந்தனர். இங்ஙனம் ஏழைமக்கட்குப் பல நலங்களை உண்டு பண்ணிய இராசேந்திரரை "ஏழைகளின் ஊழியர் நீடு வாழ்க!" என்று மக்கள் அனைவரும் நித்தலும் வாழ்த்தினர்.

## கரு. பீகார்காந்தி இராசேந்திரர்

நாட்டிற்குப் பணி புரிய வேண்டும் என்ற நல்லெண்ணம் எல்லோருக்கும் எளிதில் அமைவதன்று. முன்னைத் தவமுடையார்க்கே அப் பொன் போன்ற உள்ளம் பூக்கும். 'நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்' என்று பேசுவர் அறிவுடையோர். நட்பு, அருள், கொடையுள்ளம் ஆகிய பண்புகளின் முதிர்ச்சியே நாட்டுப் பணியென்று நவிலலாம். இத்தகைய பண்பு, இராசேந்திரருக்குப் பிறவியிலேயே அமைந்துவிட்டது.

இராசேந்திரர் பிள்ளைப்பருவத்திலேயே எல்லோரிடத்தும் பேரன்புடன் பழகுவார். பிறருக்கு உதவி புரிவதில் பெருவிருப்புடன் முன்நிற்பார். அவர் மாணவராக இருக்கும்போது கல்கத்தாவில் மாணவர் சங்கத்தைத் தோற்றுவித்து அதன் வாயிலாகப் பீகார் மாணவர் நலனைப் பேணி வந்தார். கல்கத்தா நகரில் 1906-ஆம் ஆண்டில் நடைபெற்ற காங்கிரசுப் பேரவைத் தொண்டர் படையில் கலந்து சிறந்த பணிபுரிந்தார். அப் பேரவை மாநாட்டிற்குத் தாதாபாய் நௌரோஜி என்பார் தலைமை தாங்கினார். அவருடைய அரிய பேருரையினையும் பிற தலைவர்களின் உரைகளையும் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தார். அன்றே காங்கிரசில் உறுப்பினராக விருப்புடன் சேர்ந்தார். அதுமுதல் காங்கிரசுக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்வார். பிற மாணவர்களையும் தம்முடன் அழைத்துச் சென்று தேசிய உணர்ச்சியை ஊட்டுவார்.

கல்கத்தாவில் கூடிய காங்கிரசுப் பேரவையில் சுதந்திரம் பெறுவதே காங்கிரசின் முக்கிய நோக்கமென

முதன்முதல் முடிவாயிற்று. இந்திய மக்களிடையே சுதந்திர உணர்ச்சியைப் பரப்புதற்குத் தேசியக் கல்வியை இளைஞர்க்கு ஊட்ட வேண்டும்; உள்நாட்டுப் பொருள்களையும் ஆடைகளையுமே மக்கள் வாங்கி உபயோகிக்க வேண்டும்; அயல்நாட்டுப் பொருள்களையெல்லாம் வெறுத்து அகற்றுதல் வேண்டும் என்ற முடிவுகள் செய்யப்பட்டன.

பேரவையில் நிறைவேற்றிய முடிவுகளையெல்லாம் தமது உள்ளத்தில் நன்கு பதித்த இராசேந்திரர் அவற்றைத் தாம் செல்லும் இடமெல்லாம் விளக்கிச் சொல்லுவார். அவர் அம் முடிவுகளை ஏற்றுச் செயலிலும் சிறிதும் பிறழாது மேற்கொண்டு ஒழுகுவார். சுதந்திர வேட்கையுடன் இங்ஙனம் சொல்லிலும் செயலிலும் ஒத்து நடக்கும் உத்தம மாணவரை உலகில் காண்பது அரிது. இத்தகைய மாணவர் இராசேந்திரரை அமெரிக்க நாட்டுச் சகோதரி நிவேதிதா தேவி என்பார் ஒருகால் காண நேர்ந்தது.

பாரத நாட்டின் சீரிய தத்துவ ஞானியாகிய விவேகானந்தர் அமெரிக்க நாட்டில் நடைபெற்ற உலகச் சமய மாநாட்டிற்குச் சென்றிருந்தார். அங்கு அவர் இந்து சமயத்தைப் பற்றி ஆற்றிய அரிய சமயப் பேருரை பன்னாட்டுச் சமயத் தலைவர்களின் உள்ளத்தையும் ஒருங்கு கவர்ந்தது. அவரது சொல்வன்மையிலும் இந்து சமய உண்மைகளிலும் பற்றுக் கொண்ட பலர் இந்திய நாடு புகுந்து அவரால் நிறுவப்பெற்ற இராம கிருஷ்ண மடத்தில் சேர்ந்து சமய உண்மைகளை ஆய்ந்தனர். அங்ஙனம் அமெரிக்க நாட்டிலிருந்து இந் நாடு புகுந்த அருமைச் சகோதரி நிவேதிதா தேவி என்பார்

இராசேந்திரரைச் சந்தித்தபொழுது அவருடைய தோற்றம், ஏற்றம், ஆற்றல் முதலியவற்றைக் கண்டு மிகவும் பாராட்டினார். "இவ் விளைஞன் பிற்காலத்தில் இப் பாரதப் பெருநாட்டின் தலைவனாகத் திகழ்வான்; உள்ளத் துறவு பூண்ட உத்தமனாயும் ஒளிர்வான்" என்று வாயார வாழ்த்தினார். சமய நம்பிக்கையுடைய அச் சகோதரியின் வாக்குப் பலித்துவிட்டதை இன்று கண்கூடாகக் காண்கின்றோம்.

தேசத் தலைவர்களின் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்குவதற்கு 1919-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ரௌலட் சட்டத்தைக் கொண்டு வந்தனர். அச் சட்டத்தின் கொடுமையைக் கண்ட காந்தியடிகள் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தோற்றுவித்தார். அவ் இயக்கத்தில் கலந்து தொண்டாற்ற உறுதி கொண்ட இராசேந்திரர், பீகார் மாகாணம் முழுதும் சுற்றி அவ் இயக்கம் வலுக்குமாறு செய்தார். அதனால் அம் மாகாணத்திலுள்ள பெருமக்கள் பலர் அப் புதிய இயக்கத்தில் புகுந்தனர். பிற மாகாணங்களிலும் அவ் இயக்கம் பரவி வளரத் தலைப்பட்டது. அது கண்ட ஆங்கில அதிகாரிகள் பெரிதும் அஞ்சினர்.

அப்பொழுது பஞ்சாப் மாகாணத்தில் கவர்னராக இருந்த ஆங்கிலேயர் ஆத்திரம் கொண்டு மக்களைக் கொடுங்கோன்மையாக நடத்தினார். அங்குள்ள அமிர்தசரஸ் நகரில் ஒரு தோட்டத்தில் அமைதியுடன் கூடியிருந்த மக்களை ஆங்கிலப் படைத் தலைவர் டயர் என்பார் துப்பாக்கியால் சுட்டார். அதனால் அங்கிருந்த மக்களில் பலர் உயிரிழந்தனர். இதைத்தான் '**பஞ்சாப் படுகொலை**' என்று பகர்வர். இந் நிகழ்ச்சியைப் பற்றிக்

கேள்வியுற்ற நாட்டுமக்கள் உள்ளம் கொதித்தனர். ஆங்கில ஆட்சியைக் கவிழ்ப்பதற்குப் பெருங்கிளர்ச்சி செய்ய முனைந்தனர்.

பீகார் மக்களின் உள்ளத்தில் பொங்கிய பேருணர்ச்சியைக் கண்டு இராசேந்திரர் யாது நேருமோ என்று அஞ்சினார். காந்தியடிகள் காட்டிய அறநெறியில் சென்றே ஆங்கிலேயரை அகற்ற வேண்டும் என்று பீகார் மாகாணத்தின் பல இடங்களிலும் சென்று நல்லுரை பகர்ந்தார். எங்கும் அமைதியும் அன்பும் நிலவுமாறு செய்தார். இங்ஙனம் காந்தியடிகள் தோற்றிய சாந்தமான அறநெறியை நாடெங்கும் பரப்பி வந்த இராசேந்திரரைப் 'பீகார்காந்தி' என்று எல்லோரும் நாவாரத் துதித்தனர்.

---

## கக. இராசேந்திரர் மேலைநாட்டுப் பயணம்

இராசேந்திரர் ஒத்துழையா இயக்கத்தில் தமது உள்ளத்தையெல்லாம் செலுத்தத் தொடங்கியவுடன் வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டார் மாதம் ஒன்றிற்கு ஐயாயிரம் ரூபாய்கட்குமேல் வருமானம் வந்த அத்தொழிலை நாட்டுப் பணியின் காரணமாக அவர் கைவிட்டாரெனின் அவரது தியாகத்தை என்னென்பது! தேச நலத்தில் அவர் திருவுள்ளம் எவ்வளவு பற்றுக் கொண்டிருந்தது என்பது இதனால் விளங்குமன்றோ!

அவர் வழக்கறிஞர் தொழிலைக் கைவிடுகையில் அவர் ஏற்று நடத்திய பெருவழக்கொன்று முடிவுறாது இருந்தது. அவ் வழக்கைப் பற்றிய நுட்பங்களையெல்லாம் திட்பமுறத் தெரிந்த அவர் அதனைக் கைவிட்டால்

வழக்காளர் பெருந் தொல்லைக்கு உள்ளாவர் என்று எண்ணினார். ஆதலின் அவ் வழக்கு ஒன்றற்கு மட்டும் நீதிமன்றத்திற்குச் செல்லும் உரிமை பெற்றிருந்தார். அவ் வழக்கு 1928-ஆம் ஆண்டில் இங்கிலாந்து நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அதன் பொருட்டு இராசேந்திரர் இங்கிலாந்துக்குச் சென்றார். அவ் வழக்கு வெற்றியடைவதற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் நன்கு செய்தார். பின்னர் இங்கிலாந்து நாட்டின் பல நகரங்களையும் சென்று கண்டுகளித்தார். அவர் தாம் சென்ற இடங்களிலெல்லாம் இந்திய நாட்டைப் பற்றிப் பல சொற்பொழிவுகள் ஆற்றினார். தம்மைச் சந்தித்த அரசியல் தலைவர்களிடம் காங்கிரசுக் கட்சியைப் பற்றி விளக்கி உரைத்தார். அவர்கள் காங்கிரசின்மீது கொண்டிருந்த தவறான கருத்துக்களை எல்லாம் போக்கினார்.

பின்பு இராசேந்திரர் ஐரோப்பாவில் உள்ள பல நாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்தார். அவர் தம் பயணத்தின்போது ஐரோப்பாவில் சிறந்த ஞானியாக விளங்கிய ரோமன் ரோலண்டு என்பாரைக் கண்டு பேசும் பேறு பெற்றார். அங்குச் சர்வதேச இளைஞர் மாநாடு ஒன்று நடைபெற்றது. அம் மாநாட்டு அமைப்பாளர் இராசேந்திரரை அதில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைத்தனர். அங்ஙனமே அவர் அம் மாநாட்டில் கலந்து மகிழ்ந்தார்.

ஆஸ்திரியா நாட்டிலுள்ள வியன்னா நகரில் சர்வதேச மாநாடு ஒன்று நடைபெற்றது. 'உலகில் போரே நிகழக் கூடாது' என்ற கருத்தை வலியுறுத்தும் நோக்கத்துடன் அம் மாநாடு கூட்டப்பெற்றது. அதில் இராசேந்திரர்

கலந்துகொள்ளும் அரிய வாய்ப்புக் கிட்டியது. காந்தியடிகள் காட்டிய சத்தியம், அகிம்சை முதலிய அறங்களைத் திறம்பட அம் மாநாட்டில் எடுத்து விளக்கினார். அன்பின் ஆற்றலைத் தெளிவுற விளக்கினார். மக்கள், விலங்குகளைப்போல் அறிவிழந்து ஒருவரை யொருவர் தாக்கிக் குருதி வெள்ளம் பெருகியோடுமாறு போர் புரிதல் தகாது என்று இடித்துரைத்தார்.

வியன்னா மாநாட்டில் வீராவேசம் படைத்த சிலர் வீற்றிருந்தனர். அவர்கள் போர்வெறி கொண்ட புன்மை யுள்ளத்தினர். இராசேந்திரரின் இனிய அறவுரைகள் அவர்கட்குப் பெரிதும் ஆத்திரத்தை மூட்டின. உடனே அவர்கள் வெகுண்டெழுந்து வெறிபிடித்தவர்களைப்போல் இராசேந்திரரைத் தாக்கிப் புண்படுத்தினர். அதனால் உடம்பில் பல காயங்கள் அடைந்த இராசேந்திரர் ஒரு திங்களுக்குமேல் அங்கு மருத்துவச் சாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றார். அதன் பின்னும் ஐரோப்பாவில் பல இடங்களில் அகிம்சையின் தத்துவத்தைப் பற்றி அரிய விரிவுரைகள் ஆற்றினார்.

இராசேந்திரர் மேலை நாடுகளில் சுற்றுப் பயணம் செய்த நாட்களில் அந் நாட்டு நடை உடைகளை விரும்பவில்லை. இந்திய நாட்டில் இருப்பது போலவே எங்கும் கதராடையும் கதர்க் குல்லாவும் அணிந்து சென்றார். அவரது தோற்றத்தைக் கண்ட சிலர் எள்ளி நகையாடினர். அவர், தமது உடை நடைகளைக் கண்டு இகழ்ந்த அவ் அயல் நாட்டினர்க்குக் கதராடையின் பெருமையை விளக்கி உரைத்தார். இடையில் எகிப்து நாட்டிற்கும் சென்று திரும்பினார். அங்கும் காந்தியக் கொள்கைகளைப் பற்றிப் பலர்க்கும் எடுத்துரைத்தார்.

இங்ஙனம் மேலை நாடுகளில் பயணம் செய்த காலத்தில் ஆராய்ந்து தொகுத்த அரிய கருத்துக்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கதரின் மகத்துவம், காந்திய தத்துவம் என்ற நூல்களாக வெளியிட்டார். அந் நூல்களைக் கண்ட காந்தியடிகளும் காங்கிரசுத் தலைவர்களும் வியந்து மகிழ்ந்து நயந்து பாராட்டினர்.

## ௧௭. தருமவீரர் இராசேந்திரர்

போரை, அறப்போர் என்றும் மறப்போர் என்றும் இருவகையாகப் பிரிப்பர். உலகில் பல பாகங்களிலும் இதுவரை நடைபெற்ற போர்கள் எல்லாம் மறப்போர்களே. வன்னெஞ்சமுடைய மக்கள் பழி பாவங்கட்கு அஞ்சாது உயிர்களைக் கொன்று குவிக்கும் கொடும் போரே மறப்போர் என்று குறிக்கப்படும். அன்பின் அடிப்படையில் பிறர் செய்யும் துன்பத்தை யெல்லாம் பொறுமையுடன் ஏற்றுத் தீமைகள் அகலுமாறு இறைவனை வேண்டி நிற்பதே அறப்போர் முறையாகும்.

இத்தகைய அறப்போர் முறையை உருவாக்கி அதனாலும் பகையை வெல்லலாம் என்று உலகிற்குக் காட்டிய உத்தமர் காந்தியடிகளாவார். பாரத நாடு சுதந்திரம் பெறுதற்குக் காந்தியடிகள் இத்தகைய அறப் போரையே மேற்கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்தார். 1920-ஆம் ஆண்டில் சுதந்திரப் போர் தொடங்கியது. இராசேந்திரர் பீகார் மாகாணம் எங்கும் சுற்றி அப் போருக்கு ஆயிரக்கணக்கான தரும வீரர்களைத் திரட்டினார். சுதந்திர இயக்கம் வலிமை பெற்று வருவது கண்டு ஆங்கில அரசாங்கம் அஞ்சியது. மாகாணத்தின்

மாபெருந் தலைவராகிய இராசேந்திரரைச் சிறை செய்தால் நாட்டில் பெருங்குழப்பம் ஏற்படும் என்று எண்ணி வாளா இருந்தது.

1930-ஆம் ஆண்டில் காந்தியடிகள் உப்பு அறப் போரைத் தொடங்கினர். உலகம் என்றுமே கண்டிராத இவ் உப்பு அறப்போரைக் கண்டு ஆங்கில அரசாங்கம் அடக்குமுறைக் கொடுமைகளை அளவின்றிச் செய்தது. அதைக்கண்ட இராசேந்திரர் இவ் உப்புப் போர் நாடெங்கும் ஓங்கி நடைபெறுமாறு பெருங்கிளர்ச்சி செய்தார். அப்பொழுது அரசாங்கம் இராசேந்திரரைச் சிறை செய்து ஆறு மாதம் காவலில் வைத்தது. அதை அறிந்த இந்திய மக்கள் ஆத்திரம் கொண்டனர். அச் சமயத்தில் அலகபாத் நகரினின்று வெளியாகும் "லீடர்" என்னும் செய்தித்தாள் பெரிதும் வருந்தி எழுதியது.

"பீகார் மாகாண மக்களுக்கு இராசேந்திரர் தெய்வம் போன்றவர். இந்திய மக்கள் அவரிடத்துப் பெருமதிப்புடையவர்கள். அவர் தந்நலம் கருதாத் தகைமையர். ஏழைகட்கு உதவும் இனியர். இத்தகைய உயர்ந்த பண்புகளால் மக்கள் உள்ளத்தில் தக்க இடம் பெற்றவர். காந்தியடிகளின் மிகுந்த அன்பிற்குப் பாத்திரமான அரிய தொண்டர். மனம், மொழி, மெய் ஆகிய மூன்றிலும் காந்தியடிகளைப் போன்றே விளங்கும் சாந்தவடிவினர். காந்தியடிகள் காட்டிய அகிம்சையாகிய அறநெறியில் பிறழாது பீகார் மக்கள் செல்லுமாறு செய்து வரும் சிறந்த தரும வீரர் அவ் இராசேந்திரர். காங்கிரசுத் தொண்டரெல்லாம் பாங்குடைய அன்புநெறியில் பணி செய்ய வழிகாட்டி நிற்கும் வள்ளல் அவர். இத்தகைய தருமவீரரைச் சிறையில் அடைப்பதால் அரசாங்கத்திற்கே பெருங்கேடுகள் விளையும். பொதுமக்களுக்கு

அவ் அரசாங்கத்தின் மீது அன்போ நம்பிக்கையோ அணுவளவும் பிறக்காது."

இங்ஙனம் அப் பத்திரிகை இடித்து எழுதிய செய்தியைக் கண்டும் அரசாங்கம் இராசேந்திரரை விடுதலை செய்யாதிருந்தது. பின்னர் 1932-ஆம் ஆண்டிலும் மீண்டும் அவரைச் சிறையில் தள்ளியது. அப்போது அவர் உடம்போடு பிறந்து வளர்ந்துவந்த காசநோய் பெரிதும் அவரை வருத்தத் தொடங்கியது. அரசாங்கம் அவருக்கு எத்தனையோ சிகிச்சைகளைச் செய்தது. ஆறு மாத காலம் சிறையிலிருந்து பின்னர் வெளிவந்தார்.

இராசேந்திரர் திரும்பவும் அறப்போரில் இறங்கினார். அதனால் மூன்றாவது முறையாக அவரைச் சிறையில் தள்ளியது அரசாங்கம். அப்பொழுது பதினைந்து மாதங்கள் சிறையில் கிடந்து வருந்தினார். அந் நாட்களிலும் அவர் காச நோயால் அடைந்த இன்னலுக்கு ஓர் எல்லையில்லை. இங்ஙனம் இராசேந்திரர் நாட்டின் நலங் கருதி மூன்று முறை சிறை புகுந்து வாட்டமடைந்தார். அவர் தாம் இருந்த சிறைக் கூடத்தைத் தவக்கூடமாகக் கருதிப் பாரதநாடு சுதந்திரம் அடையப் பெருந்தவம் புரிந்தார்.

அவர் இந்திமொழியில் "தேசம்" என்றொரு பத்திரிகை நடத்தினார். அதில் ஒத்துழையா இயக்கத்தின் உயர்வு, அகிம்சையைப்பற்றிய அரிய உண்மைகள் ஆகியவற்றை அழகுற எழுதி வெளியிட்டார். அதனை மக்கள் படிப்பதால் அரசாங்கத்திற்குக் கேடுவிளையும் என்று அஞ்சி அப்போதிருந்த ஆங்கில அரசு தடைசெய்தது. இங்ஙனம் பலவகையாலும் சுதந்திர உணர்ச்சியைப் பரப்பி வந்த இராசேந்திரர் இணையற்ற தருமவீரர் அன்றோ!

## ௬௮. இராசேந்திரரின் பூகம்பப் பணி

விஞ்ஞான வளர்ச்சி வியத்தகு முறையில் பெருகி யுள்ள இவ் இருபதாம் நூற்றாண்டில் மனிதனுக்கு இயலாத காரியம் எதுவும் இல்லை என்று வீரியம் பேசு கின்றனர் மக்கள். மனிதன் எத்துணைப் பேராற்றலைப் பெற்றாலும் இயற்கையை வெற்றிகொள்ள அவனால் இயலாது. அவ் இயற்கையைத்தான் தெய்வ சக்தி என்று நம் முன்னோர் போற்றினர்.

அவ் இயற்கை சில சமயங்களில் நினைத்தற்கரிய பெரிய கொடுமைகளை விளைத்தலும் உண்டு. 1934-ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் பதினைந்தாம் நாள் பீகார் மாகாணத்தில் பெரிய பூகம்பம் ஏற்பட்டது. திடீரென்று நிலம் படீரென வெடித்தது. பெரிய மாட மாளிகை களும் கூட கோபுரங்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தொழிந்தன. சில இடங்களில் வீடுகள் சிதறுண்டு வீழ்ந்தன. வேறு சில இடங்களில் வெள்ளம் பெருக் கெடுத்து ஊரையே அள்ளிக்கொண்டு ஓடியது. இன்னும் சில இடங்களில் எங்கும் ஒரே மணற்காடு பரவியது. எண்ணில்லாத பொருள்கள் மண்ணோடு மண்ணாய் மட்கிப் போயின. மக்களும் ஆடு மாடுகளுமாக இறந் தொழிந்த உயிர்களுக்கு எண்ணிக்கையே கிடையாது.

இத்தகைய கொடிய நிலநடுக்கத்தால் பல்லாயிர மக்கள் வீடிழந்து பொருள் இழந்து அலமந்தனர். ஐம் பெரும் பூதங்களும் தலைதடுமாறினவோ என்று மக்கள் நிலை கலங்கினர். இயற்கையின் விளைவுக்கு என் செய் வது என்று ஏங்கித் துடித்தனர் சிலர். "முன் செய்த தீவினைப் பயனே இது" என்று மொழிந்தார் காந்தியடி

கள். "இஃது இயற்கையின் விளையாட்டு" என்று சொல்லி இரங்கினார் கவியரசர் தாகூர்.

இங்ஙனம் எல்லோரும் உள்ளந் தடுமாறிக் கொண்டிருக்கும் சமயத்தில், "பீகார் மாகாணத்தின் பெருந் தலைவராகிய இராசேந்திரர் சிறையில் கிடந்து வருந்துகிறார். தாயனைய தயாளர் இப்போது வெளியில் இல்லையே!" என்று ஏங்கினர் பீகார் மக்கள். அவர் விடுதலையடைய இன்னும் ஒரு திங்களே இருந்தது. பூகம்பத்தால் பேரழிவுற்ற பீகார் மாகாண மக்களின் பெருந்துயரை இராசேந்திரர் தெரிந்தார். 'ஐயோ! இத்தகைய துன்பக் காலத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியாது சிறைக்குள் அகப்பட்டுக் கொண்டோமே!' என்று சிந்தை நைந்துருகினார். அவரது உடலோடு ஒட்டிய காசநோயும் அப்போது அவரைப் பெரிதும் வருத்தியது.

பீகார் மாகாணம் பூகம்பத்தால் அழிவுற்றிருக்கும் இச் சமயத்தில் சிறையுள் இருக்கும் இராசேந்திரருக்கு ஏதும் கேடு நேர்ந்தால் நாடு எங்ஙிலையுறுமோ என்று அஞ்சியது ஆங்கில அரசாங்கம். இந் நிலையில் தேசத் தலைவர்கள் பலர் இராசேந்திரரை உடனே விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தினர். அவரை இச் சமயம் விடுதலை செய்வதால் பல நலங்கள் விளையும் என்று அறிந்த அரசாங்கம் அவ்விதமே விடுதலை செய்தது. அவர் விடுதலையான மூன்றாம் நாளிலேயே பூகம்பத் துயர் போக்கும் பணியில் இறங்கினார்.

பொதுநலம் பேணும் பெருமக்கள் தந்நலத்தைச் சிறிதும் எண்ணமாட்டாரன்றோ! இராசேந்திரர் காச நோயால் உடல் நலிந்து மெலிந்து வருந்தி இருந்தாரேனும் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாது தம் மாகாண

மக்களின் துயரைப் போக்க விரைந்தார். இராசேந்திரர் விடுதலையடைந்த செய்தி கேட்ட பீகார் மக்கள் அனை வரும் பேருவகை வெள்ளத்தில் மூழ்கினர். வீடு, வாசல், மாடு, மனை, உற்ருர், பெற்ருர், மனைவி, மக்கள் முதலிய வற்றையெல்லாம் இழந்து ஏங்கி நின்ற பலரும், அவரது விடுதலை கேட்டு 'இனி நம் இன்னல் அகலும்' என்று எண்ணி இன்புற்றனர்.

பூகம்பத்தால் கேடுற்ற மக்களின் துயரத்தை ஒருவாறு போக்க மிகுதியான பொருள் வேண்டும். இராசேந்திரர் அப் பூகம்பத்தால் ஏற்பட்ட பேரழிவை விளக்கி, நாட்டு மக்களுக்கு அன்பான வேண்டுகோள் ஒன்று விடுத்தார். அவரது அறிக்கை வெளியான மறு நாளிலிருந்தே நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பணம் வந்து குவியத் தொடங்கியது. பீகார் மக்களின் பெருந் துயரைப் போக்க அரசப் பிரதிநிதியும் அதிகாரிகள் வாயிலாக நிதி திரட்டினர். இராசேந்திரர் திரட்டும் நிதியைக் காட்டினும் அதிகமான நிதியைத் திரட்டுதற்கு அரசாங்கம் பெருமுயற்சி எடுத்தது. அதிகார வல்லமை படைத்த அரசாங்கத்திற்குக் கிடைத்த நிதியின் அள வுக்குக் குறையாமல் இராசேந்திரர் நிதியும் திரண்டது.

இராசேந்திரரது இனிய வேண்டுகோளால் ஒன்பது மாத காலத்தில் முப்பது லட்சம் ரூபாய்கட்கு மேல் நிதி திரண்டது. அப் பணத்தைத் துயருற்ற மக்களுக்கு வழங்கும்போது நடுவுநிலை பிறழாது நன்கு ஆராய்ந்தே வழங்கினர். உதவி பெறுவதற்கு உரியவர்கள் எவ் வியல்பினராயினும் அதனைக் கருதாது அவர் துயர் போக்குவதொன்றே குறிக்கோளாகக் கொண்டு உதவி புரிந்தார். இங்ஙனம் இராசேந்திரர் இயற்றிய அருந்

தொண்டினைக் கண்ட பெருமக்கள் அனைவரும் அவருக்கு அரிய துணையாக நின்று உதவினர். அன்று பீகார் மக்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கியவர் இராசேந்திரரே என்று உறுதியாக உரைக்கலாம்.

பூகம்பத்தால் துயருற்ற மக்களின் இன்னலைத் துடைக்க முன்னின்ற இராசேந்திரரைப் பத்திரிகைகள் பாராட்டி எழுதின. அப்போது கல்கத்தாவிலிருந்து வெளிவந்த 'ஸ்டேட்ஸ் மென்' என்ற ஆங்கிலப் பத்திரிகை,

> "பூகம்பத் துயர் போக்க நிதி திரட்டிய புண்ணியர் இராசேந்திரர். அவரது வேண்டுகோளை மதித்து, மக்கள் பல லட்சக்கணக்கான பணத்தைக் கொடுத்துள்ளனர். இதனை நோக்கினால் காங்கிரசுத் தொண்டர்களிடம் பொதுமக்களுக்கு அதிகமான நம்பிக்கை உண்டு என்பது நன்றாகப் புலப்படுகின்றது. பூகம்பத்தால் துயருற்ற பீகார் மக்களுக்கு முதன் முதல் உதவுதற்கு முன்வந்த பெருமை இராசேந்திரருக்கே உரியது. அவரைப்போல் மக்களின் துயரைப் போக்க அல்லும் பகலும் அயராது உழைத்தவர் எவரும் இலர்."

என்று இராசேந்திரரைப் பாராட்டி எழுதியது. அப்போது கல்கத்தா நகர்மன்றத் தலைவராய் விளங்கிய பாபு சந்தோஷ குமார் என்பார், "பீகார் மாகாணத்தில் பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளை நான் நேரிற் சென்று கண்டேன். அங்கெல்லாம் எனது மனக்கண் முன்னால் தோன்றியவர் இராசேந்திரர் ஒருவரே. அவர் நம் பாரத நாட்டின் சீரிய செல்வம். அவர் காச நோயால் மிகவும் வருந்துபவர். எனினும் மக்களின் துயரைப் போக்க அயராது உழைத்து வருகிறார். இன்று பீகார்

மக்களுக்கு ஆறுதல் அளிக்க அவரினும் சிறந்தார் எவரு மிலர்,'' என்று போற்றிப் புகழ்ந்தார்.

அச் சமயத்தில் காந்தியடிகள், "என் துணைவர்க ளாகிய தொண்டர்களுள் இன்று தலைசிறந்தவர் இராசேந்திரர். அரிசன முன்னேற்றப் பணிக்கென்றே இறைவன் என்னைப் படைத்ததாக யான் எண்ணுவது போல, அவரைப் பீகார் பூகம்பத் துயர்போக்கும் பணிக் கென்றே இறைவன் படைத்தான் என்று கருதுகிறேன். அவசியம் நேருமானல் எந்த நேரத்திலும் அவர் என்னை அழைத்து ஏவல் கொள்ளலாம்,'' என்று இராசேந் திரரைப் பாராட்டிப் பத்திரிகைகளில் எழுதினர். இங்ஙனம் பெருமக்கள் பலரும் புகழுமாறு பூகம்பப் பணிபுரிந்த புனிதமான தொண்டர் இராசேந்திரர்.

---

## கக. இராட்டிரபதி இராசேந்திரர்

வானம் மழை பொழிந்து வையகத்தை வளப் படுத்துகிறது. அதற்கு உலகம் என்ன கைம்மாறு செய்ய இயலும்? அதுபோலவே பெரியோர்கள் பிறர் நலம் பேணுவதைத் தம் கடமையாக மேற்கொண் டுள்ளனர். அவர்கள் எத்தகைய கைம்மாறும் எதிர் நோக்கி உதவி புரிவதில்லை. அங்ஙனம் பயனை எதிர் நோக்காது செய்யும் உதவியின் உயர்வுக்கு உலகமே இணையாகாது என்று உரைப்பர் திருவள்ளுவர்.

இராசேந்திரர் இளம் பருவ முதலே பிறர்க்கு நலம் புரிவதில் பெருமகிழ்வு கொண்டவர். தம்மால் நலம் பெற்றவர்களின் முகமலர்ச்சியைக் கண்டு அகமகிழ்ச்சி கொண்டவர் இராசேந்திரர். உடல், பொருள், ஆவி

மூன்றையும் நாட்டின் நலத்திற்கே உதவி இன்புற்றவர். அவர் அதன் பொருட்டுச் சிறு கைம்மாறும் பெற விரும்பியவரல்லர். அவரது அரிய பொதுநலப் பணியை நாட்டுமக்கள் நன்கு கவனித்து வந்தனர். காங்கிரசுத் தலைவர்களும் அவரது பணியில் மிகுந்த கவனம் செலுத்தி வந்தனர்; அவரது உண்மையான ஊழியத் திற்குத் தங்கள் நன்றியைக் காட்டும் நாள் என்று வாய்க்குமென எதிர்நோக்கி இருந்தனர்.

இந்திய மக்கள் இராசேந்திரர்பால் கொண்ட ஒன்று பட்ட அன்பின் பயனாகே 1929-ஆம் ஆண்டில் அவரை இராட்டிரபதியாகக் கொள்ளவேண்டும் என்று விழைந் தனர். இதனை உணர்ந்த 'மாடர்ன் ரிவ்யூ' என்ற மாத இதழ், இராசேந்திரரைக் குறித்துத் தனது கருத்தை நாட்டிற்கு அறிவித்தது.

"எதிர்காலம் இளைஞர்க்கே உரியது. தற்காலமோ இளைஞர்க்கும் முதியோர்க்கும் உரியது. இளைஞர்களே நாட்டின் எழுச்சிக்கு உரிய அரிய சக்தியை ஊட்டுவர். நாடென்னும் சகடத்தைச் செலுத்துபவன் சிறந்த அறிவும் முதிர்ந்த பயிற்சியும் பெற்றிருத்தல் வேண்டும். அங்ஙனம் இருந்தால்தான் அவனால் நாட்டிற்கு நல்ல பயன் விளையும். மக்களாட்சியை விரும்பும் காலம் இது. இந்நாளில் நாட்டுமக்கள் எல்லோருடைய உள்ளத்தை யும் ஒருங்கு கவர்ந்த நல்லானையே தேசத் தலைமைக்குத் தேர்ந்தெடுத்தல் பொருத்தமாகும். ஆரவாரம் இல்லா மல் அடக்கமாகப் பணிபுரியும் அரிய ஊழியர்களும் நாட்டில் உளர். அவர்கட்கும் நாடு பெருமை யளித்தல் வேண்டும். அடக்கமே உருவாய்ப் பணியே வாழ்வாய்க் கொண்டிருக்கும் இராசேந்திரர் இன்றைய நாட்டில் இணையற்ற தலைவர் என்று இயம்பலாம்."

இங்ஙனம் அப் பத்திரிகை எழுதியதைக் கண்ட பெருமக்கள் மிகவும் மகிழ்ந்தனர். அப்பொழுது நாட்டில் சுதந்திரப் போராட்டம் தலை நிமிர்ந்து நின்றது. அதனால் நான்கு ஆண்டுகளாகக் காங்கிரசுப் பேரவை நல்ல முறையில் கூடுதற்கு வாய்ப்பில்லாது போயிற்று. 1934-ஆம் ஆண்டில் அப் பேரவை பம்பாய் நகரில் ஆரவாரத்துடன் கூடியது. அவ்யாண்டு, காங்கிரசுப் பேரவையின் ஐம்பதாவது ஆண்டாகும்.

காங்கிரசுப் பேரவையின் பொன்விழா நடைபெறும் நன்னாளில் இராசேந்திரரே இராட்டிரபதியாகப் பதவி யேற்று; மாநாட்டிற்குத் தலைமை தாங்க வேண்டுமெனப் பாரதநாடு ஒருமை உள்ளத்துடன் அருமையான முடிவு செய்தது. இராசேந்திரரின் ஈடில்லாத உண்மைப் பணிக்கு நாட்டுமக்கள் காட்டும் நன்றி அதனினும் உயர்ந்தது ஒன்றில்லை. பல கோடிக்கணக்கான மக்களின் தனிப்பெருந் தலைவனாகச் சிறப்புற்று ஓங்கும் பெருமை யினும் உயர்ந்தது பிறிதொன்று உண்டோ? இராட்டிர பதி இராசேந்திரர் செல்லும் இடமெல்லாம் "இராட் டிரபதி நீடு வாழ்க!" என்ற முழக்கமே வானைப் பிளந்தது.

காங்கிரசுப் பேரவையின் பொன்விழா, பம்பாய் நகரில் 1934-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபத் தாறும் நாள் பெருமிதமாக நடைபெற்றது. அவ் விழா விற்குத் தலைமை தாங்கிய இராசேந்திரர் ஆற்றிய தலைமைப் பேருரை அவரது உயர்ந்த உள்ளத்தையும் சிறந்த அறிவுநலத்தையும் தெளிவுற விளக்கியது. சத்தியம், அகிம்சை ஆகிய இரண்டையும் அடிப்படை யாகக் கொண்ட அறப்போர் வாயிலாகவே பாரதநாடு

வீரசுதந்தரத்தைப் பெறவேண்டும் என்று நன்ருக வலியுறுத்திப் பேசினுர். அவரது சொல்வன்மையையும் தேசிய உணர்ச்சியையும் கண்ட தலைவர்கள் கழிபேருவகை கொண்டார்கள்.

1939-ஆம் ஆண்டில் சுபாஷ் சந்திரபோஸ் திடீரென்று தமது இராட்டிரபதி பதவியை விட்டு விலகினுர். அப்பொழுது அப் பொறுப்பினை விருப்புடன் ஏற்கப் பலரும் பின்னடைந்தனர். அது கண்ட இராசேந்திரர் தாமே முன்வந்து அப் பதவியை ஏற்றுத் திறம்பட நடத்திப் பெரும்புகழ் அடைந்தார்.

---

## உ௦. இராசேந்திரர் பெற்ற இசை

இவ்வுலகில் இசையுண்டாக வாழ்வதே மக்கட் பிறப்பின் தக்க பயனுகும் என்பர் அறிவின் மிக்கோர். ஒருவன் உலகில் தேடிய இசையே என்றும் பொன்ருது நின்று நிலவும் இயல்புடையது. இசை இல்லாத உடம்புகளைத் தாங்கிய நிலம், வளம் குன்றும் என்பர் வள்ளுவர். இத்தகைய இசை, கலைநலத்தாலும் கொடை வளத்தாலும் படை வலத்தாலும் பணி புரியும் உளத்தாலும் பிற வகையாலும் பெருகக் காண்கிருேம்.

இராசேந்திரர் கலை நலத்தால் தலைமையுற்று விளங்கியவர். "செல்வத்துப் பயனே ஈதல்" என்ற உண்மையை வாழ்வில் கடைப்பிடித்தொழுகிய கருணை வள்ளல். அவர் வழக்கறிஞராகத் தொழில் புரிந்த காலத்தில் திங்களுக்கு ஐயாயிரம் ரூபாய்களுக்கு மேல் வருவாய் வரப்பெற்றவர். அப் பொருளை யெல்லாம் எளிய மாணவர்க்கும் வறிய மக்களுக்கும் உதவி மன

மகிழ்ந்தவர். அவர் அத் தொழிலை விட்டு விலகிச் சுதந்திரப் போரில் இறங்கும் நாளில் அவரிடம் இருபத்தைந்து ரூபாய்களே இருந்தன என்றால் அவரது அருளுள்ளத்தை என்னென்பது! இத்தகைய ஈகை ஒன்றே இணையற்ற புகழை ஒருவர்க்கு உண்டுபண்ணும்.

இராசேந்திரர் மாணவராக இருக்கும்போது அவருடைய கல்வித் திறமையைக் கண்டு போற்றாத ஆசிரியர் எவரும் இலர். பல்கலைக்கழக மாணவர்கள் இராசேந்திரரைத் தமக்குத் தலைவராகக்கொண்டு, அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்தனர். அவர் மாணவர்களின் ஒற்றுமைக்காகச் சங்கம் நிறுவி, அதன் வாயிலாக ஆற்றிய பணிகளைப் போற்றாதார் இல்லை. அப்பொழுதே அமெரிக்க நாட்டுச் சகோதரியாகிய நிவேதிதாதேவி, இவரது தொண்டு உள்ளத்தையும் தூய அறிவு நலத்தையும் இனிய தோற்றத்தையும் கண்டு, "இவன் எதிர்காலத்தில் பாரத நாட்டிற்குத் தலைவனாவான்," என்று நெஞ்சாரப் புகழ்ந்து வாழ்த்தினார்.

விஞ்ஞானப் பேராசிரியர்களாக உலகப் புகழ் பெற்று விளங்கிய ஆசாரிய பிரபல சந்திர ரே, ஜகதீச சந்திர போசு ஆகிய இருவரிடத்தும் கலைபயிலும் பேறு பெற்றவர் இராசேந்திரர். அப்பேரறிஞர்கள் இருவரும் இவரது கலைத் திறமையையும் குணப் பெருமையையும் கண்டு மன மகிழ்ந்து கொண்டாடினர். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகத் திகழ்ந்து வந்த ஆசுதோஷ் முக்கர்ஜி என்னும் பேரறிஞர், இராசேந்திரரின் இணையிலாக் கலைநலம் கண்டு வியந்து புகழ்ந்தார்.

முசபர்பூர் கலாசாலை நிதி வசதியின்றி மூட நேரிடுமோ என்று, அக் கலாசாலை ஆட்சியாளர்கள்

அஞ்சியிருந்த வேளையில் இராசேந்திரரைப் பேராசிரியராக நியமிக்குமாறு பலரும் அறிவுறுத்தினர். அங்ஙனமே இராசேந்திரர் அக் கலாசாலையில் ஆங்கிலப் பேராசிரியப் பணியை ஏற்றதும் அக் கலாசாலை ஏற்றமும் தோற்றமும் பெற்று இலங்கியது. அவர் பணியேற்ற சில திங்களுக்குள் அக் கலாசாலைக்கு வேண்டிய நிதியைத் திரட்டி வைத்தார். அதனால் கலாசாலைக்குப் புத்துயிரளித்த சித்தர் என்று இராசேந்திரரை எல்லோரும் ஏத்தினர்.

அமெரிக்க நாட்டு அறிஞருள் ஒருவரான ஜான்கந்தர் என்பார் உலகம் அறிந்த சிறந்த எழுத்தாளர். அவர் ஒருகால் இந்திய நாட்டிற்கு வந்தார். இங்குள்ள அரசியல் தலைவர்கள் பலரையும் தனித்தனியே கண்டு உரையாடினர். அதன் பயனாக இந்திய நாட்டைப்பற்றி இனியதொரு நூலை எழுதினார். அந்நூல் அவரது அறிவு ஆழத்தையும் எழுத்தாற்றலையும் இனிது விளக்குவதாகும். அந் நூலில் ஜான்கந்தர், இந்தியத் தலைவர்களைப்பற்றிச் சில குறிப்புக்கள் கொடுத்துள்ளார்.

"இந்தியாவின் உயிர் நாடியாக விளங்கும் ஒப்பற்ற தலைவர் காந்தியடிகள். அவருக்கு அடுத்த நிலையில் அவரது வலக்கைபோல் விளங்குவோர் மூவர். அம் மூன்று பேர்களுள் திலகம் போன்றவர் இராசேந்திரரே. அம் மூவரும் ஓர் உருக்கொண்டால் அவ் உருவத்தின் இதயமாகத் திகழ்பவரும் இராசேந்திரரே." இங்ஙனம் அவ் அமெரிக்க ஆசிரியர் தம் நூலில் குறித்துள்ளார்.

பாடலிபுரத்தில் சிறந்த வழக்கறிஞராக இருந்தவர் சச்சிதானந்த சின்கா என்பார். அவர் பீகார் மாகாண அரசாங்கத்தின் ஆட்சிமன்றத்தில் நிதிச்சாலை உறுப்பினராகப் பதவி தாங்கியவர். அவர் இராசேந்திரரை

இளமை முதல் நன்கு அறிந்தவர். அப் பெரியார் இராசேந்திரரைப் புகழ்ந்துரைக்கும் சொற்கள் பொன்னேபோல் போற்றத் தக்கனவாகும்.

"இராசேந்திரர் துறவியரைப் போன்ற தூய ஒழுக்கமுடையவர். அவர் முகத்தைப் பார்த்தவர்க்கும் அகத்தில் அன்பு பிறக்கும். பரந்த அறிவும் விரிந்த நோக்கமும் உயர்ந்த நாட்டுப்பற்றும் உடையவர் இராசேந்திரர். அவர் பொறுமையும் அடக்கமும் ஒருங்கு பொருந்தியவர். எவரையும் இழிவாகக் கருதும் இயல்பு, அவருக்குக் கிடையாது. பாரதத் தாய்க்கு அவர் செய்துள்ள பணிகள் எவரையும் திடுக்கிடச் செய்யும்." இவ்வாறு சச்சிதானந்த சின்கா, இராசேந்திரரை உச்சி மேல் கொண்டு போற்றினர்.

இங்ஙனம் அயல்நாட்டு அறிஞரும், உள்நாட்டு உயர்ந்தோரும் உவந்து புகழ்பாட ஒளி வீசிய பெருமான் இராசேந்திரர், தேசப் பணியாலும் நேசக் குணத்தாலும் தேசுற்று விளங்கும் இராசேந்திரர், இந்நாளில் குன்றின் மேலிட்ட மணிவிளக்காய் இசையின் சிகரத்தில் வீற்றிருக்கிருர்.

---

## உக. இராசேந்திரரின் இனிய பண்புகள்

பீகார் நாட்டின் பெருவள்ளலாக விளங்கிய இராசேந்திரரின் இனிய பண்புகள் அவரை உலகறியச் செய்தன. இன்று குடியரசு பெற்ற பாரத நாட்டின் தலைவராக விளங்கும் தகுதியைத் தந்துள்ளன. அவரது தோற்றம், ஆற்றல், தூய உள்ளம், இனிய மொழி, எளிய வாழ்வு ஆகிய இனிய பண்புகளைப் போற்ருதார் உலகில் இலர்.

இராசேந்திரர் இளம்பருவத்திலிருந்தே பொது நலப் பணியில் ஈடுபட்டார். கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருக்குங்கால் பீகார் மாணவர் நலனுக்காகப் பெரிதும் தொண்டு புரிந்தார். பீகார் மாணவர்க்கும் வங்க மாணவர்க்கும் ஒற்றுமையை உண்டு பண்ண மாணவர் மாநாட்டைக் கூட்டினார். கல்கத்தாவில் காங்கிரசுப் பேரவை கூடிய காலத்தில் தொண்டர் படையில் சேர்ந்து கண்டவர் வியக்குமாறு விருப்புடன் பணிபுரிந்தார்.

அவர், முசபர்பூர் கலாசாலைப் பேராசிரியப் பணியை ஏற்றபொழுது அக் கலாசாலையின் நிதிநிலை மிகவும் குறைவுற்றிருந்தது. அதனால் தகுந்த ஆசிரியர்களின்றி மாணவர்களின் கல்வித்தரமும் தாழ்ந்துவிட்டது. அதனை உணர்ந்த இராசேந்திரர் கலாசாலையின் நிதிநிலையையும் கல்வித்தரத்தையும் உயர்த்துவதற்கு அரும்பாடுபட்டார். ஓராண்டிற்குள் அக் கலாசாலையைத் தக்க நிலைக்குக் கொண்டு வந்த பெருமை இராசேந்திரரையே சாரும்.

இராசேந்திரர் 1905-ஆம் ஆண்டில் பி. ஏ. தேர்வு எழுதி, மாகாண முதல்வராகத் தேர்ச்சி பெற்றார். உடனே, அவரை ஐ. சி. எஸ். தேர்வுக்கு அனுப்ப வேண்டும் என்பது தந்தையாரின் பேராவல். தந்தையாரின் சொல்லைத் தட்டி நடவாத பிள்ளை இராசேந்திரர். ஆயினும், ஐ. சி. எஸ். தேர்வில் வெற்றிபெற்று ஆங்கிலேயருடைய அரசியல் அடிமையாகத்தானே உத்தியோகம் நடத்தவேண்டும்! என்று அவர் தந்தையாரின் விருப்பிற்கு இசையவில்லை.

தந்தையாருக்குப் பின் தமையனார் மகேந்திரரின் பாதுகாப்பில் இராசேந்திரர் வளர்ந்து வந்தார். அவர்

தம் தம்பி நன்கு கற்றுப் பெரும்பொருள் தேடிக் குடும்பத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவான் என்று நம்பியிருந்தவர். அந் நிலையில் இராசேந்திரர் இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்து, நாட்டிற்குச் சேவைசெய்யப் போவதாகத் தமையனுருக்குத் தெரிவித்தார். அதனை அறிந்த தமையனுராகிய மகேந்திரர், தாம் எண்ணிய மனக்கோட்டையெல்லாம் தகர்ந்துவிடுமோ என்று கண்ணீர் சொரிந்தார். அவர் வருந்துவதைத் தெரிந்த இராசேந்திரர், தமையனுர் எண்ணத்திற்கு மாருக எதுவும் செய்யலாகாது என்று தமது எண்ணத்தையே மாற்றிக்கொண்டார். இங்ஙனம் தந்தையார், தமையனுர் முதலிய பெரியோர்களிடத்துப் பேரன்புடனும் மரியாதையுடனும் நடந்துகொண்ட நல்ல பிள்ளை இராசேந்திரர்.

பேராசிரியப் பணியினின்று நீங்கிய இராசேந்திரர் கல்கத்தா சட்டக்கல்லூரியில் பயின்று வழக்கறிஞரானுர். முதலில் கல்கத்தா உயர்நீதி மன்றத்திலும், பின்பு பாட்னு உயர்நீதி மன்றத்திலும் அவர் வழக்கறிஞர் தொழிலைத் திறம்பட நடத்தினுர். அவருடைய சட்ட நூற்புலமை, வழக்காடும் வன்மை, சிறந்த சொல் வன்மை, நேர்மை, தூய்மை முதலிய நலங்களைக் கண்ட மக்கள் அவரைச் சிறந்த வழக்கறிஞராக மதித்தனர். அதனுல் அவருக்கு ஆரம்பக் காலத்திலிருந்தே மாதம் ஒன்றிற்குப் பல்லாயிரக் கணக்கில் வருவாய் வந்து குவிந்தது. அவர் தாம் தேடிய செல்வத்தில் பெரும் பகுதியை ஏழை மக்கட்கு உதவி அவர்களது இன்முகம் கண்டு மகிழ்வார்.

1934-ஆம் ஆண்டில் பீகார் நாட்டில் பெரிய பூகம்பம் ஏற்பட்டதன்றோ! அப்பொழுது இராசேந்திரர்

சிறையில் இருந்தார். பீகார் மக்களின் பெருந்துயரைத் துடைக்கும் பெருமான் இராசேந்திரர் ஒருவரே என்பதை ஆங்கில அரசாங்கமும் பாங்குற அறிந்தது. உடனே அவருடைய தண்டனைக் காலம் முடிவடைதற்கு ஒரு திங்கள் முன்பே அவரை விடுதலை செய்தது. சிறையிலிருந்து வெளிவந்த இராசேந்திரர் தம் மாகாணத்து மக்களின் அவலநிலையைக் கண்டு ஆறுகக் கண்ணீர் வடித்தார். நாட்டு மக்கள் அறியுமாறு நிலையை விளக்கி அறிக்கையொன்று விடுத்தார். அவரது அறிக்கையைக் கண்ட மக்கள் பலவகையாலும் பீகார் மக்களுக்கு உதவினர். இராசேந்திரர் முப்பது லட்சம் ரூபாய்களுக்கு மேல் பூகம்பநிதி திரட்டினர். அப் பொருளையெல்லாம் தக்கார்க்கு வழங்கி, மக்களின் துயர் போக்கிய திறம் வியத்தற்குரியதாகும்.

1934-ஆம் ஆண்டு மேமாத இறுதியில் குவெட்டா நகரில் கொடுமையான பூகம்பம் ஒன்று ஏற்பட்டது. அதனால் அந் நகரமே அடியோடு ஒழிந்துவிட்டது. முப்பதாயிரம் மக்களுக்குமேல் அப்போது உயிர் இழந்தனர் என்பர். அதனை அறிந்த இராசேந்திரர் உள்ளமும் உடலும் ஒருங்கே துடித்தார். அப் பகுதிக்கு விரைந்து சென்று, ஆங்குத் துயருறும் மக்களுக்குத் தக்க உதவி செய்ய மிக்க ஆர்வங்கொண்டார். ஆங்கில அதிகாரிகள் அவர் அங்குச் செல்லாதவாறு தடை செய்தனர். அந் நிலையில் குவெட்டா நகர் மக்களைக் குறித்து அல்லும் பகலும் எண்ணியெண்ணி மனம் புண்ணாய் உலைந்தார். இவ்விதம் துயர் உற்றார்க்குத் துணைசெய்ய வேண்டும் என்று உள்ளம் துடித்த வள்ளலன்றோ இராசேந்திரர்!

1936-ஆம் ஆண்டில் காங்கிரசுக்காரர்கள் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுப் பல மாகாணங்

களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர். அப்பொழுது பீகார் மாகாணத்தில் அமைச்சர் அவையை அமைக்கவும், முதலமைச்சர் பதவியைத் தாங்கவும் இராசேந்திரரையே எல்லோரும் வேண்டிக்கொண்டனர். அவர் அமைச்சுப் பதவியில் சிறிதும் பற்றில்லாதவராய்த் தம் தோழர் களையே அமைச்சர்களாக்கிப் பெரிதும் மகிழ்ந்தார். அவர்கள் பெற்ற பெருமையைத் தாம் பெற்றதாகவே எண்ணி இன்புற்ற பெரியார் இராசேந்திரர். இங்ஙனம் பதவிப் பற்றற்று விளங்கிய இராசேந்திரர் பதவியேற்ற அமைச்சர்களுக்குப் பக்கத் துணையாக இருந்து மிக்க உதவி புரிந்து வந்தார்.

1937-ஆம் ஆண்டில் நிகழ்ந்த இரண்டாவது உலகப் போரில் இங்கிலாந்து இன்னது செய்வதெனத் தெரியாது தத்தளித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது இந்தியா வில் சுதந்திரப் போரும் நடந்துகொண்டிருந்தது. இச் சமயத்தில் சுபாஷ் சந்திர போஸ் இராட்டிரபதியாக விளங்கினர். அவர், "இச் சமயத்தில்தான் இங்கிலாந் தைத் தாக்கி நம் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்," என்று காங்கிரசுத் தலைவர்களிடம் வற்புறுத்தினர். அப்பொழுது அறமே உருவாய் விளங்கிய காந்தியடிகள் 'அது அறமன்று' என்று வாதாடினர். அவரது கருத்தை மறுத்து, மறப்போரைத் தொடங்கவேண்டுமென மன்றாடினர் சுபாஷ் சந்திரர்.

அச் சமயத்தில் அன்பே உருவான இராசேந்திரர் சுபாஷ் சந்திரரைச் சந்தித்துப் பண்பான மொழிகள் பல பகர்ந்தார். "அறவழியாலன்றி மறவழியால் ஒருநாளும் நாம் சுதந்திரத்தைப் பெறலாகாது; இன்னலுக்கு உள் ளாகியுள்ள இங்கிலாந்தை நாமும் எதிர்த்துத் தாக்குதல்

முறைமையன்று" என்று அன்பொழுக நல்லுரை நவின்றார். இங்ஙனம் பகைவரையும் அன்பால் வெல்லக் கருதிய அருளாளர் இராசேந்திரர்.

1946-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் இந்திய நாட்டு ஆட்சியை நம்மவர்பால் அளித்து நகர்ந்தனர். இந் நாட்டு அரசியல் அமைப்பைத் திருத்தி அமைத்தற்கு முன்னால் இடைக்கால அரசினைப் பண்டித சவகர்லால் நேரு முன்வந்து நிறுவினார். அப்போது முசுலீம் லீகுத் தலைவராகிய ஜனாப் ஜின்னா அதற்கு இசையவில்லை. இந்தியாவைத் துண்டாட வேண்டுமென்று மன்றாடினார். அவருடைய முறைமையற்ற உரைகளையும் இராசேந் திரர் அமைதியாகக் கேட்டறிந்தார். அவருக்குப் பொறுமையுடன் மறுமொழி பகர்ந்தார்.

"முசுலீம்கள் இந்தியர் அல்லரோ? அவர்கள் தாம் இந்தியரல்லர் என்று சொல்லுவரோ? இந்திய நாட்டில் அவர்கள் பிறந்தவர் அல்லரோ? மதத்தால் பிரிந்து விட்டால் நாட்டையும் பிரிக்கவேண்டும் என்று விரும்புவது பொருந்துமோ? இந்துக்களும் முசுலீம் களும் அன்புகொண்டு மனம் ஒன்றி நன்றாய் வாழலாம்" என்று நல்லுரை நவின்றார். ஜனாப் ஜின்னாவின் எண் ணத்தை மாற்ற இனிய நூலொன்றையும் எழுதினார். இங்ஙனம் இந்து முசுலீம் ஒற்றுமையை உண்டு பண்ண இராசேந்திரர் எடுத்துக்கொண்ட முயற்சி பெரிதாகும்.

இடைக்கால அரசில் இராசேந்திரர் உணவு அமைச்சர் பொறுப்பினை ஏற்றார். அந் நாளில் உலக நாடுகள் பலவும் உணவுப் பொருள்கள் கிடைக்கப் பெறாமல் உலைவுற்றன. நம் நாட்டிலும் உணவுப் பஞ்சம் வாட்டி வருத்தியது. அத்தகைய உணவுக் குறையைப்

போக்குதற்கு இராசேந்திரர் இரவு பகலாக உழைத்தார். நாடெங்கும் சென்று உணவுப் பொருள்களைப் பெருக்கு தற்கு வகை தேடினர். அது சமயம் 1947-ஆம் ஆண்டு மே மாதத்தில் சென்னை மாநகருக்கும் வந்து பசியால் வாடிய மக்களுக்கு ஆறுதல் அளித்தார். உணவுப் பங்கீட்டு முறையை நாடெங்கும் பரப்பி, ஏழைகளின் பசித்துயரைப் போக்கினர். இங்ஙனம் பசிப்பிணி என் னும் பாவியை ஒழித்த பெருமானது புகழை அளவிட்டுப் பேச முடியுமோ!

---

## உஉ. குடியரசுத் தலைவர் இராசேந்திரர்

இந்திய நாடு 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் பதினைந்தாம் நாள் முழுவுரிமை பெற்ற பாரத நாடாக மலர்ச்சியுற்றது. இச் சுதந்திர பாரதத்தின் அரசியல் சட்டங்களை ஆராய்ந்து திருத்தி அமைத்தற்குச் சட்டக் கலையில் வல்லுநரான பல்லோர் கூடிய அரசியல் நிர்ணய சபை அமைக்கப் பெற்றது. அதற்கு வல்லார் ஒரு வரைத் தலைவராக்க விரும்பினர் அரசியல் தலைவர்கள். அப் பதவிக்குத் தகுதியுடையார் இராசேந்திரரே என்று எல்லோரும் ஒன்றுபட்ட உள்ளத்துடன் உரைத்தனர்.

இடைக்கால அரசியல் உணவு அமைச்சராகப் பணி புரிந்து கொண்டிருந்த இராசேந்திரர் அரசியல் நிர்ணய சபைத் தலைவர் பதவியை ஏற்றார். அவரது தலைமையில் தொடங்கிய அச் சபை நெடுநாள் ஆய்வு நடத்திப் பாரதக் குடியரசின் அரசியல் அமைப்பை உருவாக்கி உதவியது. அதன் பின்னர் 1951-ஆம் ஆண்டு சனவரி 26-ஆம் நாள் பாரதக் குடியரசு மலர்ந்தது. அவ் அரசியல் அமைப்பு முறைப்படி நாட்டில் பொதுத்தேர்தல் நடைபெற

வேண்டும். அத் தேர்தல் காலம்வரை இராசேந்திரரையே குடியரசுத் தலைவராக அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுத்தது.

பின்னர், நாட்டில் பொதுத் தேர்தலும் நடைபெற்றது. இறுதியில் குடியரசுத் தலைவர் பதவிக்கும் தேர்தல் நடந்தது. அத் தேர்தலிலும் இராசேந்திரரே வெற்றியுற்றார். இங்ஙனம் நாட்டிலுள்ள பேரறிஞர்களாலும் பெருமைக்குரிய மக்கள் தலைவர்களாலும் தேர்ந்தெடுக்கப் பெற்ற குடியரசுத் தலைவர் இராசேந்திரர் ஆவார். இவரே குடியரசு பெற்ற பாரத நாட்டின் முடிசூடா மன்னர். இந் நாட்டின் முதல் குடியரசுத் தலைவராக விளங்கும் இணையற்ற பெருமைக்கு இராசேந்திரரே உரிமையுடையவரானார். அவரது உண்மையான தொண்டும் உயர்ந்த தியாகமுமே இத்தகைய சிறப்பினை எய்துமாறு செய்தன. முதல் குடியரசுத் தலைவர் இராசேந்திரர் நீடு வாழ்க!

> ‘அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
> இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே.’

என்று பாடினார் தமிழ்ப் பெருந் துறவியாராகிய தாயுமானவர். அவருடைய அனுபவம் நிறைந்த மணிமொழிக்கு இராசேந்திரர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறாரன்றோ!

பாரதக் குடியரசின் முதல் தலைவராகிய இராசேந்திரர், தம் நாட்டு மக்களுக்கு வாய்ப்பு நேரும்போதெல்லாம் தக்க அறவுரைகளை வழங்கி நல்வழி காட்டி வருகிறார். 1956-ஆம் ஆண்டு மே மாதத்தில் புதுடில்லி மாநகரில் புத்தர்பிரானது 2500-ஆவது பிறந்தநாள் விழாச் சிறப்புற நடந்தேறியது. அவ் விழாவின்போது

நம் குடியரசுத் தலைவர், நாட்டுமக்கள் அனைவரும் கேட்டு உய்யுமாறு வானொலி வாயிலாக உயர்ந்த அறிவுரை யொன்று வழங்கினார்.

"புத்தர் பெருமான் பூவுலகில் தோன்றிய இப் புனித நன்னாளில் பாரதநாட்டு மக்கள் அனைவருக்கும் வெளி நாடுகளிலுள்ள மற்றவர்களுக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன், மனித சமுதாயத்துக்குக் கிடைத்துள்ள மிகப் புனிதமான போதனை ஒன்றில் நம்முடைய கவனமெல்லாம் இன்று படியுமாதலால் இந்நாள் உலக முழுதிற்குமே ஒரு நன்னாளாகும். புத்தரின் போதனை இப்போதைய உலக மக்களின் உள்ளப் போக்கிற்கு முரண்பட்டதாகக் காணப்படுகிறது. ஆயினும், அது மிகவும் உன்னதமான போதனையாக இருக்கின்றது. உலக சமாதானத்தையும் பொறுமைத் தன்மையையும் அது போதிக்கின்றது. மனிதனுக்கு இவ் உலகத்தில் எப்பொழுதும் இருக்கக்கூடிய பிரச்சினைகளைச் செயலளவில் தீர்த்து வைப்பதற்கு அது வழி வகுக்கின்றது. அதனால் புதுமையான உள்ளப் போக்குடையவர்களையும் அது கவர்ந்து விடுகிறது.

"புத்தர் பெருமானைப் போற்றும் பணிவுள்ள தொண்டன் என்ற முறையில் நான், அவரது போதனைகளையும் அவர் கூறியுள்ள ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் பின்பற்றி நடக்குமாறு உலக மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உலகத்தில் பிணக்குகளும் பெருங் கொடுமைகளும் தாண்டவமாடுகின்றன. அன்பு, பொறுமை, அமைதி முதலியவைகளைப் போதிக்கிற புத்தரின் அறவுரைகள் உலகிற்கு இப்போது தேவையா

யிருக்கிற அளவுக்கு, முன்னுளில் எப்போதுமே தேவைப் பட்டதில்லை என்று கூறலாம்.

"புத்தர் மிக உயர்ந்த நிலையில் இருந்துகொண்டு மக்களுக்கு உபதேசம் செய்யவில்லை. மிகவும் சாதாரண வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கும் செயலளவில் பயன்படக் கூடிய சிறந்த உண்மைகளையே அவர் உரைத்தருளினுர். எதிலுமே தீவிர நிலையைக் கைக் கொள்ளாமல் சிறந்த நடுநிலைமையைக் கையாளும்படி அவர் கூறிய தத்துவம் உலகிற்குக் கிடைத்த மிக அரிய போதனையாகும். மனிதன் அணுவாற்றலைக் கொண்டு நன்மையையோ நாசத்தையோ உண்டுபண்ணுவதற்கு வல்லமை பெற்றுள்ள இன்றைய சூழ்நிலையில் புத்தரின் வாழ்க்கைத் தத்துவமும் மனித சமுதாயத்துக்கு அவர் விடுத்துள்ள அறவுரையும் இப்போது தனிப்பெருஞ் சிறப்பைப் பெற்றுள்ளன.

"எல்லா நாடுகளிலும் ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய அறிஞர்கள் அனைவரும் இப்போது புத்தர் போதனை களை நடைமுறையில் கையாளவேண்டிய காலம் வந்து விட்டது என்று உணர்ந்து வருகிருர்கள். நீண்ட கால மாய் வரலாற்று நூல்களில் மட்டுமே போற்றி வழிபடப் பெற்று வந்த புத்தரின் சமாதான அன்பு நெறியை நடை முறையில் கையாண்டு உறுதியான பேரழிவிலிருந்து காத்து மீட்பதற்குரிய காலம் நெருங்கிவிட்டது என்பதை அவர்கள் உணர்ந்து வருகின்றனர். இன்று கொண் டாடப் பெறும் புத்தரின் 2500-ஆவது ஆண்டுவிழா, இந்த நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தி, அமைதி யான சூழ்நிலையை அனைத்துலகிற்கும் உண்டுபண்ணு மென உறுதியாக எண்ணுகின்றேன்.

"புத்தர் பெருமான் தோன்றி வாழ்ந்து பொருளுரைகளை வழங்கிப் புனிதப்படுத்திய நாடு, நம் பாரதப் பெருநாடாக இருந்தபோதிலும், மற்றைய மாபெரும் ஞானிகளைப் போலவே உலகம் முழுதிற்கும் அவர் உரியவராவர். அவரது போதனையும் உண்மையில் உலகனைத்திற்குமே பொருந்துகிற சிறந்த பொன்மொழியாகும்."

இவ்வாறு இராசேந்திரர், புத்தரின் போதனை மாண்பை உலகிற்கு எடுத்து விளக்கினர்.

தமிழகத்தில் தொண்டை நாட்டின் பண்டைத் தலைநகரமாக விளங்கிய காஞ்சிமாநகருக்கு நம் குடியரசுத் தலைவர் 1956-ஆம் ஆண்டு மே மாதத்தில் வருகை புரிந்தார். அப்பொழுது அந் நகருக்கு ஐந்து கல் தொலைவில் அமைந்துள்ள சர்வோதயபுரத்தில் சர்வோதய மாநாடு ஒன்று நடைபெற்றது. அம் மாநாட்டில் கலந்துகொண்ட குடியரசுத் தலைவராகிய இராசேந்திரர் நிலக்கொடை இயக்கத்தைப் போற்றி நீண்ட உரையொன்று நிகழ்த்தினர்.

"உலகம் தனது தீராத பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துக்கொள்ள நிலக்கொடைத் தத்துவமே ஒரே நிலையான தீர்வாகும். எதையும் தனக்கென்று வைத்துக் கொள்ளாதிருப்பதே பூதான இயக்கத்தின் புனித தத்துவமாகும். இஃது ஒப்புயர்வற்ற உலக இயக்கமாகும். ஆதலின் இவ் இயக்கச் செய்தி, எங்கும் எளிதில் பரவும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. இதனை அரசாங்கம் மேற்கொள்ளவில்லையே என்று இவ் இயக்கத் தொண்டர்கள் சோர்ந்துவிடக் கூடாது. வரலாற்றை நோக்கினல் எந்த அரசாங்கமும் எந்தக் காலத்திலும் எந்த இயக்கத்தையும் தொடங்கியதில்லை.

புத்தர் தம் போதனைகளைப் பரப்புதற்கு முன் தமது அரசினைத் துறந்தார். உலகிற்கு அறநெறிகளை உபதேசித்த ஏசுவும் நபியும் அரசர்களல்லர்.

"இப் பூதான இயக்கம் பிறநாடுகளிலுள்ள அறிஞர்களின் சிந்தனையைக் கவர்ந்துவிட்டது. இவ் இயக்கத் தொண்டர்களின் செயலையெல்லாம் இன்று உலகம் நன்ருகக் கவனித்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் உறுதியுடனும் ஊக்கத்துடனும் இச் செயலில் முன்னேற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இவ் இயக்கம் மிகவும் புரட்சிகரமானது. மற்றைய இயக்கங்களுக்கும் இதற்கும் மலைக்கும் மடுவிற்கும் உண்டான வேறுபாடு உண்டு. பிற இயக்கங்கள் எல்லாம் செல்வத்தைப் பெருக்கவும் நாட்டைக் கவரவுமே முனைகின்றன. பூதான இயக்கத்திற்கோ அங்ஙனம் எடுக்கத் தெரியாது; கொடுக்கவே தெரியும்.

"அரசாங்கம் நீண்டகாலமாக நிறைவேற்ற முடியாத ஒரு செயலை இவ் இயக்கம் ஒருசில ஆண்டுகளில் நிறைவேற்றியிருப்பது கண்டு பாராட்டுகின்றேன். அரசாங்கமே இவ் இயக்க வேலையை எடுத்துக் கொண்டிருந்தாலும் இப்பொழுது இவ் இயக்கம் பெற்றுள்ள பெருமளவு நிலத்தைப் பெற்றிருக்க முடியாது. ஆகையால் அரசாங்கத்தின் உதவியின்றியே இவ் இயக்கம் வெற்றி பெற வேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்."

இங்ஙனம் குடியரசுத் தலைவர், பூதான இயக்கப் பணிகளைப் போற்றித் தொண்டர்களை வாழ்த்தினர்.

மேலும், அக் காஞ்சிமாநகரில் சர்வோதய மாநாட்டை அடுத்து நடைபெற்ற ஆதாரக் கல்வி வளர்ச்சி மாநாட்டிலும் நம் குடியரசுத் தலைவர் கலந்து

பேருரை வழங்கினார். பாரத நாட்டிலுள்ள பல மாகாணங்களின் கல்வி அமைச்சர்களும் கல்வித்துறை அதிகாரிகளுமாக இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கல்வித் துறை வல்லார்கள் அம் மாநாட்டில் திரண்டிருந்தனர். அப்பொழுது குடியரசுத் தலைவராகிய இராசேந்திரர் ஆற்றிய பேருரை, நாட்டின் வருங்காலப் பெருவாழ்வுக்கு அடிகோலியது போன்ற அருமையுடையதாகும்

"ஆதாரக் கல்வித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கவேண்டிய பொறுப்பு, பாரத நாட்டிலுள்ள ஒவ்வொரு மாகாண அரசிற்கும் உயிர்நாடியான கடமையாகும். ஆதாரக் கல்வி என்ற பெயரே நாட்டிற்கு அடிப்படை என்ற கருத்தை நன்ருக வலியுறுத்துகிறது. இக் கல்விமுறை, பல்கலைக்கழகப் படிப்புவரை பரவினலொழிய நாட்டில் அதிக முன்னேற்றத்தைக் காணமுடியாது. தற்காலத்தில் உள்ள இன வேற்றுமைக்கும் சமத்துவமின்மைக்கும் இப்போதுள்ள கல்வி முறையே முக்கிய காரணமாகும். இவ் வேற்றுமைகள் நாட்டை விட்டொழிய இளைஞர்களிடையே ஆதாரக் கல்விமுறை பரவுதல் வேண்டும். இதுவே இந்திய சுதந்திரத் தந்தையாராகிய காந்தியடிகள் இந் நாட்டிற்கே இறுதியாகக் கொடுத்த சிறந்த நன்கொடையாகும்."

இங்ஙனம் பாரதப் பேரரசின் முதல்குடியரசுத் தலைவராகிய இராசேந்திரர் ஆற்றிய பேருரைகள் பலவும் நாட்டின் வருங்காலத்தை நன்முறையில் உருவாக்கும் பொன்மொழிக் களஞ்சியங்களாகும்.